sh.ch



# சாவ்கவ்சனிற்கு (SCHAFFHAUSEN) நல்வரவாகுக

புதிதாக குடிவருபவர்களுக்கான ஒரு வழிகாட்டி



## IMPRESSUM:


Herausgeber: Kanton Schaffhausen, Departement des Innern
2. Auflage: 2024
Redaktion: Integres, Integrationsfachstelle für die Region Schaffhausen,
Anlaufstelle für Diskriminierungsschutz und interkulturelle Konflikte
Flavia Brühlmann und Chantal Bründler

Bezugsquellen: Sekretariat Departement des Innern
Mühlentalstr. 105
8200 Schaffhausen
Tel. +41 52 632 74 61 / Email sekretariat.di@ktsh.ch

Integres
Tel.+41 52 624 88 67 / Email info@integres.ch

Gestaltung: Sepp Pircher
Bildquellen: Chantal Bründler: *Seite 12, 16, 21, 23 L/R, 24*
Gino Gallucci: *Seite 39*
profifoto.ch - Michael Kessler: *Seite 31, 37*
SAH Schaffhausen: *Seite 20, 36 L*
Sepp Pircher: *Seite 6 M / R, 8 L, 15 R. 18, 20 L, 28, 30, 32, 33 R, 36 R, 38*
Stadtarchiv Schaffhausen: *Seite* 3, *9, 11, 19, 23 M, 25, 26, 27, 34, 36 M*
VBSH: *Seite 10, 17*
www.parlament.ch: *Seite 6 L*
Wirtschaftsförderung Kanton Schaffhausen, Fotograf Röbi Bösch: *Seite 1, 2, 4, 5, 7, 8 M, 9 R, 13, 14, 15 L, 22, 28, 29, 33, 35, 40*
*(L = Links, M = Mitte, R = Rechts auf der Seite)*
Druck: Druckwerk SH AG, Schweizersbildstrasse 30, Postfach, 8207 Schaffhausen
Gedruckt auf: Refutura blauer Engel + Recycling,matt,ISO-Weisse 100, 100% 100 g/m2

# உள்ளடக்கம்





நல்வரவாகுக! 4
**WILLKOMMEN!** 5
பன்முகத்தன்மையான சுவிஸ் 6
சாவ்கவ்சன் பிரதேசம் 7
அடிப்படைப் பெறுமானம் 9
வந்து சேருதல் மற்றும் தங்கியிருத்தல் 10
புரிந்துகொள்ளல் மற்றும் ஒத்துழைத்து முன்னேறுதல் 11
வசித்தல் 13
இடம்விட்டு இடம் நகர்தல் 16
தொழில் 18
சமூகரீதியான பாதுகாப்பு 20
வரிகள் 22
திருமணம் மற்றும் சேர்ந்துவாழுதல் 23
குடும்பம் மற்றும் பிள்ளைகள் 25
பாடசாலை 28
தொழிற்கல்வி மற்றும் உயர்கல்வி 30
உடல்நலம் 32
ஒய்வுநேரம் மற்றும் கலாச்சாரம் 34
நாளாந்த கவலைகள் 36
அரசியல் வாழ்க்கை 37
**INTEGRES** 39

# நல்வரவாகுக!







சாவ்கவ்சன் மாநிலத்திற்கு இதயபூர்வமாக வரவேற்கிறோம்!

நீங்கள் திறந்த மற்றும் அதேவேளை பாரம்பரியத்தோடு பின்னிப்பிணைந்த எமது மாநிலத்தில் குடியேறியது குறித்து நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். சாவ்கவ்சன் மாநிலம் உங்களுக்கு மிகவும் கவர்ச்சிகரமான வாழ்க்கை- மற்றும் தொழில் நிலைமைகளை வழங்குவதுடன் சிறப்பான போக்குவரத்து இணைப்புகளுடன் அயல் மாநிலங்களான துர்கவ் மற்றும் சூரிச் மற்றும் அதேவேளை யேர்மன் எல்லையை அண்மித்த பிரதேசங்களுடன் நல்ல தொடர்பைக் கொண்டுள்ளது.
நீங்களும் உங்கள் குடும்பமும் இயற்கை நிலப்பரப்பு, றைன் நதியை அண்மித்த பொழுதுபோக்குப் பிரதேசம் மற்றும் றன்டென் பகுதி மற்றும் வைன் தயாரிக்கும் கிளெட்கவ் பகுதியில் மிக விரைவாக ஆரோக்கியத்தை உணர்ந்திருப்பீர்களென நாங்கள் நம்புகின்றோம்.
உலகமயமாக்கல், சமூக மாற்றங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மாற்றங்கள் சமூகமான எங்களுக்கு பெரும் சவால்களை முன்வைக்கின்றன. சக மனிதர்களிடம் பரஸ்பர மரியாதை, சகிப்புத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவை முக்கியமான அடிப்படைப் பெறுமானங்களாக சாவ்கவ்சன் மாநிலத்தின் வரவேற்புக் கலாச்சாரத்துக்கு பங்களிக்கின்றன.
சமூக வாழ்வில் இடம்பெறும் கலாச்சார நிகழ்வுகள் மற்றும் கல்வி வசதிகளில் நீங்கள் பங்குபெறுங்கள். உள்நாட்டினர் மற்றும் குடியேறிய மக்களுக்கு இடையே நடைபெறும் பரஸ்பர உரையாடல்களில் ஊக்கத்துடன் பங்குபெறுங்கள், இதுவே சாவ்கவ்சன் மாநிலத்தை உங்கள் சொந்த நகராக உணரச்செய்யும். இந்தப் பிரசுரம் நீங்கள் வசிக்கும் புதிய மாநிலத்தில் பல பயனுள்ள தகவல்களைச் சேகரிக்க உதவுவதுடன், புதிய வாழ்விடத்தில் நலமாக வாழ வழிவகுக்கும். சாவ்கவ்சன் மாநிலம் குறித்து நீங்கள் அறிந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைவீர்கள் என நான் நம்புவதுடன் அரச பேரவை சார்பில் இதயபூர்வமாக வரவேற்றுக்கொள்கின்றேன்.

Walter Vogelsanger, அரச பேரவை உறுப்பினர்

# WILLKOMMEN!







*Herzlich willkommen im Kanton Schaffhausen!*

*Es freut uns sehr, dass Sie in unseren aufgeschlossenen und gleichzeitig traditionsverbundenen Kanton zugezogen sind.*
*Der Kanton Schaffhausen bietet Ihnen attraktive Lebens- und Arbeitsbedingungen mit hervorragenden Verkehrsverbindungen und guten Beziehungen zu den Nachbarkantonen Thurgau und Zürich sowie dem grenznahen Deutschland.*
*Wir sind sicher, dass Sie und Ihre Familie sich nicht zuletzt auch dank der intakten Naturlandschaft, dem Naherholungsgebiet am Rhein und auf dem Randen sowie dem Weinbaugebiet Klettgau schnell wohl fühlen werden.*
*Die Globalisierung, der gesellschaftliche Wandel und die Umweltveränderungen stellen uns als Gesellschaft vor grosse Herausforderungen. Gegenseitiger Respekt, Toleranz und Offenheit gegenüber den Mitmenschen sind wichtige Grundwerte und tragen auch zur Willkommenskultur des Kantons Schaffhausen bei.*
*Nehmen Sie am gesellschaftlichen Leben mit seinen kulturellen Veranstaltungen und Bildungsangeboten teil. Ein aktiver und reger Austausch zwischen der einheimischen und zugezogenen Bevölkerung trägt massgeblich dazu bei, sich im Kanton Schaffhausen heimisch zu fühlen. Diese Broschüre hilft Ihnen viele nützliche Informationen über Ihren neuen Wohnkanton zu sammeln und unterstützt Sie gut an Ihrem neuen Lebensort anzukommen.*
*Ich wünsche Ihnen beim Erkunden des Kantons Schaffhausen viel Freude und heisse Sie im Namen des Regierungsrates herzlich willkommen.*

*Walter Vogelsanger, Regierungsrat*

# பன்முகத்தன்மையான சுவிஸ்





## பன்முகத்தன்மையான சுவிஸ்

சுவிஸ் ஒரு சிறிய நாடு, இங்கு நான்கு வித்தியாசமான மொழிகளைக் கொண்ட பிரதேசங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசங்களில் நான்கு உத்தியோகபூர்வமான மாநில மொழிகள் பேசப்படுகின்றன:

டொச், பிரெஞ்சு, இத்தாலியம் மற்றும் ரெற்றோறொமானிஸ்.

அத்துடன் இந்த வெவ்வேறு பிரதேசங்களில் நீங்கள் மேலும் அதிகமான அல்லது குறைந்தளவு வித்தியாசமான வாழ்க்கை முறைகளைக் கண்டுகொள்வீர்கள். சுவிஸ் பல்வேறானவர்களால் ஒன்றுசேர்ந்து அமைக்கப்பட்ட நாடு: அது இனரீதியாகவோ அல்லது மொழிரீதியாகவோ அல்லது சமய ரீதியாகவோ ஒன்றாக்கப்பட்டதல்ல. சுவிசின் அரச கட்டமைப்பு கூட்டாட்சி முறையானது என்பதுடன், அது அரசியல் கட்டுமானத்தில் மூன்று பிரிவுகளாக உள்ளது: அவையாவன மத்திய, மாநில மற்றும் நகரங்கள். மத்திய சட்டவாக்கம் சட்டரீதியான அடிப்படை ஒழுங்குகளைத் தீர்மானிப்பதுடன் ஒன்றாகச் சேர்ந்து வாழ்வது குறித்த முக்கிய அடிப்படைத் தத்துவத்தை கவனித்துக் கொள்கிறது. இதுவே மத்திய, மாநில மற்றும் திணைக்களங்களுக்கு இடையேயான செயற்பாடுகளைப் பகிர்ந்தளிப்பதில் பொறுப்பு வகிக்கின்றது.

## மத்திய கூட்டாட்சி

மத்திய கூட்டாட்சி என்பது சுவிஸ் வரையறையின்படி ஒரு தேசிய அரசாகும். வேறுவிதமான பெயரில், பிரதிக்கினையின்படியான கூட்டமைப்பு என அடிக்கடி பாவித்துக்கொள்வர். மத்திய சட்டவாக்கம் எவற்றை அனுமதிக்கின்றதோ, அவைகள் அனைத்திற்கும் மத்திய கூட்டாட்சி பொறுப்பு வகிக்கும். உதாரணமாக நாடு முழுவதுமாக அமுலில் உள்ள சட்ட அமுலாக்கம், வெளிநாட்டு- மற்றும் பாதுகாப்பு அரசியல் கொள்கை அல்லது சுங்கவரி- மற்றும் பண விடயங்களில். மத்திய அரசின் விடயங்களுக்குள் நிச்சயமாக அடங்காத செயற்பாடுகள், அடுத்து கீழ் இருப்பதற்கு பொறுப்பாக விடப்படும்: அதாவது மாநிலங்களுக்கு.

## மாநிலங்கள்

சுவிசில் எல்லாமாக 26 மாநிலங்கள் உள்ளன. மாநிலங்கள், என்பவை பலவேளைகளில் ஸ்ரென்டெ எனவும் அழைக்கப்படுபவை, முன்னைய காலத்தில் நாடுகளாக இருந்தவை, அவை 1848ல் மத்திய கூட்டாட்சியாக ஒன்றுசேர்ந்தவை ஆகும். ஒவ்வொரு மாநிலத்திற்கும் தமக்கென ஒரு சட்டவாக்கம், தமக்கென ஒரு மாநில ஆட்சிமன்றம், ஒரு அமைச்சரவை மற்றும் நீதிமன்றங்கள் உள்ளது.

## நகரங்கள்

ஏனைய அனைத்து மாநிலங்களைப் போன்றே சாவ்கவ்சன் மாநிலமும் நகரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய ஐந்தில் ஒரு நகரங்களுக்கு தமக்கென அரசாட்சி மன்றம் உண்டு. இங்கு மக்கள் முக்கிய விடயங்களின்போது சொந்தவிருப்பில் அல்லது கட்டாயமான சர்வஜன வாக்கெடுப்பின்படி நேரடியாக முடிவெடுக்க முடியும். ஐந்தில் நான்கு சாவ்கவ்சன் நகரங்கள் நேரடி-ஜனநாயக ரீதியாக ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. இங்கு முடிவுகள் நகரசபை ஒன்றுகூடல்களின்போது எடுக்கப்படுகின்றன. மத்திய அரசு மற்றும் மாநிலங்களின் வேண்டுகோளுக்கமைய நகரங்கள் வசிக்கும் நபர்கள் குறித்த பதிவுகளை மேற்கொள்கின்றது. நகரங்களே பாடசாலை- மற்றும் சமூக விடயங்கள், மின்சக்திப் பராமரிப்பு, வீதிக்கட்டமைப்பு மற்றும் நகரத் திட்டமிடல் அல்லது நகராட்சி வரிகள் போன்றவற்றை தீர்மானிக்கின்றன. நகரங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தின் அளவை ஒவ்வொரு மாநிலங்களும் வரையறுத்துக் கொள்கின்றன. ஆகவே இந்த உரிமை வித்தியாசமாக அமைந்து கொள்கின்றது.

- குடியேறுபவர்களுக்கான அரசசெயலர் *(Staatssekretariat für Migration SEM)*: «சுவிசில் நல்வரவாகுக» *SEM* இன் புதிதாக குடியேறியவர்களுக்கான தகவல் கையேடு. பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- *ch.ch:* சுவிஸ் மற்றும் அதன் திணைக்களங்கள் குறித்த விளக்கம். அனைத்து மாநில மொழிகளிலும் அத்துடன் ஆங்கிலத்தில்.
- பிரதிக்கினையின்படியான கூட்டமைப்பின் வெளிநாட்டு அலுவல்களுக்கான திணைக்களம் *(Eidgenössisches Departement für auswärtige Angelegenheiten EDA)* - சுவிற்சலாந்து குறித்தது: மத்திய அரசின் சுவிஸ் குறித்த உத்தியோகபூர்வ தகவல் பக்கம். பல்வேறு குடியேற்றவாசிகளின் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- *SWI swissinfo.ch: SWI swissinfo.ch* பக்கச்சார்பற்ற சுவிஸ் செய்திகளை 10 மொழிகளில் மொழிபெயர்த்து வழங்குகின்றது.

# சாவ்கவ்சன் பிரதேசம்





## சுதந்திரமாக செயற்படும் பிரதேசம்


சாவ்கவ்சனில் வசிக்கும் ஒருவர், இங்குள்ள உயர்தரமான வாழ்க்கைத் தராதரம், அழகான வசிப்பிடங்கள், வீட்டுக்கு முன்பாகவே உள்ள இளைப்பாறும் பிரதேசங்கள் மற்றும் சராசரியான அளவிற்கும் மேலான கலாச்சார- மற்றும் விளையாட்டுத்துறை வாய்ப்புகள் வசதிகளைப் பார்த்து அது குறித்து கணிப்பிட்டுக்கொள்ளலாம். சுவிசின் அதிஉயர் வடக்குப் பகுதியில் அமைந்திருக்கும் மாநிலான சாவ்கவ்சனின் பெரிய பகுதி யேர்மனியால் சூழப்பட்டுள்ளது.185 கி.மீ. நீளமான எல்லையின் 82%, யேர்மன் பாடெ ன்-வூட்டெம்பேர்க் மாநிலத்தைத் தொட்டுநிற்கின்றது. 1740 எல்லைக் கற்கள் மாநிலத்தைச் சுற்றிவர உள்ளன.ஆகவே திணைக்களங்கள் பல வித்தியாசமான படிமுறைகில் திறந்த மனதுடனான மற்றும் உறுதியான தொடர்புகளை அயல் மாநிலங்களோடு பேணுவது மட்டுமில்லாது, அத்துடன் விசேடமாக யேர்மன் அயலவர்களோடும் பேணுகின்றது. இந்த மாநிலம் ஒன்றுடன் ஒன்று பிரிவுபட்ட மூன்று பகுதிக கட்டமைக்கப்பட்டுள்ளது, இவை அனைத்தும் றைன் நதியின் வடக்குப் பக்கமாக உள்ளன. முக்கிய பகுதி சாவ்கவ்சனுக்குப் பக்கமாக அமைந்துள்ள Rheinbiegung மற்றும் Neuhausen am Rheinfall, Reiat- உயர்நிலத்திலிருந்து வளைந்து செல்கின்றது. கிழக்குப் பக்கமாக Steiner Zipfel am Ausfluss des Untersees உள்ளதுடன் தென்மேற்காக மாநிலத்தின் கீழ்ப்பகுதியில் இரு கிராமங்களான Buchberg மற்றும் Rüdlingen அமைந்துள்ளன.

சாவ்கவ்சனைச் சூழவுள்ள நிலப்பரப்பு சுவிசின் நடுநிலப்பரப்பின் எல்லையை அண்டியுள்ளது. மென்மையான குன்றுகளும் ஆற்று நிலங்களும் யூறா மலைத் தொடரைச் சேர்ந்தவையாகவும் இறுதியான உறைபனிக் காலத்தில் இருந்த (Gletscherbewegungen) சாட்சியங்களாகவும் உள்ளன.

நிலப்பரப்பின் படத்தைப் பார்த்தால், அவை பன்முகத்தன்மையாகவும் விசேடமாக றைன் நதியும் அதனது தனித்துவமான ஆற்றுப்படுக்கை நிலப்பரப்பும், பெரிய காட்டுப் பிரதேசமும், நீண்ட விவசாய நிலமும் மற்றும் மிகக் கவனமாகப் பராமரிக்கப்படும் திராட்சைக்கொடி படர்ந்த மலைகளும் நிறைந்துள்ளன.

மாநில நிலப்பரப்பு 298 சதுர கி.மீற்றராக உள்ளது, இது முழு சுவிசின் 0,7% மான நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. ஏறக்குறைய 84'000 மக்கள் இந்த மாநிலத்தின் 26 நகரங்களில் வசிக்கின்றனர், இது சுவிசின் வசிக்கும் முழு சனத்தொகையில் ஏறக்குறைய 1% மாகும். இதன்படி சாவ்கவ்சன் சுவிசின் மிகச் சிறிய மாநிலமாகும்.

► சாவ்கவ்சன் மாநிலம் - நகரப்பக்கங்கள்:
அனைத்து சாவ்கவ்சன் நகரங்களும் ஒரே பார்வையில்.



# அடிப்படைப்பெருமானம்





## வரலாறு

சாவ்கவ்சன் பிரதேசத்தின் இன்றைய குடியேற்றக் கட்டமைப்பானது முன்நாளின் இடை நூற்றாண்டு காலத்தில் அலமானென் குடியேறிய காலத்துடன் ஆரம்பமாகின்றது. 7ம் நூற்றாண்டு காலங்களில் முழு மாநிலப் பிரதேசமும் அலமானென் வாழ்ந்தமைக்கான அறிகுறிகள் இருந்தமைக்கான ஆதாரமாக உள்ளது. இருப்பினும் ஏற்கனவே நன்கு அறியப்பட்ட குடியேற்றமாக உரோமரின் காலத்திலேயே Schleitheim மற்றும் Stein am Rhein இருந்துள்ளது.

1000 மாம் வருடத்தின் பின்னராக ஏற்பட்ட மாற்றங்கள், பொருளாதார வாழ்வுக்காலம் தொடக்கம் அன்றுவரையாக, அனைத்திலும் முக்கியமாக விவசாயத்தில் வளம்பெற்ற பிரதேசம் பெரிதளவில் உள்ளக மாற்றங்களைக் கண்டது. ஆகக் குறைந்தது 11ம் நூற்றாண்டில் றைன் நதியின் பயன்பாட்டை முக்கியமானதெனக் கண்டுகொண்டனர். சாவ்கவ்சன் மற்றும் Stein am Rhein ற்கு நாணயங்கள்- மற்றும் வியாபாரம் நடத்த அனுமதி வழங்கியது விரைவாக சாவ்கவ்சன் நகரை வளர்ச்சியடையச் செய்ததுடன் வியாபாரா செயற்பாடுகளை அதிகரிக்கச் செய்தது. முக்கியமான நதியோடும் வழியை Rheinfall ஆல் தடுத்தபோது, சாவ்கவ்சன் மக்கள் பொருட்களை ஏற்றி இறக்குதல்- மற்றும் போக்குவரத்துத் தொழில்கள் மூலமாக அதற்கான கட்டணங்கள் மற்றும் வரிகளைப் பெற்றுப் பயனடைந்தனர். கிராமச் சூழல் அதிகாரமுடைய சட்டவிதிகள் ஒரு பலமான நகரக் கட்டமைப்பை ஆரம்பிக்க ஏதுவாக இருந்தது.

மத்திம நூற்றாண்டுக் காலத்தில் அதிக வேளைகளில் சாவ்கவ்சன் பெரும் அதிகாரபீடங்களின் போர்முனைகளுக்கு இடையே சிக்கியிருந்தது. எடுத்துக்கூறும் அளவில் 1501ல் சாவ்கவ்சன் சுதந்திரம் பெற்றது என்பதுடன், பிரதிக்கினை எடுத்த கூட்டமைப்புக்காக வடக்கு எல்லையைப் பாதுகாப்பதற்காக, இதன்போது பெருமளவு சிரமத்தின் ஊடாக Munot ஐயும் சேர்த்து பெற்றுக்கொள்ளப்பட்டது, இன்று இதுவே நகரின் அடையாளச் சின்னமாக உள்ளது.

## ஜனநாயக தோன்றுதல்கள்

18ம் நூற்றாண்டின் இறுதிவரை நகரங்களின் பிரதிநிதிகாக நிலப்பிரபுக்களால் நியமிக்கப்பட்டவர்கள் அரசாட்சி செய்தனர். பிரெஞ்சுப் புரட்சியின் பாதிப்புகளால் கிராமங்களில் வாழ்ந்த மக்கள் தமக்கும் நகர மக்கள் போன்று சமஉரிமை மற்றும் சுதந்திரம் தேவை என போராடினர். சாவ்கவ்சன் நகரம் மற்றும் அதேபோன்று 35 தனித்துவமான நகரங்கள், 19ம் நூற்றாண்டில் ஒரு மாநிலமாக உருவாகியது.

19ம் நூற்றாண்டின் ஆரம்பம்வரை சாவ்கவ்சன் மக்களின் முக்கிய தொழிலாக விவசாயம், கைத்தொழில் மற்றும் வியாபாரம் இருந்துள்ளது. இது தொழிற்சாலை மயமாக்கல் காரணமாக, பொருளாதாரத்தை மிக ஆழமான வகையில் கட்டியமைக்க வேண்டிய தேவையால் மாற்றமடைந்தது. சாவ்கவ்சன் 19ம் மற்றும் 20ம் நூற்றாண்டில் ஒரு பெயர்பெற்ற தொழில் நகரமாக வளர்ச்சியடைந்ததுடன், தற்போது பல்வேறு பிரசித்திபெற்ற நிறுவனங்களைக் கொண்டுள்ளது.

## பொருளாதார வளர்ச்சி

1950- மற்றும் 1960ம் -வருடங்களில் இந்தப் பிரதேசம் பொதுவான பொருளாதார வளர்ச்சியால் பயனடைந்தது. முன்பு இருந்த பழமைவாயந்த நிறுவனங்களான Georg Fischer, SIG, IVF மற்றும் வேறு பலவும் வளர்ச்சியடைய, புதிய நிறுவனங்கள் வந்து சேர்ந்து கொண்டன. தொழில் அற்றவர்களாக ஏறக்குறைய எவருமே இருக்கவில்லை. தொழிலாளர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதுடன் அவர்களை வெளிநாட்டிலிருந்து அழைக்க வேண்டியிருந்தது -முற்காலத்தில் அனைத்திலும் முதலாக இத்தாலியில் இருந்து மாநிலத்திற்கு அழைக்க வேண்டியிருந்துது.


1990ம்- வருடங்களில் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினையால், அதிரடியாக தொழிற்சாலை வேலையிடங்களைக் குறைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. சாவ்கவ்சன் தன்னைப் புதிதாக நிலைநிறுத்தியதுடன் தனது பொருளாதாரத்தை மேலும் விரிவாக்கியது. புதிய நிறுவனங்களை நிறுவியதுடன் முன்பிருந்த தொழிலகங்களை மாற்றியமைத்து அவைகளை சிறப்பான செயற்பாட்டை வழங்கக்கூடியவாறு ஊக்குவித்தது. சர்வதேச அளில் செயற்படும் நிறுவனங்கள் சாவ்கவ்சன் மாநிலத்தில் மிகவும் கவர்ச்சிகரமான மற்றும் புதுமையான வணிகத்திற்கு உலகளாவிய ரீதியில் போட்டிபோடக்கூடிய இடமாகக் கண்டுகொண்டன.

1990ம் ஆண்டுகளில் மிகத் தெளிவாக குறைவடைந்த சனத்தொகை ஒரு சில வருடங்கள் தொடக்கம் மீண்டும் உயர்வடைந்து வருகின்றது. மீளவும் பலர் குடியேறுவதற்காக வெளிநாடுகளிலிருந்து வருகின்றனர், பலர் அயல்நாடான யேர்மனியிலிருந்து வருகின்றனர், அதேவேளை உலகத்தில் அனைத்து நாடுகளிலுமிருந்தும் வருகின்றனர்.

- *Allerheiligen* அருங்காட்சியகம் *(Museum zu Allerheiligen)* ஒன்றுசேர்ந்த வரலாறு, அகழ்வாராட்சி, கலை மற்றும் இயற்கைவளம் அனைத்தும் ஒரே கூரைக்குள் விசேடமாக சாவ்கவ்சன் பிரதேசத்தில் உள்ளது. ஒவ்வொரு மாதத்தின் முதலாவது சனிக்கிழமைகளில் பிரவேசம் இலவசமாகும்.
- சாவ்கவ்சன் பொருளாதார ஊக்குவிப்பு *(Wirtschaftsförderung Schaffhausen):* சாவ்கவ்சன் பொருளாதாரப் பிரதேசம் குறித்த தகவல்கள்

# அடிப்படைப்பெறுமானம்








## அடிப்படை உரிமை

சுவிஸ் மற்றும் அத்துடன் சாவ்கவ்சன் மாநிலமும் ஒவ்வொரு தனி நபரின் சுதந்திரம், சட்டங்கள் மற்றும் கடமைகளின் பெறுமானத்தை மதித்துக் கொள்கின்றது. இதற்கு அடிப்படையாக நன்றாக ஒன்றுசேர்ந்து வாழ்வதை நிறுவுவது, ஒருவரை ஒருவர் கவனிப்பது மற்றும் விட்டுக்கொடுப்பது அதேபோன்று ஒரேவிதமான அடிப்படைப் பெறுமதியை ஏற்றுக்கொள்வது. அடிப்படை உரிமைகள் மத்திய சட்டவாக்கத்தில் மற்றும் மாநில சட்டவாக்கத்தில் உறுதிப்பட எழுதப்பட்டுள்ளது. இந்த உரிமை சுவிசின் அனைத்து பெண் மற்றும் ஆண் வசிப்பாளர்களுக்கும், அதாவது அத்துடன் வெளிநாட்டு ஆண்கள் மற்றும் பெண்களுக்கும் உள்ளது.

**சட்டரீதியான சமத்துவம்**

அனைத்து மக்களையும் இந்த நாடு சமமாக நடத்த வேண்டும். அதன் அர்த்தம் என்னவென்றால் எவராவது எந்தப் பாலினமாகவோ அல்லது வயது இருந்தாலோ, எங்கிருந்து வந்திருந்தாலும், எந்த இனம், மொழி, சமயம், சமூக அந்தஸ்து, உலகத்தை பார்வையிடும்முறை, வாழும்முறை அல்லது குறபாடுகளுடன் இருப்பினும் ஒதுக்குதலுக்கு உள்ளாகக்கூடாது.

**சம உரிமை**

ஆண்கள் மற்றும் பெண்களுக்கு குடும்பத்தில், தொழிற்கல்வி மற்றும் தொழிலில் சம உரிமை உள்ளது, ஆண்கள் மற்றும் பெண்களுக்கு ஒரேவிதமான வேலைக்கு சமமான ஊதியம் பெறுதவற்கான உரிமை உள்ளது.

**வாழ்வதற்கான உரிமை மற்றும் தனிப்பட்ட சுதந்திரம் உள்ளது**

ஒவ்வொரு மனிதருக்கும் வாழ்வதற்கு உரிமையுள்ளது. மரணதண்டனை தடைசெய்யப்பட்டுள்ளது. அனைவருக்கும் தனிப்பட்ட சுதந்திரத்தில் உரிமையுள்ளது. இதன் அர்த்தம் என்னவென்றால் எவரும் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடாது மற்றும் அனைவரும் சுதந்திரமாக நடமாட அனுமதியுண்டு.

**தம்பதிகளாவதற்கான உரிமை** ஒவ்வொரு நபரும் 18 வயதிற்கு மேலாக திருமணம் செய்து கொள்ளலாம். **சமய சுதந்திரம்**

ஒவ்வொரு நபரும் தமது சமயத்தை தாமகவே தெரிந்து கொள்ளவும் அதைக் கடைப்பிடிக்கவும் அனுமதியுண்டு. ஒரு சமயக் குழுவில் சேர்ந்து கொள்வதற்கோ அல்லது அதில் உறுப்பினராவதற்கோ எவரும் கட்டாயப்படுத்தப்படக்கூடாது.

**வெளிவாரி-சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சமய ஒன்றிப்புக்கள்:**

சாவ்கவ்சன் மாநிலத்தில், வெளிவாரி-சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சமய ஒன்றிப்புக்களாக மூன்று உள்ளன. அவையாவன திருத்தியமைக்கப்பட்ட எவாங்கலிஸ், உரோமன்-கத்தோலிக்கம் மற்றும் கிறிஸ்ற் கத்தோலிக்க மாநில ஆலயம். இந்த வெளிவாரிசட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டவைகளுக்கு ஒருபக்கத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய உரிமைகள், அதாவது ஆலயவரி போன்றவை உள்ளன, மறுபக்கத்தில் அங்கீகரிக்கப்பட்டது எனும்போது இது மதச் சுதந்திரத்தை அங்கீகரிப்பதுடன் தொடர்பானது, அத்துடன் மனித உரிமைகளை மதிப்பதுடன் நிதித் தொடர்புகளையும் பேணிக்கொள்கின்றது.

**சாவ்கவ்சனில் சமய ஒன்றிப்புக்கள்:**

மூன்று மாநில ஆலயங்களுக்குப் பக்கமாக வேறு பல்வேறு சமயக் ஒன்றிப்புக்களும் உள்ளன: இதில் யூத, இஸ்லாம், பௌத்தம் மற்றும் இந்துமத ஒன்றிப்புக்களும் பாகாய் மற்றும் வேறு பலவும் அடங்கும். இந்த வித்தியாசமான சமய ஒன்றிப்புக்களின் ஆண் மற்றும் பெண் பிரதிநிதிகள் சாவ்கவ்சன் கிறிஸ்து ஆலய செயல்வட்டத்தில் 2006 தொடக்கம் ஒழுங்காக சந்தித்து சமயங்களுக்கு இடையே நட்புரீதியான உரையாடல்களை நடத்தி வருகின்றனர்.

**தனது கருத்தை சுதந்திரமாகக்கூறுவது** (Meinungsfreiheit)

ஒவ்வொரு நபரும் அவரது கருத்தை சுதந்திரமாக ஏற்படுத்திக் கொள்ளவதுடன் சட்டத்துக்கு அமைவான வகையில் சுதந்திரமாக வெளியிடலாம். இந்த உரிமை சூழமைவுக்கு அமைவான விதத்தில் அரசால் கட்டுப்படுத்தப்படலாம். இதற்காக சட்டரீதியான ஒரு அடிப்படைவிதி தேவைப்படும். உங்கள் தனிப்பட்ட உரிமைக்குப் பாதிப்பு ஏற்படுவதாக உணர்வீர்களாயின், உங்கள் கேள்விகளுக்குத் தகுந்த ஆலோசனை அல்லது சட்டரீதியான உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

- சாவ்கவ்சனில் இலவசமான அல்லது குறைந்த கட்டணத்தில் அனைத்து சட்ட விடயங்களுக்குமான சட்டரீதியான ஆலோசனை நிலையங்கள் உள்ளன:
  -தஞ்ச- மற்றும் வெளிநாட்டவர் உரிமை, ஞயுர் சாவ்கவ்சன்
  -மாநில தொழில் அரசசெயலர் சாவ்கவ்சன்
- *Integres* சாவ்கவ்சன் - ஒதுக்குதல்களுக்கான பாதுகாப்பு மற்றும் கலாச்சாரங்களுக்கு இடையே எழும் முரண்பாடுகளுக்கான தொடர்புப்பகுதி: மனிதர்கள் எவராவது தாம் வருகை தந்த நாடு, தோல்நிறம், சமயம் அல்லது வேறு அடையாளங்கள் காரணமாக ஒதுக்குதல்களுக்கு உள்ளானால் அவர்களுக்கான ஆலோசனை நிலையம். இந்த ஆலோசனை இலவசமானது.

**கடமைகள்: இராணுவச்சேவைக் கடமை மற்றும் வாக்களிக்கும் கடமை**

சுவிஸ் ஆண் மற்றும் பெண் பிரஜைகளுக்கு அடிப்படைச் சட்டத்துடன் சேர்ந்த கடமைகளும் உண்டு. அதாவது சுவிஸ் மக்கள் அறிந்துள்படி (Milizarmee) எனப்படும் கட்டாய இராணுவசேவை செய்யும் கடமை. இதில் அனைத்து சுவிஸ் ஆண்களும் சேர்ந்து கொள்வர்.

வேறொரு விசேட கடமையை சாவ்கவ்சன் மாநிலம் கொண்டுள்ளது. இங்கு அனைத்துப் ஆண், பெண் பிரஜைகளும் தேர்தலில் வாக்களிக்க மற்றும் தேர்ந்தெடுக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

# வருகைதரல் மற்றும் தங்கியிருத்தல்






## தங்கியிருத்தல் குறித்த ஒழுங்குவிதிகள்

சுவிசில் தங்கியிருத்தல் பல வித்தியாசமான அனுமதிகளுடன் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இதில் முக்கியமானவை குறுகியாலம்-தங்கியிருத்தல் (1 வருடத்திற்குக் குறைவாக), தங்கியிருக்கும் அனுமதி- (காலவரையறையுடன்) மற்றும் நிரந்தர அனுமதி (காலவரையின்றி). இதை வழங்குவதற்கு நிபந்தனைகளாக தங்கியிருக்கும் நோக்கம் மற்றும் எந்தப் பிரஜாவுரிமையைக் கொண்டுள்ளீர்கள் என்பதில் தங்கியிருக்கும். விசேடமாக அந்த நபர் EU-/EFTA- எனும் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்தா, ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டமைப்பு நாடுகளிலிருந்தா அல்லது ஒரு மூன்றாம் நாட்டிலிருந்து வந்தவரா என்பதில் வித்தியாசப்படும். இதற்கான பதிவுகளை நீங்கள் வசிக்கும் நகர அலுவலகத்தில் உள்ள Einwohnerkontrolle ல் செய்து கொள்ளலாம். நீங்கள் ஏற்கனவே வேறொரு சாவ்கவ்சன் நகரத்தில் வசித்திருந்தாலும், நேரடியாகச் சென்று Einwohnerkontrolle ல் பதிவுசெய்யுங்கள்.

**முக்கிய வெளிநாட்டவர் அட்டைகளாவன:**

| | |
|---|---|
| அடையாள அட்டை B: | தங்கியிருப்பவர்/வள் |
| அடையாள அட்டை C: | நிரந்தரமாக வசிப்பவர் |
| அடையாள அட்டை L: | குறுகியகாலம் தங்கியிருப்பவர்/ வள் |
| அடையாள அட்டை G: | எல்லை கடப்பவர்/வள் |
| அடையாள அட்டை N: | தஞ்சம் கோருபவர் |
| அடையாள அட்டை F: | தற்காலிகமாக பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டவர்/வள் |
| அடையாள அட்டை S: | பாதுகாப்புத் தேவைப்படுபவர் |

## குடியேறுபவர்களுக்கான திணைக்களம் மற்றும் கடவுச்சீட்டு அலுவலகம்

சாவ்கவ்சன் மாநிலத்தின் குடியேறுபவர்களுக்கான திணைக்களம் மற்றும் கடவுச்சீட்டு அலுவலகம், கூட்டரசின் வெளிநாட்டவர்களுக்கான சட்டங்களை அமுல்படுத்தும் பகுதிக்குப் பொறுப்பு வகிக்கின்றது. உதாரணமாக உள்பயணிப்பது, தங்கும் அனுமதிகள் மற்றும் குடும்பத்தை அழைப்பது போன்றவைகளுக்கான தகவல்களை இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

## குடும்பத்தைப் பின்பு அழைப்பது

EU/EFTA- நாட்டுப் பிரஜைகளுக்கு சட்டரீதியாக அவர்களுக்கு என்ன வதிவிட அனுமதியுள்ளதோ அதுகுறித்து எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி தமது குடும்பத்துடன் பின்பு சேர்ந்து கொள்ளலாம். குடும்ப உறுப்பினர்கள் என்பது தம்பதிகள், பெற்றோர் மற்றும் பிள்ளைகள், இவர்கள் இதுவரை 21வயதை அடையாதவர்கள் அல்லது அவர்களது வாழ்க்கைச் செலவை தானே பொறுப்பவராக இருக்க வேண்டும். ஒரு நபர் EU/EFTA நாடுகளுக்கு வெளியிலிருந்து வந்திருந்தால் சட்டவிதிகள் விதிக்கும் நிபந்தனைகளைப் பொறுத்து உங்கள் நகர் அலுவலகத்திலுள்ள Einwohnerkontrolle ல் குடும்பத்தை ஒன்றுசேர்ப்பதற்காக (தம்பதிகள் மற்றும் திருமணமாகாத பிள்ளைகள் 18வயதிற்கு குறைவாக இருந்தால்) முயற்சி செய்வதற்காக விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம். இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், குடும்பம் ஒன்றுசேர்வது திணைக்களம் வழங்கும் காலவரையறைக்குள் நடைபெற வேண்டும் என்பதாகும். இதுகுறித்து விபரமான தகவல்களை மற்றும் இதற்காக முயற்சிசெய்யும் விண்ணப்பப் படிவங்களை மாநில குடிவரவுத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- குடியேறுபவர்களுக்கான அரச செயலர் *(Staatssekretariat für Migration SEM):* சுவிசிற்குள் பயணித்தல் மற்றும் தங்கியிருத்தல், தஞ்சம்கோருதல் மற்றும் சுவிசில் தொழில்புரிதல் குறித்த விபரமான தகவல்களை இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
- குடியிருப்பாளர்களைப் பரிசீலிக்கும் திணைக்களம்: தொடர்புத்தரவுகள் மற்றும் திறந்திருக்கும் நேரங்கள் சாவ்கவ்சன் மாநில நகரங்களுக்கான இணையத்தளத்தில் உள்ளது.
- சாவ்கவ்சன் மாநிலம் - தொழில் திணைக்களம் *(Arbeitsamt):* தொழில் அனுமதி குறித்த தகவல்கள்,தொழிலாளர்கள் மற்றும் தொழில் வழங்குனர்களுக்கு விபரங்களை வழங்குவது மற்றும் பதிவு நடைமுறைகள்.

## முதல் தகவல்கள்

மாநிலத்திற்கு புதிதாக குடியேறும் நபர்களுக்கு சுவிசில் மற்றும் சாவ்கவ்சன் மாநிலத்தில் வாழ்க்கை- மற்றும் தொழில் நிபந்தனைகள் குறித்து அறியத்தருவதுடன் ஆலோசனையும் வழங்கப்படும். இங்கு தகவல் பத்திரங்கள் வழங்கப்படுவதுடன் குடியிருப்பாளர்களைப் பரிசீலிக்கும் திணைக்களம் பதிவுத்திணைக்களத்தில் பதிவுசெய்யும்போது நடைமுறை விதிகள் குறித்து அறியத்தரும். இதற்கும் மேலதிகமாக ஒத்துழைத்து முன்னேறும் (Integres) எனும் நிலையத்துடன் ஒரு இலவசமான கலந்துரையாடலை மேற்கொள்ள வசதிசெய்து கொடுக்கும்.

# புரிந்துகொள்ளுதல் மற்றும் ஒத்துழைத்து முன்னேற்றுதல்





## ஒத்துழைத்து முன்னேற்றும் அரசியல் மற்றும் ஆலோசனை

சாவ்கவ்சன் மாநில அரசமன்றம் மற்றும் சாவ்கவ்சன் நகர நிர்வாகம் 2003ல் உயர்தரமான ஒத்துழைத்து முன்னேற்றும் அரசியல் வழிகாட்டுதலை நிறைவேற்றியது. இந்த வழிகாட்டுதல், குடியேறும் மக்கள் தமது தொழில், சமூக, கலாச்சார, மொழி மற்றும் நாளாந்த அரசியலில் எவ்வாறு தம்மை முன்னேற்ற முடியும் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இதன்மூலம் சாவ்கவ்சன் மாநிலம் மற்றும் நகரம் சாவ்கவ்சன் பிரதேசத்தில் ஒத்துழைத்து முன்னேற்றும் சந்தர்ப்பங்களை திறமையாக்குவதுடன் ஒன்றுசேர்ந்து வாழ்வதை ஊக்குவிக்கவும் துடிப்புடன் செயலாற்றிவருகின்றது.

Integres என்பது சாவ்கவ்சன் பிரதேசத்தின் ஒத்துழைத்து முன்னேற்றும் துறைசார் நிலையமாகும். இங்கு தனிநபர்கள் மட்டுமல்லாது நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் மற்றும் அமைப்புகள் போன்றவையும், அவர்களுக்கு ஏதாவது தேவைகள் இருப்பின் அல்லது ஒத்துழைத்து முன்னேற்றுதல் மற்றும் குடிவரவு குறித்த கேள்விகள் இருப்பின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வார்கள்.

► *Integres* – ஷாவ்கவ்சன் பிரதேசத்தின் ஒத்துழைத்து முன்னேற்றும் துறைசார் நிலையம்: ஒத்துழைத்து முன்னேற்றுதல் மற்றும் குடிவரவு குறித்த கேள்விகளுக்கு இலவசமாக ஆலோசனைகளை வழங்குகின்றது.

► உயர்தரமாக ஒத்துழைத்து முன்னேறுவதற்தகான அரசியல் வழிகாட்டுதல் *(Leitlinien für eine kohärente Integrationspolitik)*
*Integres* – இன் இணையத்தளத்தில் நீங்கள் காணலாம்.

## ஒத்துழைத்து முன்னேற்றும் அளவுகோல்

வெளிநாட்டவர்கள்- மற்றும் ஒத்துழைத்து முன்னேற்றும் சட்டம் (AIG) ஒத்துழைத்து முன்னேற்றும் அளவுகோலைத் தீர்மானிப்பதுடன் வெளிநாட்டு ஆண்கள் மற்றும் பெண்களின் ஒத்துழைத்து முன்னேற்றும் தடைகளைத் தவிர்ப்பதன் மூலம் அவர்களின் ஒத்துழைத்து முன்னேற்றும் விடயத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதேவேளை ஒத்துழைத்து முன்னேறுவதில் சொந்தப் பொறுப்புணர்வைக் கட்டாயமாகக் கோருகின்றது. இதில் ஒரு கொள்கை உள்ளது: வெளிநாட்டுப் பிரஜாவுரிமை உடைய நபர்கள் எவ்வளவு உரிமைகளைப் பெறுகின்றார்களோ, அவ்வளவு திறமையாக ஒத்துழைத்து முன்னேறுவார்கள். இதன் அர்த்தம், மொழியறிவு விசேடமாக தங்குமிட அனுமதியுடன் நெருக்கமாக இணைந்துள்ளது. பின்வரும் ஒத்துழைத்து முன்னேற்றும் அளவுகோல்கள் AIG இல் கடைப்பிடிக்கப்படுகின்றன:

- மொழியறிவைப் பெற்றுக்கொள்ளல்
- பொதுப்பாதுகாப்பைக் கவனித்தல் மற்றும் ஒழுங்கைப் பேணுதல்
- கூட்டரசின் சட்டவாக்கத்தை மதித்தல் மற்றும் அதன் பெறுமானங்களைப் பேணுதல்
- பொருளாதார வாழ்வில் பங்கேற்றல் அல்லது உயர்கல்வியைப் பெறல்

ஒத்துழைத்து முன்னேற்றும் அளவுகோலை பூர்த்திசெய்யாவிட்டால், வதிவிட அனுமதி நீடிக்கப்படாது விடப்படலாம் அல்லது திரும்பப் பெறப்படலாம். நிரந்தர அனுமதியும் திரும்பப் பெறப்படலாம் அல்லது வதிவிட அனுமதியாகக் தரம் குறைக்கப்படலாம். இதுபோன்றே குடும்ப ஒன்றுசேர்தல் மறுக்கப்படலாம் அல்லது பிரஜாவுரிமை பெறுதல் நிராகரிக்கப்படலாம்.

## பொதுவான மொழியாக டொச்

சுவிஸ் ஒரு பல் மொழி பேசும் நாடு. நன்கு திறமையுடன் செயற்படும் தொடர்பாடல் என்பதே ஒத்துழைத்து முன்னேற்றுவதற்கான திறவுகோலாகும். தொடர்பாடல் என்பது, விளங்கிக்கொள்வது மற்றும் விளங்கச்செய்வது. பொதுவான ஒரு மொழி என்பது இதற்கு அத்திவாரமாக அமைகிறது. சாவ்கவ்சன் மாநிலத்தில் டொச் பேசப்படுகின்றது. உத்தியோகபூர்வ மொழி கொக்டொச். நாளாந்த வாழ்வில் சுவிஸ் டொச் பேச்சுவழக்காகப் பாவிக்கப்படுகின்றது. நாளாந்த வாழ்வில் மற்றும் தொழில் உலகில் டொச்சை விளங்கிக்கொள்வது மற்றும் கதைப்பது ஒரு நிபந்தனையாகும். ஒன்றாகச் சேர்ந்து வாழ்வதற்கு பொதுவான மொழி ஒரு முக்கிய அடிப்படையாக அமைகின்றது.

## டொச் கற்பது

சாவ்கவ்சன் பிரதேசத்தில் பல எண்ணிக்கையான டொச் வகுப்புகள் உள்ளன. இதற்கான வசதிகள் விரிவாக உள்ளன. வழமையான டொச் வகுப்புகளுடன், பிள்ளைகள் பராமரிப்புடனான தாய்மாருக்கான வகுப்பு, இளையோருக்கான மற்றும் இளம் வயதான பெரியோர்களுக்கான தொழிற்கல்வி நோக்கத்துடன் அல்லது பிள்ளைகள் மற்றும் வேறு குழுவினருக்கான வசதிகள். பொருத்தமான வசதிகளை தேர்ந்தெடுப்பதற்கு Integres (இன்ரெகிறெஸ்) உங்களுக்கு ஆலோசனை வழங்கும்.

► *Integres* – டொச்பாடத் திட்டங்கள் மற்றும் ஒத்துழைத்து முன்னேற்றும் வசதிகள்: சாவ்கவ்சன் பிரதேசத்தில் டொச்பாடத் திட்டங்கள் மற்றும் ஒத்துழைத்து முன்னேற்றும் வசதிகள் குறித்த தகவல்கள் மற்றும் ஆலோசனைகள்.

# புரிந்துகொள்ளுதல் மற்றும் ஒத்துழைத்து முன்னேற்றுதல்





## மொழிச்சான்று மற்றும் மொழிச்சான்றிதழ்கள்

சுவிசில் வித்தியாசமான வதிவிட அனுமதிகளைப் பெறுவதற்கு குறிப்பிட்ட மொழியறிவு அதனுடன் இணைந்துள்ளது. அத்துடன் தொழிற்கல்வி- மற்றும் தொடர்ந்து கற்பது அல்லது தொழில்புரிவதற்கு தகுந்த மொழியறிவு தேவைப்படுகின்றது. இதை ஒரு மொழிச சான்றிதழ் மூலம் அத்தாட்சிப்படுத்த வேண்டும். இதுகுறித்த ஒரு பிரசுரத்தை Integres இன் இணையத்தளத்தில் காணலாம்.

- *fide – Deutsch in der Schweiz – lernen, lehren, beurteilen:* கனைந உடன் மொழித்திறனை சுவிஸ் நாளாந்த வாழ்வில் ஊக்குவித்தல் மற்றும் மதிப்பிடல் நடுமையமாக விளங்குகின்றது. கனைந மொழிகளுக்கான பொதுவான ஐரோப்பிய கட்டமைப்பின் *(GER)* அடிப்படையிலானது மற்றும் ஆண் பெண் குடியேற்றவாசிகள் குறிப்பிட்ட வாழ்க்கை சூழல்களில் மொழியியல் ரீதியாக சமாளிப்பதை நோக்காகக் கொண்டுள்ளது.
- குடியேறுபவர்களுக்கான அரசசெயலர் *(Staatssekretariat für Migration SEM)* –மொழிச் சான்றிதழ்: அங்கீகரிக்கப்பட்ட மொழிச்சான்றிதழ்களின் பட்டியல். இந்தப் பட்டியலில் உள்ள அனைத்து மொழிச்சான்றிதழ்களும், வதிவிட அனுமதி (டீ)இ நிரந்தர வதிவிட அனுமதி (ஊ) மற்றும் பிரஜாவுரிமை பெறுவதற்கு செல்லுபடியாகும்:

## கலாச்சாரங்களுக்கு இடையான புரிந்துகொள்ளல்

நன்கு சேர்ந்து செயற்படுவதற்கு ஒன்றுசேர்ந்து கலந்துரையாடுதல் அடிப்படையான நிபந்தனையாகும். கலாச்சாரங்களுக்கிடையேயான மொழிபெயர்ப்பு என்பது ஒரு வார்த்தையை மொழிபெயர்ப்பதற்கும் மேலாகச் சென்றுகொள்கின்றது. பல வித்தியாசமான நாடுகள், கலாச்சாரங்களிலிருந்து வந்திருப்பினும் பெறுமானங்களை மதிப்பிடுவதற்கும், ஒரு நிகழ்வை தமது சொந்தப் பார்வையில் புரிந்து கொள்வதற்கும் இது சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகின்றது. இதனூாக பெறப்பட்ட பாதுகாப்பு, இதில் பங்குபெறும் அனைத்து நபர்களும் திறமையுடன் செயலாற்றும் நிலையை அதிகரிப்பதுடன் தோழமையுடன் செயலாற்றும் தீர்மானங்களுக்கு வழிகாட்டி அதை இலகுவாக்குகின்றது. துறைசார் நிலையமான Derman தொடர்பு களை ஏற்படுத்துவதுடன்

மொழிபெயர்ப்பு, தொலைபேசியில் மொழிபெயர்ப்பு, ஆதரவுவழங்கல்- மற்றும் மொழிபெயர்ப்புச்சேவைகள் மற்றும் நிபுணத்துவமான வகையில் ஈடுபடுவதற்கு அரவணைப்பு வழங்குகின்றது. இந்தத் துறைசார்நிலையத்தை திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம் அல்லது மின்னஞ்சல் மற்றும் இணையத்தள வேண்டுகோள் படிவம் ஊடாக தொடர்புகொள்ளலாம். திறந்திருக்கும் இந்த நேரங்கள் தவிர்ந்த ஏனைய வேளைகளில் வருடத்தில் 365 நாட்களும் எந்த நேரத்திலும் தஞ்ச அமைப்பு சூரிச் (யழண) இன் தொலைபேசி மொழிபெயர்ப்புச்சேவை ஒருசில நிமிடங்களுக்குள் துறைசார் மொழிபெயர்ப்பாளர்களை 50க்கு மேற்பட்ட மொழிகளில் வழங்குகின்றது.

- *SAH Schaffhausen* –மொழிபெயர்த்தல்: தொடர்புபடுத்துவது மற்றும் தொழிற்கல்வி வழங்கல் பல்கலாச்சார மொழிபெயர்ப்பு மற்றும் குறிப்பிட்ட இடத்துக்கு அழைத்துச்செல்லல், தொலைபேசி ஊடாக அல்லது எழுத்து வடிவமாக.
- தொலைபேசி மொழிபெயர்ப்புச்சேவை *aoz:* மொழிபெயர்ப்பாளர்களைத் தொடர்புபடுத்தல் வருடத்தின் *365* நாட்களும், *24* மணித்தியாலங்களும், பின்வரும் இலக்கத்தில் *0842 442 442.*

## தகவல்கள் புரிந்துகொள்வதை இலகுவாக்குகின்றது

சாவ்கவ்சன் மாநிலம் குறித்த மிக அதிகமான தகவல்களை இணையத்தளங்களில் அல்லது ஊடகங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். விசேடமாக பிரதேச ரீதியான பத்திரிகைகள் உங்களுக்கு இந்தப் பிரதேசத்தில் வாழ்வது குறித்து விபரங்களை வழங்கும். நீங்கள் இவைகளில் தொழிலிட மற்றும் வீட்டு விளம்பரங்களை, நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்பு, அதேபோன்று தேவைப்படும் முகவரி-களைக் காணலாம்.

சாவ்கவ்சன் மாநிலம் மற்றும் நகரங்களின் இணையத்தளத்தில் பிரதேசத்தின் முக்கிய நிகழ்வுகள் குறித்த தகவல்களைக் காணலாம்.

### பிரதேசரீதியான ஊடகங்கள்

- **சாவ்கவ்சனின் பத்திரிகைகள்:**
  *Klettgauer Bote, Schaffhauser Bock, Schaffhauser AZ*
  *Schaffhauser Nachrichten, Steiner Anzeiger, Thaynger Anzeiger*
- **பிரதேசரீதியான வானொலிகள்:**
  *Radio Munot. Radio Rasa, Radio Top – Schaffhausen*
  *Schweizer Radio SRF – Regionaljournal, Zürich/Schaffhausen*
- **பிரதேசரீதியான தொலைக்காட்சிகள்:**
  *Schaffhauser Fernsehen, Tele D, Tele Top News Schaffhausen*
- **இணையத்தள ஊடகங்கள் *schaffhausen.ch*:** கலாச்சாரம், பொழுதுபோக்கு, தொழில், வீட்டுவசதி மற்றும் மேலும் பல்வேறு தகவல்கள்.

# வசித்தல்







## ஒரு வீட்டை தேடிக்கொள்ளல்

ஒரு வீட்டைத் தேடிக்கொள்வது – அதாவது வாடைக்கோ அல்லது சொந்தமாக வாங்குவதற்கோ – பின்வரும் நடைமுறைகளை பரிசோதித்துக்கொள்ள வேண்டும்:

- நகரப் பத்திரிகைகளில் வரும் விளம்பரங்களை வாசித்த கொள்ளல்
- வீடுகள் வெறுமையாவது குறித்து தெரிந்தவர்களிடம் கேட்டறிந்து கொள்ளல்
- நீங்களாவே வீடு வசதி செய்துகொடுக்கும் அமைப்பைத் தொடர்புகொள்ளல்
- இணையத்தளத்தில் பல எண்ணிக்கையான வீட்டு முகவர்களின் விளம்பரங்களைத் தொடர்பு கொண்டு ஆலோசனை கேட்டல்.

► *schaffhausen.ch:* பிரதேசரீதியான தகவல்களுடன் மேலதிகமாக வீடு எடுப்பதற்கான வாய்ப்புகள்.

## வாடகை

எவராவது ஒரு வீட்டைப் பெற விரும்பினால், முதலில் ஒரு விண்ணப்பப்படிவத்தை நிரப்புவது வழக்கமாகும். இதில் உதாரக வயது, குடும்பநிலை, தொழில், பிள்ளைகள், வதிவிட அனுமதி விபரம், தொழில் வழங்குனர், ஊதியம், வீட்டுப் பிராணிகள் போன்றவைகளைக் குறிப்பிட வேண்டும். தனது வீட்டுவாடகையைக் கட்ட முடியும் என்பதை ஒருவர், திணைக்களப் பதிவு இடாப்பிலிருந்து பெறப்படும் பிரதி மூலமாக உறுதிப்படுத்துதல் அவசியமாகும். இந்தப் பத்திரத்தை சாவ்கவ்சன் மாநில Betreibungsamt ல் பெற்றுக்கொள்ளலாம் அல்லது நீங்கள் முன்பு வசித்த நகரத்தில் (சாவ்கவ்சன் மாநிலத்திற்கு வெளியாக).

அதிக வேளைகளில் வாடகை ஒப்பந்தத்தில் பொதுவான நிபந்தனைகளும் வீட்டு ஒழுங்குகளும் குறிப்பிடப்பட்டிருக்கும். வாடகைக்காரர் / காரி அதிக வேளைகளில் வீட்டுக்கு வருவதற்கு முன்பாக ஒரு முற்பணத்தைச் (கட்டுப்பணமாக) செலுத்த வேண்டும், இந்தப் பணம் வீட்டை மீள ஒப்படைக்கும்போது வட்டியுடன் திரும்பவும் வழங்கப்படும். இதற்குப் பதிலாக சில வழங்குனர்கள் உள்ளனர், அவர்கள் வருட முற்பணத்துக்கு பணமாகப் பெறாமல் அதற்குப் பொறுப்புக்கடிதம் பெற்றுக்கொள்வார்கள். இதன்மூலம் வாடகை நடைமுறையின்போது பணம் தடுக்கப்பட்டிருக்காது. வீட்டுவாடகையை வழமையாக மாதத் தொடக்கத்தில் செலுத்த வேண்டும். வீட்டுவாடகையை விடவும் மேலதிகச் செலவுகளாக (சூடாக்கி, சுடுதண்ணீர் போன்றவைகள்) செலுத்த வேண்டும். ஒப்பந்தத்தில் வேறு மேலதிக செலவுகள் குறித்துக் குறிப்பிடப்படாவிட்டால், அந்தச் செலவுகள் குறித்து வீட்டை வாடகைக்குப் பெறும்போது விளக்கமாக நீங்கள் கேட்டறிந்து கொள்ளுங்கள்.

► வாடகையாளர் சங்கம் சாவ்கவ்சன் மாநிலம் *(Mieterverband Kanton Schaffhausen):* வாடகைவீடு குறித்த கேள்விகளுக்கு சட்ட ஆலோசனை. பலவேறு விடயங்கள் குறித்தும் பிரயோசனமான பிரசுரங்கள், உதாரணமாக வாடகைக்கு மேலான செலவுகள். இதன் உறுப்பினர்களுக்கு ஆலோசனை இலவசம், இதில் சேர்ந்தால் உடனடியாக செல்லுபடியாக்க முடியும்.

► சாவ்கவ்சன் வாடகைப் பொருட்கள் சமரசம் செய்யும் நிலையம் *(Schlichtungsstelle für Mietsachen Schaffhausen):* வீடு- மற்றும் வியாபார அறைகள் வாடகை மற்றும் குத்தகைக்கு பெற்றபின் ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்க்கும் சமரசத் திணைக்களம்.

► -பறிமுதல் செய்யும்- மற்றும் நட்டத்தில் மூடுதலுக்குப் பொறுப்பான சாவ்கவ்சன் மாநிலத் திணைக்களம். *(Betreibungs- und Konkursamt):* பறிமுதல் பதிவுஇடாப்பிலிருந்து வெளியேற இணையவழி ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

## கட்டமைப்புவசதிகள் (Infrastruktur)

தொலைபேசி, இணையவலைத் தொடர்பு மற்றும் கேபிள்-தொலைக்காட்சிகளுக்கு பலவேறு வழங்குனர்கள் உள்ளனர். எந்த வசதியை பாவிக்கப்போகின்றீர்கள் என்பது, நீங்கள் வசிக்கும் பிரதேசம் அல்லது நீங்கள் எந்த நகரத்தில் வசிக்கின்றீர்கள் என்பதில் தங்கியிருக்கும். வசதிகள் மற்றும் கட்டணங்கள் வித்தியாசப்படும், ஒப்பிட்டுப் பார்த்தல் இலாபகரமானது. எவராவது ஒரு சற்றலைற் சட்டியைப் பொருத்த விரும்பினால், முதலில் வீட்டுச் சொந்தக்காரரிடம் கேட்கவும் அல்லது ஆண் அல்லது பெண் அயலார்களிடம் கேட்டறிந்து கொள்ளவும். பொதுவான இணையத்தள வசதி உதாரணமாக சாவ்கவ்சன் பொது நூல்நிலையத்தில் உள்ளது. மின் இணைப்பு 230 வோல்ட் ஆகும். மின்சாரத்தில் இணைப்பதற்கான (யுனயிவநசகளை) அதற்கான கடைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

## வீட்டுப் பொருட்கள் - மற்றும் ஏற்படுத்தும் சேதங்களுக்கான காப்புறுதி

வீட்டுப் பொருட்கள்- மற்றும் ஏற்படுத்தும் சேதங்களுக்கான காப்புறுதியை செய்துகொள்ளுமாறு பரிந்துரைக்கின்றோம். சில வீட்டு வாடகை ஒப்பந்தத்தின்போது இது கட்டாயமாக செய்யுமாறு கேட்கப்படுகின்றது. பல்வேறான பாதிப்புகளுக்கு இந்தக் காப்புறுதிகள் பாதுகாப்பு வழங்குகின்றன. உதாரணமாக தண்ணீர்த் தொட்டி நிரம்பி வழிந்ததால் தண்ணீரால் ஏற்படும் பாதிப்பு அல்லது முகம் கழுவும் தொட்டியில் ஒரு வெடிப்பு ஏற்பட்டால்.

► வீட்டு வசதிகளுக்குப் பொறுப்பான மத்திய அமைச்சகம் *(Bundesamt für Wohnungswesen BWO)* - «சுவிசில் வசிப்பது»: வசிப்பது குறித்த பல்வேறு முக்கிய தகவல்களைக் கொண்ட தகவல்பத்திரம். வித்தியாசமான மொழிகளில் பெற்றுக்கொள்ளலாம்.





## பல குடும்பங்கள் வாழும் வீட்டில் ஒன்றுசேர்ந்து வசித்தல்

ஒரு வாடகை வீட்டில் ஒன்றுசேர்ந்து வாழ்வது நன்கு செயற்பட, அனைத்து ஆண் மற்றும் பெண் வாடகைக் குடியிருப்பாளர்களும் ஒருவர் ஒருவரில் கட்டாயமாக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். வீட்டு ஒழுங்குகளில் இதுகுறித்து அதிகளவில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**அமைதி நேரங்கள்**

இரவு அமைதி வழமையாக 22 மணியிலிருந்து காலை 7 மணிவரையாகவும், மதிய அமைதி 12 மணி தொடக்கம் 13 மணி வரையாகவும் இருக்கும். அத்துடன் ஞாயிறு- மற்றும் விடுமுறை நாட்களில் சத்தத்தைத் தவிர்க்க வேண்டும். அடிப்படையாக தொலைக்காட்சி- மற்றும் ஒலிக் கருவிகளுக்கு வீட்டினுள் அறைகளில் கேட்பதற்குத் தகுந்தாற்போல் ஒலியின் அளவை வைத்துக் கொள்ள வேண்டும். எவர் ஒரு நிகழ்வைக் கொண்டாட விரும்புகிறாரோ, அவர் தனது அயலவர்களுக்கு அது குறித்து முன்பாகவே அறிவித்துக் கொள்வது சிறப்பானது.

**ஒன்றுசேர்ந்து பாவிக்கும் இடங்கள்**

உள்நுழையும் வாசல், படிக்கட்டு, உடுப்புத் தோய்க்கும் அறை, பொருட்கள் வைக்கும் இடங்கள் போன்றவை அனைத்து வாடகைக் குடியிருப்பாளர்களுக்கும் சொந்தமானது. இப்படியான பொதுவாகப் பாவிக்கும் இடங்களை தமது சொந்தப் பொருட்களை வைப்பதற்கு மட்டும் பாவிக்காது அதன் சுத்தத்தையும் கவனத்திற் கொள்வது முக்கியமானதாகும். பல வீடுகளில் யார் எந்த நாளில் உடுப்புத் தோய்க்கும் அறையைப் பாவிப்பதென்பது வேறாக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும். அதிகமாக படிக்கட்டுகளில் அல்லது பாரம்தூக்கும் லிப்ற்களில் மற்றும் பொதுவாகப் பாவிக்கும் இடங்களில் புகைப்பது தடைசெய்யப்பட்டிருக்கும்.

**பிரச்சினைகள் ஏதும் ஏற்பட்டால்**

ஏதாவது உடைந்தால், இல்லப் பொறுப்பாளரை அல்லது வீட்டுச் சொந்தக்காரரை.˙.வீட்டுக்குப் பொறுப்பான நிறுவனத்தை தொடர்புகொள்ள வேண்டும். விசேடமாக பெரிய வீடுகளில் இல்லப் பொறுப்பாளர் சிறிய திருத்த வேலைகளுக்கும், அத்துடன் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புகளுக்கும் பொறுப்பு வகிப்பார். சிறிய திருத்த வேலைகள் அல்லது துப்பரவாக்குதல்கள் வாடகையாளர் அல்லது வாடகையாளி யால் சொந்தமாக செய்யப்படுவதுடன் அவர்களே செலவைப் பொறுப்பேற்க வேண்டும். உதாரணமாக காற்றை வெளியேற்றும் பில்ரர், அல்லது வேகவைக்கும் அடுப்பில் ஒரு தட்டு அல்லது குளிக்கும் தண்ணீர் வரும் குழாயை மாற்ற வேண்டியிருந்தால் அவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

அயலவர்களுடன் பிரச்சினை ஏற்பட்ட அவர்களுடன் பேசித் தீர்க்க முடியாத நிலை ஏற்பட்டால், நீங்கள் வீட்டுப் பராமரிப்பாளருடன் பேசிக் கொள்ளலாம் அல்லது உங்கள் நிர்வாகப் பொறுப்பாளரைத் தொடர்பு கொள்ள வேண்டும். தற்சமயம் தீர்வுகாண முடியாது போனால், நீங்கள் வாடகைப் பொருட்கள் சமரசம் செய்யும் நிலையத்தை அல்லது வாடகையாளர் சங்கத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்:

## வீட்டை சொந்தமாக வாங்குதல்

வெளிநாட்டு நபர்கள் வீடு கட்டும் நிலத்தை வாங்குவது மற்றும் வீட்டைச் சொந்தமாக வாங்கிக் கொள்வது ஒரு சில கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது. நீங்கள் வாழ்வதற்கு ஒரு வீட்டை சொந்தமாக வாங்கிக் கொள்வதற்கு எவ்வித அனுமதியும் தேவையில்லை. காணிகளை அல்லது சொந்தமாக வீடுகளை வாங்குவதற்கான நிபந்தனைகளை அவதானிக்க வேண்டும், இது குறித்து மாநில காணிப் பதிவுத் திணைக்களம் அல்லது உங்கள் வீட்டு விற்பனைத் தரகர்கள் அறியத் தருவார்கள். வீட்டை சொந்தமாக்கிக் கொள்வது குறித்த தகவல்களை வீட்டுச்சொந்தக்காரருக்கான அமைப்பு அல்லது Casafair சங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம், அத்துடன் சட்டரீதியாக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல் அல்லது சுற்றுச்சூழலுக்கு ஏற்றவிதமாக வாழ்வதற்கான வீடுகள் குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## ஊடகங்களில் நுழைவு

**தொலைபேசி- மற்றும் இணையத்தள இணைப்பு**

சுவிஸ் ஒரு நன்கு விரிவாக்கப்பட்ட தொலைத் தொடர்பு வலையைக் கொண்டுள்ளது. தொலைபேசி மற்றும் இணையத்தள இணைப்புகளுக்கு அனைத்து இடங்களிலும் வசதியுள்ளது. ஒரு தொலைபேசி இணைப்பு அல்லது இணையத்தள இணைப்பைப் பெறுவதற்கு நீங்கள் ஒரு தொலைத்தொடர்பு முகவரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.





**வானொலி மற்றும் தொலைக்காட்சி**

வானொலி- மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பெற்றுக்கொள்வதற்கு கட்டணம் அறவிடப்படும். இந்தக் கட்டணம் Serafe எனும் அமைப்பால் பெற்றுக்கொள்ளப்படும். அடிப்படை ரீதியாக சுவிசில் ஒவ்வொரு வீடும் இதைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளன. அவர்கள் கருவிகளை வைத்திருந்தாலும் அல்லது வைத்திருக்காவிட்டாலும் இதைச் செலுத்த வேண்டும்.

## வீட்டுப்பொருட்கள் மற்றும் சுற்றச்சூழல் பாதுகாப்பு

சரியான வகையில் குப்பைகளை அகற்றுவதால் நாம் எமது சுற்றச்சூழலைப் பாதுகாப்பதற்கு ஒரு பங்களிப்பை வழங்குகின்றோம். உங்கள் நகரசபை உங்களுக்கு குப்பைகளை சுற்றச்சூழலுக்கு ஏற்றவிதமாக அகற்றுவது குறித்து தகவல்களைத் தருவதுடன் சேகரிக்கும் இடம் மற்றும் சேகரிக்கும் நாள் மற்றும் இதுபற்றிய மேலதிக விடயங்களையும் உங்களுக்கு அறியத்தரும். இதற்கான நிதி குப்பைக்காகப் பெறப்படும் கட்டணத்திலிருந்து செலவுசெய்யப்படும். இது ஒரு அடிப்படையான- மற்றும் கொள்ளளவுக்கான கட்டணமாக கணிக்கப்படும். மீள் பாவனைக்கான பொருட்களை அதற்கான சேகரிக்கும் இடங்களில் இலவசமாக ஒப்படைக்கலாம்.

**வீட்டுக் குப்பைகள்**

வீட்டுக் குப்பைகளை அகற்றுவதற்கு மாநிலத்தின் அனைத்து நகரங்களிலும் கட்டணம் செலுத்த வேண்டும். இதற்கான கட்டணப் பைகளை அல்லது கட்டண முத்திரைகள் நகரத் திணைக்களங்களில், தபால் நிலையத்தில் மற்றும் பல கடைகளிலும் கிடைக்கும்.

**பச்சைக் குப்பைகள்**

பல நகரங்களில் தாவரக் குப்பைகள் (பச்சைக் குப்பைகள்) ஏனைய வீட்டுக் குப்பைகளிலிருந்து தனியாகப் பிரித்து கட்டணம் இல்லாமல் அகற்றிக்கொள்ளலாம்.

**கண்ணாடி, போத்தல்கள் (பேணிகள்), PET, அலுமினியம் மற்றும் சமைக்கும் எண்ணெய்.**

கண்ணாடி, போத்தல்கள் (பேணிகள்), PET- குடிபானப் போத்தல்கள், அலுமினியம் மற்றும் சமைக்கும் எண்ணெய் போன்றவற்றை அகற்றுவது அதற்கான சேகரிக்கும் இடங்களிலுள்ள கொள்கலன்கள் அல்லது வியாபார நிலையங்களில் இடம்பெறும்.

தளபாடக் குப்பைகள், இரசாயனப் பொருட்கள், துணிகள் போன்றவற்றை அகற்றுவது குறித்து விபரமான தகவல்களை நகர-சபையின் அறிவித்தலில் காணலாம்.

**கடதாசி மற்றும் பெட்டிகள்**

பழையகடதாசிகள் மற்றும் பெட்டிகள் காலவரையறைப்படி சேகரிக்கப்படும் அல்லது குறிப்பிடப்பட்ட அகற்றும் இடங்களில் ஒப்படைக்கலாம். இந்த சேகரிப்புத் தவணைகளை அந்தந்த நகரசபையின் அறிவித்தல்களிலோ அல்லது நாளாந்த செய்தித்தாள்களிலோ காணலாம்.

**மின்கலன்கள்**

பலவிதமான மின்கலன்கள், மீளப்பயன்படுத்தும் மின்கலன்கள் மற்றும் வாகன மின்கலன்கள் சுவிசில் நுகர்வோரால் கடைகளில் திரும்பவும் ஒப்படைப்பதற்கும் அவற்றை கட்டணம் எதுவும் இல்லாமல் கடைகள் திரும்பவும் பெற்றுக்கொள்ளவும் கட்டாய கடமையுள்ளது. வழமையாக கருவிகளுக்குப் பாவிக்கும் மின்கலன்களை அநேகமாக அனைத்து விற்பனை நிலையங்களிலும் மீள ஒப்படைக்கலாம்.

**மின்சார- மற்றும் இலத்திரனியல் கருவிகள்**

மின்சாரத்தால் செயற்படும் அனைத்துக் கருவிகளும் அதன் உபகரணங்களும் அதுபோன்ற கருவிகளை விற்பனை செய்யும் நிலையத்தில் அவற்றை அழிப்பதற்காக மீள ஒப்படைக்கலாம். இதன்போது எதையும் புதிதாக வாங்காவிட்டாலும் எந்த நிறுவனத்தினது உற்பத்தியாக இருந்தாலும் இலவசமாக மீள ஒப்படைக்கலாம்.

- சாவ்கவ்சன் மாநிலம் - மாநிலங்களுக்கு இடையேயான ஆய்வுகூடம்: அனைத்துக் குப்பைகளையும் அகற்றுவது குறித்த தகவல்கள்.
- சுற்றச்சூழலுக்கான மத்திய அமைச்சகம் *(Bundesamt für Umwelt BAFU).* குப்பைகள் குறித்த வழிகாட்டி மற்றும் குப்பைகள் அகற்றுவது குறித்த பொதுவான தகவல்கள்.





## மெதுவான போக்குவரத்து: கால்நடையாக மற்றும் மிதிவண்டியுடன் செல்லுதல்

மிதிவண்டி அதாவது வெலோ சுவிசில் ஒரு மிக விருப்பமான போக்குவரத்துச் சாதனமாகும். மிதிவண்டிப் பாதைகள் நன்கு வழிகாட்டப்பட்டுள்ளன அல்லது வீதிகளில் மஞ்சளால் வரையப்பட்டுள்ளன, இதன்மூலம் மிதிவண்டி செலுத்துபவர் போக்குவரத்தில் பாதுகாப்புடன் முன்னேறிச் செல்ல முடியும். மூன்றாம் நபருக்கு எதிராக மிதிவண்டியால் பாதிப்பு ஏற்பட்டால் அதிலிருந்து பாதுகாத்துக்கொள்ள அதற்கான பாதுகாப்புக் காப்புறுதியை செய்துகொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகின்றது. மின்சார மிதிவண்டிகளுக்கு (E-Bike) மேலதிக விதிகள் உள்ளன. அத்துடன் எவர் கால்நடையாக செல்கின்றாரோ, இயலுமானவரை போக்குவரத்தில் பாதுகாப்பாகச் செல்ல வேண்டும். கால்நடையாகச் செல்லும் ஆண்கள் மற்றும் பெண்கள் வீதிகளில் உள்ள வரிக்கோடுகள் மீது நடந்து செல்வதற்கு அடிப்படையாக முன்னுரிமை உள்ளது. பாடசாலைக்கு கால்நடையாகச் செல்லும் பிள்ளைகள், இதன்மூலம் தனியாகச் செல்லவும், சமூகத் தொடர்புகள் கொள்ளவும் மற்றும் நாளாந்தம் இப்படியாக நடமாடிக் கொள்கின்றனர். இதற்காகவே சாவ்கவ்சன் போக்குவரத்துப் பெரிசார் பாலர்பாடசாலைப் பிள்ளைகள் மற்றும் மாணவர்கள் மற்றும் மாணவிகளுக்கு போக்கவரத்தில் சரியாக நடந்துகொள்வது எப்படி என்பது குறித்து பாடங்களை நடத்துகின்றனர்.

- *Fussverkehr Schweiz:* கால்நடைப் போக்குவரத்து சுவிஸ், கால்நடைப் பயணிகள் விடயங்களைக் கவனிப்பதுடன் ஆண் மற்றும் பெண் கால்நடைப் பயணிகளுக்குத் தகுந்தவிதமான போக்குவரத்தைத் திட்டமிடுகின்றது.
- *Pro Velo Schaffhausen:* புறோ வெலோ மாநிலத்தில் மிதிவண்டியை உடல்நலத்திற்கேற்ற, மகிழ்ச்சிகரமான மற்றும் சுற்றச்சூழலுக்குத் தகுந்த போக்குவரத்துச் சாதனமாக சாவ்கவ்சன் பிரதேசத்தில் ஊக்குவிப்பதில் தன்னை ஈடுபடுத்துகின்றது. இணையத்தளத்தில் இந்தப் பிரதேசத்தில் மிதிவண்டி ஓடுவதற்கான பயனுள்ள எடுத்துக்காட்டல்களை நீங்கள் காணலாம். புறோ வெலோ சாவ்கவ்சன் மிதிவண்டி ஏலம் மற்றும் அதை ஓடும் பயிற்சியை ஒழுங்குசெய்கின்றது.
- *Schweiz Mobil:* மெதுவான போக்குவரத்துக்கான தேசிய வலைத்தொடர்புத் தளம். இந்த இணையத்தளத்தில் உதாரணமாக மிதிவண்டிப் பாதைகள் *(Veloland),* நடைபாதைகள் போன்றவைகளை தேர்வுசெய்வதுடன் இணையவழியில் திட்டமிடலாம்.
- *Schulweg bildet:* பிள்ளைகள் தாமாக மற்றும் பாதுகாப்பாக எவ்வாறு பெற்றோரின் துணையின்றி பாடசாலைக்கான பாதையில் செல்வது என்பது குறித்த பெற்றோருக்கான பரிந்துரை.

## பொதுப் போக்குவரத்துச் சேவை

சுவிசில் உங்களுக்கு ஒரு திறமான நன்கு விரிவுபடுத்தப்பட்ட மற்றும் சேவைபுரியும் பொதுப்போக்குவரத்துச் சேவை உள்ளது, அத்துடன் இது சிறிய நகரங்களையும் உள்ளடக்குகின்றது. தொடருந்து, பேருந்து மற்றும் கப்பல் போக்குவரத்தின் பயண நேரங்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து திட்டமிடப்பட்டுள்ளது. நீண்ட தூரத்திற்கு மற்றும் தொழிலுக்கு அல்லது பாடசாலைக்கு ஏறி இறங்கிச் செல்ல பல பயணிகளுக்கு தொடருந்து வசதியாகவுள்ளது. இதில் வித்தியாசமான பல வசதிகள் மற்றும் பருவகாலச்சீட்டுக்கள் உள்ளன, இவைகள் மூலம் நீங்கள் பொதுப் போக்குவரத்தை மலிவாகப் பாவித்துக்கொள்ள முடியும். விசேடமாக மிக விருப்பமானதாக Halbtax-Abo உள்ளது, இதன் மூலம் பொதுப்போக்குவரத்தை அரைக் கட்டணத்தில் பாவித்துக்கொள்ள முடியும். 6 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் இலவசமாகப் பயணிக்கலாம். 16 வயது வரையான பிள்ளைகள் இளையோர் பயணச்சீட்டுடன் Junior-karte பெற்றோரில் ஒருவருடன் அல்லது Kinder-Mitfahrkarte உடன் வேறொரு வயதுவந்த நபருடன் இலவசமாகப் பயணிக்கலாம். சில நகரங்களில் நீங்கள் முழு சுவிசிற்கும் பயணிப்பதற்கான ஒருநாள் பிரயாணச்சீட்டை மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

- *Schweizerische Bundesbahnen (SBB):* சந்தா முறையில் பிரயாணச்சீட்டுப் பெறுவது மற்றும் மலிவான பிரயாணச் சீட்டுக்கள் அதேபோன்று முழு ஐரோப்பாவுக்குமான இணையவழி-பிரயாணப்பாதை போன்ற விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

### பிரதேசரீதியான போக்குவரத்து சாவ்கவ்சன்

எவராவது சாவ்கவ்சனில் கிராமத்திலிருந்து நகருக்கு வருவதானால் (மற்றும் மறுபக்கமாகவும்) தங்கள் நோக்கை சிறிது நேரத்திலேயே அடைந்துவிடுவார்கள். தொடருந்து- அல்லது பேருந்துத் தொடர்பு ஒவ்வொரு நகரிலும் உள்ளது. எவராவது நன்கு ரசனையுடன் பயணம் செய்ய விரும்பினால், அவர்களுக்குப் பலவிதமான கப்பல் போக்குவரத்துத் தொடர்புகள் றைன் நதியில் உள்ளன. சாவ்கவ்சன் பிரதேசம் கட்டணக் கூட்டமைப்பு OSTWIND உடன் இணைக்கப்பட்டுள்ளது. இவ்விதமான ஒரு பிரயாணக் கூட்டமைப்பு ஒரு பிராயாணப் பகுதிக்கு செல்லுபடியாகும், இதன்படி ஒரு பயணி ஒரே ஒரு பயணச்சீட்டுடன் பல்வேறு ஊர்திகளில் அவர்கள் பயணச்சீட்டில் குறிப்பிட்டுள்ள பிரயாணப் பகுதிக்குள் செல்லுபடியாகும் நேரம் வரையாகப் பயணம் செய்யலாம். இதனால் செல்லுபடியாகும் பிரயாணப் பகுதிக்கான பயணச்சீட்டை வைத்திருந்தால், ஒரு தொடருந்து நிலையத்திலிருந்து பேருந்திற்கு மாறும்போது ஒரு புதிய பயணச்சீட்டைப் பெறத் தேவையில்லை.





- போக்குவரத்துச்சபை சாவ்கவ்சன் *(Verkehrsbetriebe Schaffhausen VBSH):* நகர மற்றும் பிரதேச ரீதியான போக்குவரத்து அட்டவணை அத்துடன் கட்டணக் கூட்டமைப்பு *OSTWIND* இன் பயணச்சீட்டுகள் மற்றும் சந்தாப் பயணச்சீட்டுகள் குறித்த விபரங்கள்
- சுவிஸ் கப்பல் போக்குவரத்துக் கழகம் *Untersee;* மற்றும் *Rhein (Schweizerische Schifffahrtsgesellschaft Untersee und Rhein):* பயண பயண விபரங்கள் மற்றும் சுற்றுலா ஆலோசனை.
- சுவிஸ் மத்திய தொடருந்துச்சேவை *(Schweizerische Bundesbahnen SBB):* நடமாடுவதில் குறைபாடு உள்ளவர்கள் பயணித்தல்: நடமாடுவதில் குறைபாடு உள்ளவர்கள் தடையின்றிப் பயணிப்பதற்கான தகவல்கள் மற்றும் வசதிகள்.

## சுவிசில் வாகனம் செலுத்துவது

### சாரதிப்பத்திரம் மற்றும் போக்குவரத்துப் பாதுகாப்பு

சுவிசில் வெளிநாட்டிலிருந்து வருபவர்களது சாரதி அனுமதிப்பத்திரம் அவர்கள் வருகைதந்த நாளில் இருந்து ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும். இந்தத் தவணைக்குள் கட்டாயமாக மாநில வாகனப்போக்குவரத்து- மற்றும் கப்பல் போக்குவரத்துத் திணைக்களத்தில் ஒரு சுவிஸ் சாரதிப் பத்திரத்துக்காக விண்ணப்பிக்க வேண்டும். சுவிசில் அமுலிலுள்ள போக்குவரத்து விதிகளை கேட்டு அறிந்து கொள்ளுங்கள்!

### விக்னெற்ரென் - எனும் முத்திரையின் கட்டாயம்

வேகவீதியில் மற்றும் வாகன வீதிகளில் வாகனம் செலுத்துவதற்காக விக்னெற்ரென்-கட்டணம் செலுத்தவேண்டிய கட்டாயமுள்ளது. இந்த விக்னெற்ரெனை சுங்க நிலையங்கள், தபால் நிலையங்கள், எரிபொருள் நிரப்பும் நிலையங்கள், வாகனம் திருத்தும் இடங்கள் மற்றும் TCS ன் அலுவலகங்கள் அதேபோன்று மாநில வீதிப்போக்குவரத்துத் திணைக்களம் போன்றவற்றில் வாங்கலாம்.

### இயந்திர வாகனங்களுக்கான காப்புறுி

அனைத்து மோட்டார் வாகனங்களுக்கும் அதாவது சிற்றூர்திகள், மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் மிதிவண்டிகள் 45km/h வரை, மற்றும் கப்பல்களுக்கும் கட்டாயமாக பாதுகாப்புக் காப்புறுதி தேவையாகும். மோட்டார் வண்டிக் காப்புறுதியை பல வித்தியாசமான வேறுவிடயங்களையும் சேர்த்து மேலும் விரிவாக்கலாம்.

### சுவிசிற்குள் வெளிநாட்டு வாகனத்தை இறக்குமதி செய்தல்

நீங்கள் சுவிசிற்கு வருகைதருவதுடன் ஒரு வாகனத்தை வெளிநாட்டிலிருந்து இறக்கமதி செய்வீர்களாக இருந்தால், உடன-டியாக சுவிஸ் சுங்கத்தில் உங்கள் வாகனத்தைப் பதிவுசெய்து கொள்ளுங்கள். நீங்கள் சுவிசிற்குள் வருகை தந்து முதல் 12 மாதங்களுக்கு, வெளிநாட்டு இலக்கம் செல்லுபடியானதாகவும் காப்புறுதி செய்யப்பட்டதாகவும் இருப்பின் மாற்றியெழுதத் தேவையில்லை. எவருக்காவது ஒரு வருடத்திற்கு மேலாக சுவிசில் ஒரு வதிவிடம் இருந்தால், இறக்குமதி செய்யப்பட்ட வாகனத்தை சுவிசில் மாற்றி எழுதிக்கொள்ள வேண்டும். அனைத்து இயந்திர வாகனங்கள் மற்றும் அதன் இழுவைகள் சுவிசில் அனுமதிக்கப்பட முன்பாக போக்குவரத்துத் திணைக்களத்தால் பரிசோதிக்கப்பட வேண்டும். மாநில போக்குவரத்துத் திணைக்களத்தில் வாகன அனுமதிக்கான நிபந்தனைகள் மற்றும் தேவைப்படும் பத்திரங்கள் குறித்து நேரகாலத்துடன் கேட்டறிந்து கொள்ளுங்கள்.

## வான்வழிப் போக்குவரத்து

சூரிச்-குலோரென் சர்வதேச விமானநிலையம் மிக அண்மையாக உள்ளது அத்துடன் அதை மிக விரைவாக அடைந்து கொள்ளலாம். சிற்றூர்தியில் செல்ல 30 நிமிடங்கள் தேவைப்படும், நேரடி தொடருந்து சேவையில் விமானநிலையத்திற்கு செல்ல 40 நிமிடங்கள் எடுக்கும். ஒவ்வொரு முக்கிய கேந்திரமான பொருளாதார தலைநகர்களுக்கும் சூரிச்சில் இருந்து நாளாந்தம் விமானசேவை உள்ளது.

விமானநிலையம் பொதுப் போக்குவரத்து சாதனங்களுடன் மிக நன்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. சாவ்கவ்சன் தொடருந்து நிலையத்திலேயே நேரடியாக பொதிகளை ஒப்படைக்க முடியும். அங்கு நீங்கள் உங்கள் விமான நுழைவுச்சீட்டுக்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

- சாவ்கவ்சன் மாநிலம் -வீதிப்போக்குவரத்து- மற்றும் கப்பல் போக்குவரத்துத் திணைக்களம் *(Strassenverkehrs- und Schifffahrtsamt):* சாரதிப்பத்திரம் குறித்த விபரங்கள், போக்குவரத்துப் பாதுகாப்பு போன்றவை.

## எல்லை தாண்டிப் பயணிப்பது – சுங்கக் கட்டுப்பாடுகள்

அண்மையிலுள்ள வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்ல அழைக்கப்படுவீர்கள். நீங்கள் ஒரு நாட்டின் எல்லையைத் தாண்டிச் செல்கின்றீர்கள் மற்றும் அதற்குத் தகுந்த பத்திரங்களை கட்டாயமாக எடுத்துச் செல்ல வேண்டும் என்பதை நீங்கள் நினைவிற்கொள்ளுங்கள். சுங்கக் கட்டுப்பாடுகள் குறித்த விபரங்களை சுவிஸ் சுங்கத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

- சுங்க மற்றும் எல்லைப்பாதுகாப்பு மத்திய அமைச்சு *(Bundesamt für Zoll und Grenzsicherheit BAZG):* தனிப்பட்ட மற்றும் நிறுவன ரீதியாக ஒன்றுசேர்ந்து பிரதிக்கினை எடுத்த சுங்க நிர்வாகத்துக்கான தகவல்கள்.

# தொழில்





## ஒரு தொழிலிடத்தைத் தேடிக்கொள்ளல்

தொழில் சந்தைக்குள் நுழைவது சட்டரீதியாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் இது வதிவட அனுமதியிலும் தங்கியுள்ளது. ஒரு தொழிலைக் கண்டடைவதற்கு, வித்தியாசமான ஒன்றுடன் ஒன்று சேர்ந்து செயற்படுத்தக்கூடிய தேடும் விதங்கள் பரிந்துரைக்கப்படுகின்றது:

• தொழிலைக் கண்டடைய இணையத்தளத்தில் தேடுதல், • நடுநிலைய தேடும்தளத்தைப் பாவித்தல் • நீங்களாவே விண்ணப்பங்களை நிறுவனங்களுக்கு அனுப்புதல், • தொழில் தேடிக்கொடுக்கும் அலுவலகங்களுடன் தொடர்பை ஏற்படுத்தல் • உங்கள் சூழலில் உள்ள நபர்களுடன் இதுபற்றிக் கதைத்தல், • பத்திரிகைகளில் வரும் தொழில் வாய்ப்புகளுக்கு நீங்களாகவே விண்ணப்பிப்பது, • உங்களை ஒரு பிரதேச தொழில் தேடிக்கொடுக்கும் நடுநிலையத்தில் (RAV) பதிவுசெய்தல்.

► வேலைவாய்ப்பு நடுநிலையம் *(Arbeitsvermittlungszentrum RAV)* சாவ்கவ்சன்: திறமைமிகுந்த பிரதேச வேலைவாய்ப்பு நடுநிலையம், சாவ்கவ்சன் மாநிலத்தை தமது வசிப்பிடமாகக் கொண்ட தொழில் தேடும் நபர்களுக்கு இலவசமாக சேவைகளை வழங்கும்.

## சுவிசில் நான் எவ்வாறு ஒரு தொழிலுக்கு விண்ணப்பித்துக் கொள்வது?

சுவிசில் தொழிலுக்கான ஒரு விண்ணப்பத்தின்போது எழுத்து வடிவில் வாழ்க்கைச் சரிதம் மற்றும் எழுத்து வடிவில் ஒரு ஊக்குவிப்புக் கடிதத்தைக் கொடுக்க வேண்டும். இந்த விண்ணப்பத்தின்போது முக்கியமாக முன்னைய தொழில் வழங்குனரின் நற்சான்றிதழ் மற்றும் தெரில் புரிந்தமைக்கான உறுதிப்படுத்தல்கள், தொழிற்கல்வி சான்றிதழ்கள் அத்துடன் டிப்ளோம் போன்றவைகளை அந்தக் கோவைக்குள் வைக்க வேண்டும். பலவேளைகளில் இப்படியான விண்ணப்பங்களை இணையவழியில் அனுப்ப வேண்டி ஏற்படும். ஒரு தொழில் விண்ணப்பக்கோவையைத் தயார்படுத்துவதற்கான பிரயோசனமான விபரங்களை நீங்கள் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

► தொழில் தகவல் நடுநிலையம் *( Berufsinformationszentrum BIZ )* சாவ்கவ்சன் வயதுவந்தோருக்கான வாழ்க்கைப்பாதை ஆலோசனை: வாழ்க்கைப்பாதை ஆலோசனையின்போது உங்களது வெளிக்களநிலை மற்றும் இயலுமான தொழில் இலக்குகள் குறித்து எண்ணங்களை உருவாக்குவதுடன் தொழில்- மற்றும் தொடர்ந்து கற்பது குறித்து விளக்கம் பெறுங்கள்.

► *berufsberatung.ch:* தொழிற்கல்வி, தொழில் மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்த பொதுவான தகவல்கள், வேலைக்கு விண்ணப்பிப்பது குறித்த எடுத்துக்காட்டல்கள் போன்றவை. இப்படிவங்கள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

► தொழில் இழந்தவர்கள் சந்திக்கும் இடம் சாவ்கவ்சன் *Verein Erwerbslosen-treffpunkt Schaffhausen (VETS)* – எழுதும் இடம்: வாழ்க்கைச் சரிதம் மற்றும் தொழில் விண்ணப்பம் தயாரிப்பதற்கான உதவி.

► *arbeit.swiss:* தொழில் தேடுவோருக்கான, தொழில் வழங்குவோருக்கான மற்றும் தொழில் அறிவிப்போருக்கான நடுநிலையம்.

## வெளிநாட்டு டிப்ளோமாவை அங்கீகரித்தல்

வித்தியாசமான வெளிநாட்டு டிப்ளோமா மற்றும் தொழிற் கல்விகள் சுவிசில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பெறுபேறுகளைப் பொறுத்து, பின்வரும் நிலையங்களோடு தொடர்புகொள்ளுங்கள்:

► கல்வி, ஆய்வு மற்றும் கண்டுபிடிப்புக்கான அரச செயலர் *Staatssekretariat für Bildung, Forschung und Innovation (SBFI):* வெளிநாட்டு டிப்ளோமாவை அங்கீகரிப்பதை ஒழுங்குபடுத்துதல்.

► சுவிசின் மாநில ரீதியாக ஒன்றுசேர்ந்த கல்வித் திணைக்களம் - வெளிநாட்டு டிப்ளோமா: கல்விப் பகுதித் தொழில்களை அங்கீகரிப்பது.

► *Swissuniversities:* சுவிஸ் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான நிபந்தனைகள் குறித்த தகவல்கள்.

## ஊதியம் மற்றும் சமூகக் கொடுப்பனவுகள்

சுவிசில் முழு ஊதியம் வழமையாக மிகவும் உயர்வாக இருக்கும், இது வாழ்க்கைச் செலவுக்கும் பொருந்தும். அனைத்து வேலை வாய்ப்புகளுக்கும் சட்டப்படி செல்லுபடியாகும் ஆகக் குறைந்த ஊதியம் என்றில்லை. சில நிறுவனங்கள் முழுவதுமான தொழில் ஒப்பந்தந்தின்படி தீர்மானித்துக் கொள்கின்றன. ஊதியத்திலிருந்து கட்டாய கொடுப்பனவுகளாக வயதானபோது மற்றும் விட்டுச்செல்வோருக்கான காப்புறுதி (AHV), தெரில் செய்ய இயலாமல் போகும்போதான காப்புறுதி (IV), தொழில் இழப்புக் காப்புறுதி (ALV), மற்றும் விபத்துக் காப்புறுதி (UV) கழிக்கப்படும். சாவ்கவ்சன் மாநிலத்தில் தொழில் செய்வோரும் தெரில் வழங்குவோரும் மாநில ரீதியான சமூகத் திட்டத்திற்கு ஒரு தொகையை செலுத்துகின்றனர். வருடாந்த வருமானம் 20'000.– பிராங்கிற்கு மேலானால், மேலதிகமான பங்களிப்பாக தொழில்பராமரிப்பு (2.வது தூண் என அழைக்கப்படுவது) AHV வுக்குப் பதிலாகக் கழிக்கப்படும். முழுவதுமாக கட்டாயமாகச் செலுத்த வேண்டிய சமூகக் கொடுப்பனவுகளாக ஊதியத்தில் ஏறக்குறைய 15-20% மாக அமையும்.

► சமூகக் காப்புறுதிகளுக்கான மத்திய அமைச்சு *(Bundesamt für Sozialversicherungen BSV):* கொடுப்பனவுத்தொகை.



## தொழிலை இழந்தால்

ஒருவர் சுவிசில் வசித்து மற்றும் பெண் தொழிலாளியாக அல்லது ஆண் தொழிலாளராக இருந்து தொழிலை இழப்பாராக இருந்தால் -அத்துடன் தேவைப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருந்தால்- நாளாந்தக் கொடுப்பனவை (Taggelder) காப்புறுதியிலிருந்து பெறுவதற்கு உரித்துடையவராவர். இந்த நாளாந்தக் கொடுப்பனவைத் தீர்மானிப்பதற்கான முக்கிய நிபந்தனையாக, ஒரு செல்லுபடியான வதிவிட அனுமதி அதேபோன்று இதற்காக விண்ணப்பிப்பதற்கு முன்பு கடந்த இரு வருடங்களில் குறைந்தது 12- மாதங்கள் தொழில்புரிந்திருக்க வேண்டியது அமைந்திருக்கும். ஒரு தொழில் செய்த காலம் முடிந்த பின்பு உடனடியாக மீளவும் ஒரு தொழிலைப் பெற முடியாவிட்டால், நீங்கள் உடனடியாக – மிக நல்லது, வேலையை நிறுத்தப்போகும் கால எல்லையின்போது – பிரதேசரீதியான தொழில் தேடித்தரும் நிலையத்தில் (RAV) பதிவு செய்யுங்கள். அங்கு நீங்கள் அடுத்து என்ன செய்யவேண்டும் என்ற விபரங்களைப் பெற்றுக்கொள்வீர்கள்.

- சாவ்கவ்சன் மாநிலம் - தொழில் திணைக்களம்: தொழில் இழந்தால் ஆலோசனை, தொழில் குறித்து அறிவிப்பது, வெளிநாட்டவர்களுக்கான தொழில் அனுமதி பெறும் நிலையம், சுவிசில் தொழில் செய்வது குறித்த மேலதிக கேள்விகளுக்கு.
- பிரதேசரீதியாக தொழில் வாய்ப்புகள் குறித்து அறிவிக்கும் நடுநிலையம் *(Regionales Arbeitsvermittlungszentrum RAV)*: தொழில் தேடுவோர்கள் மற்றும் தொழில் வழங்குவோருக்கான சேவை நடுநிலையம்.

## தொழிலுக்கான நிபந்தனைகள்

சுவிஸ் தனது சிறப்பான தொழில் நிபந்தனைகளைக் கொண்டுள்ளது பலரும் அறிந்ததே. ஒவ்வொரு தொழில் மற்றும் பகுதிகளைப் பொறுத்து இவை வித்தியாசமாக தீர்மானிக்கப்பட்டிருக்கும். அமுலிலுள்ள தொழில் நிபந்தனைகளை நேரகாலத்துடன் நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். தொழில் ஒப்பந்தத்தில் செய்யவேண்டிய வேலை, வேலை நேரம், ஒத்திகைக் காலம், வேலை நீக்கத்துக்கான கால எல்லை, விடுமுறை, ஊதியம், தொழில் பாதுகாப்புக் காப்புறுதி மற்றும் ஓய்வூதியப்பணம் நிர்ணயிக்கப்பட்டிருக்கும். சில குறிப்பிட்ட பகுதிகளில் முழுவதுக்குமான தொழில் ஒப்பந்தம் (GAV) நடை-முறையில் இருக்கும். GAV என்பது எழுத்துமூலமான ஒப்பந்தம், இது தனிப்பட்ட அல்லது பல வழங்குநர்கள் அல்லது அவர்களது தொழில் சங்கங்கள் மற்றும் தொழிலாளர் அமைப்புகளுக்கு இடையாக மேற்கொள்ளப்படும். இதில், தொழில் வழங்குபவர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு இடையேயான நிபந்தனைகள் அதேபோன்று GAV ன் ஒப்பந்தக்காரர்கள் விதிக்கும் நிபந்தனையும் அடங்கியிருக்கும்.

- பொருளாதாரத்துக்கான அரசசெயலர் *(Staatssekretariat für Wirtschaft SECO)*: தொழில் குறித்த பல்வேறு விடயங்களுக்குமான தகவல்கள்
- குடியேறுபவர்களுக்கான அரசசெயலர் *(Staatssekretariat für Migration SEM)*: சுவிசில் ஒரு தொழிலைச் செய்வது குறித்து வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கான தகவல்கள்.
- சாவ்கவ்சன் மாநிலம் - தொழில் பரிசோதகர் தொழில்பாதுகாப்பு மற்றும் தெழிலகத்தில் சுகாதரப்பாதுகாப்பு, அதேபோன்று தொழில்- மற்றும் ஓய்வுநேரங்கள் குறித்து ஆலோசிக்கும்-, கடமைபுரியும்-, நம்பிக்கையான மற்றும் அதை செற்படுத்தும் நடுநிலையத்தின் தொழில் பரிசோதகர்.



## வேலையிலிருந்து நிறுத்துவதற்கான பாதுகாப்பு

தொழிலாளர்கள் நோய், விபத்து, கர்ப்பம்தரித்தல் அல்லது தாயாகுதல் போன்றவற்றின்போது வேலையிலிருந்து நிறுத்துவதிலிருந்து சட்டத்தால் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வகையான காலங்களில் வேலையிலிருந்து நிறுத்துவது வழமையாகப் பிழையானது. வேறு காரணத்தால் வேலையிலிருந்து நிறுத்துவது துஷ்பிரயோகப்பட்டு ஒரு தொழிலாளர் அல்லது தொழிலாளி அந்த நிறுவனத்தில் கட்டாயமாக மீளவும் சேர்த்துக் கொள்ளப்படாவிட்டால், நீதிமன்றத்தால் ஒரு இழப்பீட்டுத் தொகை வழங்குமாறு கேட்கப்படலாம்.

- தொழிலாளர்களுக்கான செயலர் *(Arbeitersekretariat)* சாவ்கவ்சன்: சட்ட ஆலோசனை, முதலாவது ஆலோசனை இலவசம்.

## களவாக வேலை செய்தல்

எவராவது, இடைக்கிடையே செய்யும் வேலையாக துப்பரவாக்கல், பிள்ளைகளைப் பராமரித்தல், வீட்டு- மற்றும் தோட்ட வேலைகளுக்கு ஊதியம் பெறுவார்களாக இருந்தாலும், அது தொழில் புரிதகவே கருதப்படும். அவர் அல்லது அவ வெளிநாட்டவருக்கான சட்டரீதியான அனுமதியை வைத்திருப்பதுடன் சமூகக் காப்புறுதியில் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும் (அல்லது தானே சொந்தமாக பதிந்து கொள்ள வேண்டும்), இவ்வாறு இல்லாவிடின் அது சட்டத்திற்கு எதிரான தொழில் அல்லது களவாக வேலை எனக் கருதப்படும். ஒரு நபர், களவாக வேலை செய்தால், இயலாமல்போகுதல், விபத்து அல்லது தொழில் இழப்பு உதவிக்கான விடயங்களில் காப்புறுதி செய்யப்பட்டிருக்க மாட்டார். இதன் விளைவு பார-தூரமானதாக அமையும். அதாவது ஒரு தொழிலாளரின் நன்மை கருதி பதிவு செய்துகொள்வது அவசியமாகும்.

- பொருளாதாரத்துக்கான அரசசெயலர் *(Staatssekretariat für Wirtschaft SECO)*: களவாக வேலைசெய்வது குறித்த தகவல்கள், களவாக வேலைசெய்வோரை அறிய உதவிவழங்கல், தொடர்பு வசதிகள்
- சாவ்கவ்சன் மாநிலம் - களவாக வேலை செய்தல்: களவாக வேலைசெய்வது குறித்த தகவல்கள்.

# சமூகப் பாதுகாப்பு






## சுவிசில் முற்பாதுகாப்பு

சமூகக் காப்புறுதியின் இறுக்கமான வலைத் தொடர்பு மற்றும் பொதுச்சேவையான சமூகப்பணஉதவி இங்கு வாழ்பவர்கள் மற்றும் தொழில் புரிபவர்கள் மற்றும் அவர்களது உறவினர்களுக்கு சுகவீன-மடைவதால், விபத்தால், தொழில் இழப்பதால், தொழில் செய்ய முடியாத நிலை ஏற்படுவதால் மற்றும் மேலும் வேறு ஆபத்துக்களால் ஏற்படும் பொருளாதாரப் பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பு வழங்குகின்றது. இதன் நோக்கம் என்னவென்றால், ஏழ்மையை சுவிசில் இல்லாமல் செய்வதாகும். சமூகப்பாதுகாப்பு சுவிசின் அரசமைப்பில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. இதில் முன்னுரிமையாக சொந்தப் பொறுப்புணர்வு மற்றும் தொழில் உள்ளன. சுவிசின் சமூகப் பாதுகாப்பு 3-தூண்கள்-கொள்கை (பார்க்க அட்டவணையை) அதேபோன்று சமூகப்பண உதவி என்பவற்றை அடித்தளமாகக் கொண்டது.

இது வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகளை தந்து பாதுகாக்கின்றது, நீங்களோ அல்லது உங்களது உறவினரோ தொழில் செய்ய முடியாதுபோனால், தொழில் இழந்து அல்லது இறந்துபோனால் ஒரு பாரிய நிதிப் பிரச்சினையை எதிர்கொள்வீர்கள். இதற்காகவே வய-தான காலத்தில் ஒரு ஓய்வுதியம் வழங்கப்படுகின்றது. தற்சமயம் உங்களுக்கு ஒரு சமூகரீதியான பிரச்சினை ஏற்பட்டு, அவசர உதவி தேவைப்பட்டால், நீங்கள் இதற்காக உதவிகளைக் கோரலாம். இதற்கான விபரங்களை சாவ்கவ்சன் நகர ஆட்கள் பதிவுத் திணைக்களம் மற்றும் சமூகக்காப்புறுதித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

► சமூகக்காப்புறுதித் திணைக்களம் *(Sozialversicherungsamt SVA)* சாவ்கவ்சன்: சமூகக் காப்புறுதிகள் மற்றும் கட்டாய மருத்துவக் காப்புறுதியின் கட்டணத்தைத் தீர்மானிப்பது குறித்த தகவல்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள்.

► சமூகக்காப்புறுதிகளுக்கான மத்திய அமைச்சு *(Bundesamt für Sozialversicherungen BSV)*: நாட்டில் குடியேறுபவர்கள் மற்றும் நாட்டிலிருந்து வெளியேறுபவர்களுக்கான வித்தியாசமான சமூகக் காப்புறுதிகள் குறித்த தகவல்கள்.

### சுவிசில் முற்பாதுகாப்பு

| 1. தூண் | | 2. தூண் | | 3. தூண் | |
|---|---|---|---|---|---|
| நாட்டின் முற்பாதுகாப்பு | | தொழிலின் முற்பாதுகாப்பு | | தனிப்பட்ட முற்பாதுகாப்பு | |
| வாழ்வதற்குரிய அடிப்படைத் தேவைகளைப் பாதுகாத்தல் | | வழமையான வாழ்க்கைமுறையை தொடருதல் | | தனிப்பட்ட குறைநிரப்புகள் | |
| **AHV** வயதானபோது- மற்றும் மரணத்தின்பின் விட்டுச்செல்பவர்களுக்கான காப்புறுதி **IV** உடல் வழங்காதவர்களுக்கான காப்புறுதி | **EL** குறைநிரப்புக் கொடுப்பனவு **EO** தொழிலுக்கு மாற்றீட்டு ஒழுங்கு | **BVG** கட்டாய தொழில் முற்பாதுகாப்பு | **தூண் 2b** மேலதிக கட்டாய தொழில் முற்பாதுகாப்பு | **தூண் 3a** இணைக்கப்பட்டுள்ள முற்பாதுகாப்பு | **தூண் 3b** சுயவிருப்ப முற்பாதுகாப்பு |

வயதானவர்களுக்கான முற்பாதுகாப்பு, இறப்பு மற்றும் உடல் வழங்காத நிலை மூன்று தூண்களாகக் கட்டப்பட்டுள்ளன:

1. வது தூண்: AHV/IV/EO எனும் அடிப்படைக் காப்புறுதி. அனைத்து நபர்களும், சுவிசில் வசித்து மற்றும் அல்லது தொழில் செய்தால், கட்டாயமாக இந்தக் காப்புறுதியை செய்திருக்க வேண்டும்.

2. வது தூண்: தொழில் முற்பாதுகாப்பில் (ஓய்வூதியப்பணம்) அனைத்து தொழிலாளர்களும் ஒரு குறிப்பிட்ட தொகையளவு வருட ஊதியத்தைப் பெற்றால் கட்டாயமாக இக்காப்புறுதியை செய்திருப்பர்.

3. வது தூண்: இது தனிப்பட்ட முற்பாதுகாப்பு, தனிப்பட்ட விருப்பத்தின்படியும் அவர்கள் சொந்த சேமிப்புப் பணத்திலிருந்தும் பங்களிப்புச் செய்யப்படுகின்றது.






### AHV மற்றும் IV

மிக முக்கிய சமூகக் காப்புறுதி வயதானபோது- மற்றும் மரணத்தின்பின் விட்டுச்செல்பவர்களுக்கான காப்புறுதியாகும் (AHV). அடிப்படை ரீதியாக சுவிசில் வசிக்கும் அனைத்து நபர்களும், அவர்கள் சுவிஸ் பிரஜையாகவோ அல்லது வெளிநாட்டுப் பிரஜையாகவோ, தொழில் செய்பவராகவோ மற்றும் தொழில் செய்யாதவராகவோ எவராக இருப்பினும் AHV க்குள் அடங்குவர். ஒழுங்கான ஓய்வூதிய வயது குறித்து சாவ்கவ்சன் சமூகக் காப்புறுதித் திணைக்களம் அறியத்தரும். முன்னராகவே ஓய்வுபெறுவதற்குச் சந்தர்ப்பம் உண்டு, அப்படியானால் ஓய்வூதியப்பணம் குறைக்கப்படும். தொழில் செய்ய இயலாமற்போவதற்கான காப்புறுதி (IV), AHV - பங்களிப்புடன் ஒன்றுசேர்த்து ஊதியத்திலிருந்து கழிக்கப்படும். தொழில் செய்ய இயலாமல் போகும் சந்தர்ப்பத்தில் அந்தக் காப்புறுதி மீண்டும் தொழிற்சந்தைக்குத் திரும்பிவர உதவும் அல்லது ஓய்வூதியம் வழங்கும். நீங்கள் வேலை செய்யவில்லையா அல்லது நீங்கள் தனிப்பட்ட முறையில் தொழில் செய்கின்றீர்களா, அப்படியானால் அதற்கான பங்களிப்பை நேரடியாக சமப்படுத்தும் நிதிசெலுத்தும் இடத்தில் செலுத்தலாம்.

- *Pro Senectute Kanton Schaffhausen:* வயதான மனிதர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுக்கான சமூக ஆலோசனை
- *Pro Infirmis Schaffhausen:* ஏதாவது ஒரு குறைபாடு உள்ள மனிதர்களுக்கு மற்றும் அவர்களது உறவினர்களுக்கு, *AHV* வயதை அடையும் வரை.

### தாயான காலத்துக்கான கொடுப்பனவு

தொழில் செய்யும் பெண்களுக்கு, குழந்தை பிறந்த பின்பு குறைந்தது 14 கிழமைகளுக்கு தாயான காலத்துக்கான விடுமுறை எடுக்க உரிமையுண்டு. இந்தக் காலத்தில் இவர்கள் தமது வழமையான ஊதியத்தில் 80% ப் பெறுவார்கள். இதற்காக இவர்கள் குழந்தை பிறப்பதற்கு முன்பாக 9 மாத காலத்துக்கு காப்புறுதி செய்யப்பட்டும் கர்ப்பக்காலத்தில் ஆகக் குறைந்தது 5 மாதங்களுக்கு வேலை செய்தும் இருத்தல் வேண்டும். விபரமான தகவல்களை சமூகக்காப்புறுதித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### தந்தையருக்கான விடுமுறை

தொழில் செய்யும் தந்தை குழந்தை பிறந்து முதல் ஆறு மாதங்களுக்குள் இரு கிழமை தந்தையருக்கான விடுமுறையைப் பெற உரிமையுண்டு (ஆகக்கூடியது 14 நாட்கள் பணம்).

### தொழில்ரீதியான முற்பாதுகாப்பு BV/ ஓய்வூதிய நிதி

சுவிசில் தொழில் செய்பவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை வருடாந்த வருமானமாகப் பெற்றால் தொழில் வழங்குனரின் முற்பாதுகாப்புத் திட்டத்தில் கட்டாயமாகச் சேர்ந்து கொள்ள வேணடும். இதற்கான பங்களிப்பு வருட வருமானத்தில் 7%க்கும் 18% க்கும் இடைப்பட்டதாக இருக்கும். இந்தப் பங்களிப்பில் ஆகக் குறைந்தது அரைவாசிக் கட்டணத்தை தொழில் வழங்குனர் கொடுப்பார். தனிப்பட்ட ரீதியாக தொழில் செய்பவர்கள் இந்தச் சட்டத்துக்கு உட்பட மாட்டார்கள்.

### குடும்பத்துக்கான மேலதிக கொடுப்பனவு

சுவிசில் தொழில் செய்பவர்களுக்கு, அதேபோன்று சொந்தமாகத் தொழில் செய்பவர்களுக்கு மற்றும் தொழில் செய்யாதவர்களுக்கும் குடும்பத்துக்கான மேலதிக கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை உள்ளது, இதை குறிப்பிட்ட நிபந்தனையின் கீழ் தனிப்பட்ட ரீதியாக தொழில் செய்பவர்கள் மற்றும் தொழில் செய்யாதவர்களும் பெற்றுக்கொள்ளலாம். பிள்ளைகள் வெளிநாட்டில் வசித்தால் அவர்களுக்காக குறைந்த தொகையே வழங்கப்படும். பிள்ளைகளுக்கான மேலதிகக் கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை பிள்ளைகளின் பிறந்த மாதத்தின் முதல் திகதியிலிருந்து 16 வயதை நிறைவுசெய்யும் மாதம் வரையாகவுமாகும். பிள்ளைகள் உயர்கல்வி கற்பார்களேயானால் இந்த மேலதிகக் கொடுப்பனவு உயர்கல்வி முடியும்வரை, அதாவது ஆகக்கூடியது 25. வயதை முழுமையாக நிறைவுசெய்யும்வரை வழங்கப்படும்.

## சமூக உதவிப்பணம்

சமூக உதவிப்பணம் பயன், மக்களின் பொருள் மற்றும் தனிப்பட்ட தேவைகளைப் பராமரிப்பது, தணிப்பது அல்லது நீக்குவது. நீங்கள் தனிப்பட்ட தேவையில் இருந்தால், உங்களை ஆதரிக்க அல்லது உங்கள் குடும்பத்தை ஆதரிக்க உங்களிடம் போதுமான பணம் இல்லை என்றால், நீங்கள் சமூக உதவிப்பணம் பெறத் தகுதியுடையவர். வேறு அனைத்து உதவிகள் மற்றும் ஆதரவுகள் கிடைக்காதபோது அல்லது போதுமானதாக இல்லாதபோது மட்டுமே அவர்கள் சமூக உதவிப்பணத்தைப் பெறுகின்றார்கள். சமூக உதவிப்பணத்தன் நோக்கம், விரைவில் அவர்கள் மீண்டும் தங்களைக் கவனித்துக் கொள்வதாகும். சமூக உதவிப்பணம் என்பது காப்புறுதியல்ல, மாறாக அது அரசின் உதவி. சாவ்கவ்சன் மாநிலத்தில் மாநிலமும் நகராட்சியும் இதைக் கூட்டாகப் பொறுப்பேற்கின்றன. ஏதாவது தனிப்பட்ட கேள்விகள் இருந்தால், நீங்கள் வசிக்கும் நகராட்சியைத் தொடர்பு கொள்ளுங்கள்.

# வரிகள்





## வரி செலுத்தும் கடமை

சுவிசில் பொது விடயங்களுக்கான செலவுகள் அதாவது பொருளாதாரக் கட்டமைப்பு, போக்குவரத்து, கல்வி, காவல்துறை மற்றும் இராணுவம், சுகாதாரம், சமூகப் பாதுகாப்பு போன்றவை அநேகமாக தனிப்பட்ட நபர்களின் மற்றும் நிறுவனங்களின் அதேபோன்று பொருட்களுக்கான வரிகளிலிருந்தே செலவுசெய்யப்படுகின்றது. இதன்படி பொதுவாழ்க்கை நன்கு இயங்குவதற்கு அனைவரும் பங்களிக்கின்றனர். தனிப்பட்ட நபர்கள் வருமான- மற்றும் சொத்துக்களுக்கான வரியைச் செலுத்துகின்றனர்.

## வரி எவ்வாறு அறவிடப்படுகின்றது?

சுவிஸ் பெண்கள் மற்றும் ஆண்கள் அதேபோன்று வதிவிட அனுமதி C உள்ள நபர்கள் தாம் செலுத்த வேண்டிய வருமான வரி- மற்றும் சொத்துவரியைக் கணக்கிடுவதற்காக வருடாந்தம் ஒரு வரி வெளிப்படுத்தல் பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும். இதற்கான வரி வெளிப்படுத்தல் விண்ணப்பங்கள் ஒவ்வொரு முறையும் வருட ஆரம்பத்தில் உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். இதை நிரப்புவதற்காக ஒரு இலவசமான மென்பொருள் பாவனைக்கு உள்ளது. வரி வெளிப்படுத்தலை கட்டணமற்ற வரி மென்பொருள் மூலம் நிரப்பி இலத்திரனியல் ரீதியாக (eFiling) அல்லது தபால் மூலம் ஒப்படைக்க வேண்டும். வரிசெலுத்தும் விதிவிடத்தைக் கொண்ட வெளிநாட்டுத் தொழிலாளர்கள் மற்றும் சுவிசில் தங்குமிடத்தைக் கொண்டவர்கள், ஒன்றில் நிரந்தர வதிவிட அனுமதி ஊ இல்லாதவர்கள், அல்லது சுவிஸ் குடியுரிமை உள்ளவர்களை அல்லது நிரந்தர வதிவிட அனுமதி ஊ உள்ளவர்களை திருமணம் செய்திருக்காவிட்டால், வரி நேரடியாக அவர்களது ஊதியத்திலிருந்து கழித்துக் கொள்ளப்படும் (Quellensteuer). இது வருட வதிவிட அனுமதி டீ, அகதித் தஞ்சம் கேட்டோர் அதேபோன்று வாரம் தங்கியிருக்கும் வெளிநாட்டுப் பெண்கள் மற்றும் ஆண்களுக்குப் பொருந்தும். ஒன்றுசேர்த்த வரிகளைக் கட்டாயமாகக் கட்ட வேண்டிய நபர், பின்னராக மேலதிக வருமானத்தைப் பெற்றிருந்தால் ஒரு வரி வெளிப்படுத்தலை செய்ய வேண்டும் (உதாரணமாக வருமானம் ஆகக் குறைந்தது CHF 120'000 ஆக இருந்தால்).

கேள்விகள் இருப்பின் உங்கள் நகர வரித் திணைக்களம், ஒரு ஆலோசனை நிலையம் அல்லது ஒரு நம்பிக்கை நிறுவன ஆண் அல்லது பெண் ஊழியரைத் தொடர்பு கொள்ளுங்கள்.

- சாவ்கவ்சன் மாநிலம் - வரித் திணைக்களம்
  வரி பற்றிய கேள்விகளுக்கான பலவிதமான தகவல்கள், கணனியில் வரியை நேரடியாகக் கணக்கிடல், வரி மென்பொருளைத் தரவிறக்கம் செய்தல்.
- சாவ்கவ்சன் பொருளாதார ஊக்குவிப்பு - *Tax Guide:*
  சாவ்கவ்சன் பொருளாதாரத்தை ஊக்கவிக்கும் வரி வழிகாட்டி. இந்தக் கைநூல் உங்களுக்கு சாவ்கவ்சன் மாநிலத்தில் வரி விடயமான தரவுகளை மிக விளக்கமாகவும் தெளிவாகவும் விளக்குகின்றது.

# திருமணம் மற்றும் சேர்ந்து வாழுதல்









## திருமணம்

ஒரு தம்பதிகளாவதற்கு, சுவிசில் 18வயதை அடைந்திருக்க வேண்டும். ஒரு சிவில் பதிவுத் திணைக்களத்தில் செய்யப்பட்ட திருமணம் மட்டுமே அங்கீகரிக்கப்படும். சாவ்கவ்சன் மாநிலத்தில் சாவ்கவ்சன் நகரின் சிவில் பதிவுத் திணைக்களமே பல்வேறு விடயங்களுக்கும் அதாவது திருமணம், பிறப்பை ஏற்றுக்கொள்ளல் மற்றம் இறப்பு போன்றவைகளுக்குப் பொறுப்பு வகிக்கும். இத் திணைக்களம் உங்களுக்கு திருமணத்தை நிறைவேற்றுவதற்கான நிபந்தனைகள் மற்றும் அதற்குத் தேவையான பத்திரங்கள் குறித்து அறியத்தரும். சுவிசில் ஒரே பாலினத்தைச் சேர்ந்தவர்களும் திருமணம் செய்யலாம்.

## சேர்ந்து வாழுதல்

சுவிசில் வித்தியாசமான வடிவங்களில் சேர்ந்து வாழுதல் இயலும் மற்றும் அது சட்டரீதியானது. பல சோடிகள் திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழ்கின்றனர் (Konkubinat) மற்றும் ஒன்றுசேர்ந்து பிள்ளைகளைக் கொண்டுள்ளார்கள். இந்தச் சோடிகளுக்கு ஒரு கொங்குபினாற் ஒப்பந்தத்தை செய்துகொள்வதற்கு வசதியுள்ளது. இதை ஒரு நொத்தாரிசு உறுதிசெய்ய வேண்டும், உதாரணமாக பிள்ளைகளின் வளர்ப்பு உரிமை மற்றும் அவர்களின் பராமரிப்பு எவை எவருக்கானது அல்லது வீட்டுச்செலவு எவ்வாறு பிரிக்கப்பட வேண்டும் என்பது எழுத்துவடிவமாக ஒழுங்குசெய்யப்பட்டிருக்கும்:

## பிரிதல்

விவாகரத்தை தம்பதிகள் இருவரும் ஒன்றுசேர்ந்து மற்றும் சேர்ந்து வாழ்பவர்கள் அல்லது தம்பதிகளில் ஒருவர் அல்லது -சேர்ந்து வாழ்பவர்களில் ஒருவர் தனியாகக் கேட்க முடியும். இதற்கு வாழும் நகராட்சியிலுள்ள குடும்ப நீதிமன்றம் பொறுப்பு வகிக்கும். அத்துடன் வெளிநாட்டில் செய்யப்பட்ட திருமணங்களும், சுவிஸ் சட்டத்தின்படி விவாகரத்து வழங்கப்படலாம். இதற்கு சுவிசில் வாழ்வதுடன் ஆகக் குறைந்தது ஒரு வருடம் இங்கு வசித்திருக்க வேண்டும். ஒரு வெளிநாட்டு நபர் விவாகரத்தின் பின்னர் அவரது தங்குமிட அனுமதியை தொடர்ந்து வைத்திருக்கலாமா என்பது, பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது. விவாகரத்துக் குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்ள தம்பதிகள்- மற்றும் குடும்ப ஆலோசனை நிலையத்தை அல்லது சட்ட ஆலோசனை நிலையத்தை நாடவும்.

- சாவ்கவ்சன் நகரம் - சிவில் பதிவுத் திணைக்களம்: திருமண ஆயத்தம் குறித்த தகவல்கள்.
- *binational.ch:* /இரு தேசங்களைச் சேர்ந்த சோடிகள் மற்றும் பல்கலாச்சாரக் குடும்பங்களுக்கான தகவல் தளம்
- சேர்ந்து வாழுதல் மற்றும் கர்ப்பவதிகளுக்கான ஆலோசனை நிலையம் சாவ்கவ்சன் *(Beratungsstelle für Partnerschaft und Schwangerschaft Schaffhausen):* சோடிகள்- மற்றும் வாழ்க்கை ஆலோசனை அதேபோன்று கர்ப்பம், பிறப்பு, கருத்தடை குறித்த தகவல்கள்
- *Pink Cross:* சுவிஸ் ஓரினச்சேர்க்கையாளர் அமைப்பு, பரந்தளவிலான ஆலோசனை வசதி.
- *LOS:* ஓரினச்சேர்க்கையாளர் அமைப்பு சுவிஸ்.
- *Transgender Network Switzerland:* /திருநங்கைகள் குறித்த விடயங்களுக்கான தகவல்கள் மற்றும் ஆலோசனை.
- *InterAction:* இன்ரெர்செக்ஸ் பிரச்சினைகள் இன்ரெர்செக்ஸ் மனிதர்களின் விடயங்கள் குறித்த தகவல்கள் மற்றும் ஆலோசனை.





## சொந்த விருப்பில் துணையைத் தேடும் உரிமை - கட்டாய திருமணம் மற்றும் கட்டாயத் தாம்பத்தியம்

சுவிசில் தமது சொந்த விருப்பில் துணைவரை அல்லது துணைவியைத் தேடிக்கொள்வதற்கு உரிமையுள்ளது. குடும்பம் அல்லது வேறு நபர்களுக்கு, ஆண்களையோ அல்லது பெண்களையோ அவர்கள் விருப்பமின்றி திருமணத்துக்குக் கட்டாயப்படுத்துவதற்கு எவ்வித உரிமையும் கிடையாது. இப்படியான கட்டாயம் அடிப்படை மனித உரிமையை மீறுவதாகவும் அதேவேளை சுவிசின் மத்திய சட்டவாக்கத்தின்படி தண்டனைக்குரியதாகும். ஒரு தாம்பத்தியம், வற்புறுத்தலின் பேரில் நடைபெறுமானால், அதைத் திணைக்களம் செல்லுபடியற்றதாக அறிவிக்க முடியும், இது உள்நாட்டில்- அல்லது வெளிநாட்டில் செய்திருந்தாலும் இது பொருந்தும்.

## வீட்டு வன்முறை

வீட்டு வன்முறை சுவிசில் அனுமதிக்கப்படாதது மற்றும் சட்டரீதியான தண்டனைக்கு உட்படுத்தப்படும். வீட்டு வன்முறை எனும்போது, உடல்ரீதியான, உள ரீதியான அல்லது பாலியல் வன்முறைகள் குடும்பத்துக்கு உள்ளாக அல்லது தற்போதைய அல்லது பிரிந்து சென்ற சோடி உறவுகளாக எடுத்துக்கொள்ளலாம். வீட்டு வன்முறையால் பாதிக்கப்படுபவர்களுக்கு உதவி மற்றும் ஆலோசனை வழங்கப்படும் - உளரீதியான வன்முறை அனுபவங்கள் மற்றும் சட்டரீதியான கேள்விகள் விளக்கப்படுவதுடன் ஆபத்தில் தங்கவைக்கும் இடங்கள் குறித்தும் அறியத்தரப்படும். வன்முறையைப் பாவிக்கும் மற்றும் வன்முறையாளரான நபர்களுக்குப வன்முறைகளைக் கைவிட அல்லது செய்யாமலிருக்க புதிய் நடைமுறகள் தயாரிக்கப்படுவதுடன், உதவி வழங்கப்படும்.

- சாவ்கவ்சனில் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான துறைசார் நிலையம்
  *(Fachstelle für Gewaltbetroffene Schaffhausen FSGB):*
  பெண்கள், ஆண்கள், பிள்ளைகள் மற்றும் இளையோருக்கு இலவசமான மற்றும் அடையாளம் வெளிவராத முறையில் வேறு விடயங்களுடன் கட்டாயத் திருமணம், கட்டாயத் தாம்பத்தியம் மற்றும் வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆலோசனை,.
- வன்முறையை செய்பவர்களுக்கான துறைசார்நிலையம், சாவ்கவ்சன், *Konflikt.Gewalt:*
  வன்முறையை செய்பவர்கள் மற்றும் வன்முறையைத் தூண்டும் நபர்களுக்கான இலவச மற்றும் அடையாளம் தெரியாத ஆலோசனை
- கட்டாயத்திருமண துறைசார்நிலையம், *(Fachstelle Zwangsheirat)* சுவிஸ்: கட்டாய திருமணம் மற்றும் கட்டாய தாம்பத்தியத்தால் பாதிக்கப்பட்ட மனிதர்கள் அல்லது அவர்களது சூழலுக்கு ஆலோசனை மற்றும் ஆதரவு வழங்கல்.





## குடும்பக்கட்டுப்பாடு மற்றும் பிறப்பு

ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பது பல மாற்றங்களை ஏற்படுத்தும் அத்துடன் உங்களிலும். சாவ்கவ்சன் பிரதேசத்தில் பல வித்தியாசமான வசதிகள், நீங்கள் இதற்காக ஆயத்தப்படுத்தவும், பிறப்பின் பின்பு ஆதரவு வழங்கவும் உள்ளன. ஒவ்வொரு பிறப்பையும் சாவ்கவ்சன் நகர ஆட்பதிவுத் திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டும். பிள்ளை வைத்தியசாலையில் பிறந்தால், வைத்தியசாலை அப் பிறப்பை பதிவுக்கு அனுப்பி வைக்கும். வீட்டில் குழந்தை பிறந்தால் மருத்துவிச்சிக்கு பிள்ளையின் பிறப்பை பதிவுசெய்ய வேண்டிய கடமை உள்ளது. மருத்துவிச்ச கர்ப்பவதிகளுக்கு, பிறப்பை எதிர்ப்பாத்திருப்பவர்களுக்கு மற்றும் குழந்தை பிறந்த வாரங்களில் துறைசார் முறையில் ஆதரவளிப்பதுடன் கர்ப்பகாலம் தொடக்கம் பிறப்பு இடம்பெற்று குழந்தை பிறந்த வாரங்களில் தொடர்ந்து பராமரிப்பை வழங்குவார்கள்.

- சாவ்கவ்சன் நகரம் - சிவில் பதிவுத் திணைக்களம்: பிறப்புப்பதிவு குறித்த விளக்கப்பத்திரம் மற்றும் தேவைப்படும் சான்றிதழ்கள்.
- சேர்ந்துவாழுதல் மற்றும் கர்ப்பம் *(Beratungsstelle für Partnerschaft und Schwangerschaft):* சோடிகள்- மற்றும் வாழ்க்கை ஆலோசனை அதேபோன்று கர்ப்பம், பிறப்பு, கருத்தடை குறித்த ஆலோசனை மற்றும் தகவல்கள்.
- வைத்தியசாலை சாவ்கவ்சன்: வேறு விடயங்களுடன் பெண்கள் மற்றும் தம்பதிகளுக்கான பிறப்பு ஆயத்தங்களை வழங்குகின்றது.
- சுவிஸ் மருத்துவிச்சிகள் சங்கம்: சாவ்கவ்சன் பிரதேச சொந்தமாகப் பணியாற்றும் மருத்துவிச்சிகளின் இணையத்தளம்.
- பிரசுரம் «எமக்காக இங்குள்ளனர்» சாவ்கவ்சன் மாநிலம்: குழந்தைகள் மற்றும் சிறு பிள்ளைகளுடனான பெற்றோர்களுக்கான ஆலோசனை நிலையங்கள் ஒரு பார்வையில். இந்தப் பிரசுரம் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

## பெற்றோராக இருத்தல்

பிள்ளைகளை வளர்ப்பதென்பது ஒரு பொறுப்பு வாய்ந்த கடமை. பெற்றோர்கள் வழக்கமாக மீண்டும் மீண்டும் தமது பிள்ளைகளுக்கு எது சிறந்ததென்ற கேள்விகளைக் கேட்பார்கள். ஒரு புதிய சூழலில் வாழ்வது, மேலதிகமாக குடும்பத்துக்கு ஒரு சவாலைக் கொடுக்கின்றது. உங்களுக்கு மேலதிகமாக உங்களை நிலைநிறுத்துவதற்கான அறிவு தேவைப்படுகின்றது. இதன்போது ஏனைய பெற்றோருடன் கலந்துரையாடுவது மிகவும் பெறுமதி வாய்ந்தது.

தாய்மார் மன்றும் தந்தையருக்கு வேறு பெற்றோருடன் உரையாட அல்லது உங்கள் பிள்ளையுடன் ஏதாவது செயற்பாடுகளில் பங்குபெற விரும்பினால், பல்வேறு வாய்ப்புகள் உள்ளன. சில வாய்ப்புகள் விசேடமாக சுவிஸ் மற்றும் வெளிநாட்டுப் பெற்றோர் தொடர்பை ஏற்படுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதைவிடவும் பிள்ளை வளர்ப்பு, விருத்தியடைதல் மற்றும் உடல்நலம் குறித்த பெற்றோர்களின் அனைத்துக் கேள்விகளுக்கும் விசேட பயிற்சிபெற்ற ஆலோசனை நிலையங்கள் உதவிபுரியும்.

- *wegweiser.sh* – பிள்ளைகள், இளையோர் மற்றும் குடும்பங்களுக்கான சாப்கவ்சர் தகவல்தளம்: இந்தத் தகவல் தளத்தில் ஆலோசனை நிலையங்கள், ஓய்வுநேர- மற்றும் பராமரிப்பு வசதிகள், பாடங்கள், பெற்றோர் கல்விப்பாடங்கள் மற்றும் பலவற்றைக் காணலாம்.

## வளர்ப்பு, உடல்நலம் மற்றும் வளர்ச்சியடைதல்

சுவிசில் முதல் நான்கு வருடங்களிலும் குழந்தையின் வளர்ச்சியை பரிசீலிப்பதற்காக எட்டு குழந்தை வைத்திய முற்பாதுகாப்புப் பரிசோதனைகள் நடத்தப்படும், இவை அடிப்படைக் காப்புறுதிக்குள் அடங்கும். அதேவேளை தாய்மார் மற்றும் தந்தைமார் ஆலோசனை நிலையம் பெற்றோருக்கு ஆலோசனையும் அவர்கள் பக்கம் இருந்து ஆதரவளிக்கவும் தயாராக உள்ளது. உங்கள் பிள்ளையின் வளர்ச்சி மற்றும் வளர்ப்பு விடயங்களில் அல்லது பாடசாலைப் பிரச்சினைகளில் கேள்விகள் இருப்பின் பலவிதமான ஆலோசனை நிலையங்களைத் தொடர்பு கொள்ளுங்கள், அவர்கள் உங்களுடன் சேர்ந்து அதற்கான தீர்வைத் தேடுவார்கள்.

- *doktor.ch:* சாவ்கவ்சன் மாநிலத்தின் பிள்ளைகள் வைத்தியர் நிலையங்கள்
- *Spitex Schaffhausen* – தாய்மார்- மற்றும் தந்தைமார் ஆலோசனை: உடல்நலம், உங்கள் பிள்ளையின் வளர்ச்சி மற்றும் வளர்ப்புக் குறித்த கேள்விகளுக்கான ஆலோசனை (0-5 வயது).
- *Muk;g tajpy; Heilpädagogik* மற்றும் *Logopädie* துறைசார் நிலையம். *(Fachstelle für Heilpädagogik und Logopädie im Frühbereich)* சாவ்கவ்சன்: பிறப்புத் தொடக்கம் பாலர்பாடசாலை செல்லும் வரையாக, வளர்ச்சியில் சிக்கல்கள் அல்லது குறைபாடுள்ள பிள்ளைகளுக்கான தெளிவுபடுத்தல், ஆலோசனை மற்றும் சிகிச்சை.
- *Spitäler Schaffhausen* - பிள்ளைகள் - மற்றும் இளையோர் உளவள சேவை *(Kinder - und Jugendpsychiatrischer Dienst (KJPD):* பிள்ளைகள் மற்றும் இளையோர் மற்றும் அவர்கள் குடும்பங்களின் உள வளர்ச்சிக்கான துறைசார் நிலையம். *KJPD* தெளிவாக்குதல் மற்றும் சிகிச்சைக்கு மேலாக பெற்றோர் மற்றும் துறைசார் நபர்களுக்கான ஆலோசனையையும் நடாத்துகின்றது.

# குடும்பம் மற்றும் பிள்ளைகள்







- துறைசார் நிலையம் *Teddybär:* பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கு விருத்தி மற்றும் வளர்ச்சியில் கேள்விகள் இருப்பின் அவர்களுக்கான சாவ்கவ்சன் உளவள ஆலோசனை நிலையம்.
- சாவ்கவ்சன் மாநிலம் - பாடசாலை ரீதியான விளக்குதல்கள் மற்றும் ஆலோசனை *(Schulische Abklärung und Beratung SAB):* பாலர் பாடசாலை மற்றும் பாடசாலைகளில் கற்றல்- மற்றும் திறமையை வெளிப்படுத்துவதில் பிரச்சினை, விசேட திறமைகள், உறவுகள்- அல்லது உந்துதல் சிக்கல்கள் அல்லது சமூக நடத்தையில் அசாதாரணங்கள் உள்ள பிள்ளைகளின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான ஆலோசனை.
- சாவ்கவ்சன் மாநிலம் - பிள்ளைகள் மற்றும் இளையோருக்கான சேவை *(Kinder- und Jugenddienst KJD):* பிள்ளைகள் மற்றும் இளையோரின் விருத்தி பாதிக்கப்படுவதாகத் தென்பட்டால், ஆலோசனை மற்றும் உதவி.
- சாவ்கவ்சன் இளையோர் ஆலோசனை: குடும்பத்தில், பாடசாலையில் அல்லது வேலையிடத்தில் பிரச்சனைகள் இருப்பின் அதற்கான ஆலோசனையும் ஆதரவும். இந்த வாய்ப்பு *12-24* க்கு இடைப்பட்ட வயதான இளையோருக்கு அதேபோன்று அவர்கள் குடும்பம், பெற்றோர், கற்பிக்கும் நபர்களுக்கு மற்றும் தொழிற்கல்வி வழங்கும் ஆண் பெண் நபர்களுக்குமாகும்.
- *Pro Junior Schaffhausen/Thurgau:* குடும்பங்கள் மற்றும் பிள்ளைகளுக்கு நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தல் மற்றும் அதற்கான பொருட்களை வழங்குதல்.
- பெற்றோருக்கான தகவல்கள்: -பெற்றோர்கடிதம் *Pro Juventute:* உணவு, பராமரிப்பு, விருத்தியடைதல் மற்றும் வளர்ப்புமுறை குறித்த செயல்முறைத் தகவல்கள். பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தாய்மார்- மற்றும் தந்தைமார் ஆலோசனை நிலையம் அல்லது உங்கள் நகராட்சியில் பெறவும்.
  *- Parentu:* இந்த யீ பெற்றோர்களுக்கு, குழந்தைகள் பிறப்பிலிருந்து 16வது பிறந்தநாள்வரை அவர்களின் விருத்தி குறித்து 15 மொழிகளில் அறியத்தருகின்றது.
- சாவ்கவ்சன் குடும்ப மையம் *Kirchhofplatz* இல் உள்ள குடும்ப மையத்தில் தாய்மார், தந்தையர், தாத்தா பாட்டி மற்றும் சிறு பிள்ளைகளுடனான வேறு பராமரிப்பாளர்கள் சந்திப்பதுடன் தொடர்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு இடமாகும்: இங்கு வேறு விடயங்களுடன் விளையாட்டுத்திடல் அடங்கிய ஒரு சிற்றுண்டிச்சாலை, தாய்மார்- மற்றும் தந்தைமாருக்கு ஆலோசனை வழங்கும் ஆதரவு இடம், ஒரு தகவல்மையம் அத்துடன் வகுப்புகளுக்கான இடங்கள், இவை நிகழ்ச்சிகளுக்காகப் பயன்படுத்த முடியும்.
- சாவ்கவ்சன் நகரம் - ஆரம்பக் குழந்தைப்பருவம் ஆரம்பத்தில் ஊக்கமளிக்கும் துறைசார் நிலையம் சிறு குழந்தைகள் தொடக்கம் பாலர்பாடசாலை வரையாக கல்வி, பராமரிப்பு மற்றும் வளர்ப்பில் தன்னை முழுமையாக ஈடுபடுத்துகின்றது. இத் துறைசார் நிலையம் நல்ல கட்டமைப்பு நிலமைகள் மற்றும் உயர் தராதரங்கள் பராமரிப்பு நிலையங்களில் உள்ளதா எனக் கண்காணித்துக் கொள்கின்றது. இது நகரப் பிரதேசத்தில் ஆரம்ப ஊக்குவிப்பை அறிவித்து, ஒருங்கிணைத்து மற்றும் நபர்களையும் அமைப்புக்களையும் தொடர்புபடுத்துகின்றது.
- நொயெகவ்சன் நகரம் - ஆரம்பக் குழந்தைப்பருவம் ஆரம்பத்தில் ஊக்கமளிக்கும் துறைசார் நிலையம் ஆறு வயது வரையான பிள்ளைகள் உள்ள குடும்பத்திற்கு ஆலோசனை மற்றும் உதவி வசதிகளை நகரத்தில் வழங்குகின்றது. இது ஒழுங்காக குடும்ப நிகழ்வுகளை ஒழுங்குசெய்கின்றது அத்துடன் வாராந்தம் இடம்பெறும் பெற்றோர்-பிள்ளை- *Café* நிகழ்வையும் நடத்துகின்றது.
- மாவட்ட அபிவிருத்தி சாவ்கவ்சன்: சாவ்கவ்சன் நகரத்தின் மாவட்ட அபிவிருத்தி அமைப்பு, குடும்ப மையத்தை இயக்குகின்றது அத்துடன் பல்வேறு மாவட்டச் சந்திப்புக்களையும் நடத்துகின்றது.
- தைங்கென் பிள்ளைகள்- மற்றும் இளையோர் ஆணையம் *- thayngen4kids:* தைங்கென் மற்றும் அதைச் சூழவுள்ள பகுதிகளில் வாழும் பிள்ளைகள், இளையோர் மற்றும் குடும்பங்களுக்கான வசதிகள் குறித்த தகவல்கள்.

## குடும்பத்திற்கு வெளியிலான பராமரிப்பு மற்றும் கல்வி

குடும்பங்களுக்கு சாவ்கவ்சன் மாநிலத்தில் வித்தியாசமான, குடும்பத்துக்கு மேலதிகமான மற்றும் குடும்பங்களுக்கு உதவக்கூடிய வசதிவாய்ப்புகள் உள்ளது. அவையாவன குழந்தைகள் பராமாரிப்பு ஆலோசனை நிலையம், சிறுபிராய- அல்லது விளையாட்டுக் குழு தொடக்கம் பாலர் பாடசாலை மற்றும் ர்ழசவநெ வரையாக.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்துங்கள்! அவர்கள் உங்கள் பிள்ளைகளுக்கு வேறு பிள்ளைகளுடன் தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பத்தை வழங்குகின்றார்கள் மற்றும் உங்களுக்கு வேறு குடும்பங்களுடன் பழகுவதற்கு சந்தர்ப்பம் அமைகின்றது.

### குடும்பத்துக்கு மேலதிகமான பராமரிப்பு மற்றும் மேலதிக வசதிகள்

உங்கள் பிள்ளைக்கு குடும்பத்துக்கு மேலான பராமரிப்புக்கு சாவ்கவ்சன் பாலர் பாடசாலை (KiTa), நாள்குடும்பங்கள், மாணவர்கள் பராமரிப்பு அல்லது அத்துடன் மதிய உணவு உண்ணும் இடங்கள் உள்ளன. ஒவ்வொரு தேவைகளைப் பொறுத்தும் பிள்ளைகள் அங்கு முழு நாளும் அல்லது மணித்தியால அளவில் பராமரிக்கப்படுவார்கள். இவ் வசதிகளுக்கு கட்டணம் செலுத்த வேண்டும். சில நகரங்களில் இந்த நிலையங்களுக்கு உதவி வழங்கப்படுகின்றது. உங்களுக்கு அண்மையிலுள்ள வசதிகள் குறித்து உங்கள் நகரம் அறியத்தருவதுடன் இதற்கான கட்டணங்கள் குறித்தும் தகவல்களை வழங்கும்.



- சாவ்கவ்சன் மாநிலத்தின் - விளையாட்டு சேவை நிலையம், குடும்பங்கள் மற்றும் இளையோர்: குடும்பங்களைக் கண்காணிப்பதற்கும் மேலாக- மற்றும் பாடசாலைக்கு மேலான பராமரிப்புக்கும் மேலாக இந்த நிலையம் மாநிலத்தில் பராமரிப்பு நிலையங்களைக் கண்காணிக்கும் வசதியைக் கொண்டுள்ளது.
- சாவ்கவ்சன் நகர –பிள்ளைகள்- மற்றும் இளையோர் பராமரிப்பு: சாவ்கவ்சன் நகரின் தகவல்தளம் பாலர் பாடசாலைகள், மாணவ மாணவிகள் வீட்டுப்பாடம் செய்யுமிடம், மதிய உணவு மற்றும் பிள்ளைகளைப் பராமரிக்கும் வேறு வசதி பற்றிய தகவல்களை வழங்குகின்றது.
- *Zweidihei* – பிள்ளைகளைப் பராமரிக்கும் அமைப்பு: குடும்பங்களால் பகற்பொழுதில் பிள்ளைகள் பராமரிக்கப்படல்
- செஞ்சிலுவைச் சங்கம் சாவ்கவ்சன்: குடும்பங்களுக்கு ஓய்வு வழங்கும் வசதிகள், குழந்தைகள் பராமரிப்பைத் தொடர்புபடுத்தல்.

## விளையாட்டுக் குழுக்கள்

விளையாட்டுக் குழுக்களில் பிள்ளைகள் பாலர்பாடசாலை செல்லு முன்பாக விளையாடுவதன் ஊடாக தமது மொழியறிவு மற்றும் சமூக உறுதிப்பாட்டை ஊக்குவிக்கப்படுகின்றனர். இந்த விளையாட்டுக்குழு வழமையாக கிழமையில் இரு தடவைகள் 2 முதல் 4 மணித்தியாலங்கள் நடைபெறுகின்றது. சாவ்கவ்சன் விளையாட்டுக்குழுக்கள் மிகச் சிறப்பான விதத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது, உதாரணமாக சில குழுக்கள் காடுகளில் அல்லது பண்ணைகளில் சந்திப்பது அல்லது விசேட நிகழ்வாக மொழியறிவை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகள் இடம்பெறும்.

- சாவ்கவ்சன் விளையாட்டுக்குழுக்களுக்கான துறைசார்- மற்றும் தொடர்பு நிலையம் *(Fach- und Kontaktstelle Spielgruppen Schaffhausen):* விளையாட்டுக் குழுக்களின் பட்டியல் மற்றும் விளையாட்டுக் குழுக்கள் குறித்த தகவல்கள்

## MuKi- / VaKi- / ElKi- தேக அப்பியாசங்கள்

தாய்பிள்ளை-/ தந்தை-பிள்ளை-/ பெற்றோர்-பிள்ளை- தேக அப்பியாசங்கள் என்பது பெற்றோர் தங்களின் சிறு பிள்னைகளான 3-5 வயதானவர்களுடன் அப்பியாசம் செய்வதாகும். இவ் ஒன்றுசேர்ந்த அப்பியாச நேரங்களில் விளையாடுவதன் ஊடாக உடல்நல மற்றும் ஓடிவிளையாடுவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றது.

## மொழியைக் கற்றுக்கொள்வது

பல பெற்றோர்களுக்கு, புதிய சூழலில் எந்த மொழியில் தமது பிள்ளைகளுடன் உரையாடுவது என்ற நிச்சயமற்ற தன்மை உள்ளது. இன்றைய ஆய்வுகளின்படி, பெற்றோர் தமது பிள்ளைகளுடன் தமது முதல்மொழியில் (தாய்மொழியில்) கதைப்பதுடன் அந்த மொழியை தொடர்ந்தும் வைத்துக் கொள்ள வேண்டும். அதேவேளை பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு தமது சூழலில் பேசப்படும் மொழியை கற்றுக்கொள்வதற்கும் உதவ வேண்டும். இதன் அர்த்தம் என்னவென்றால், முன்னுரிமையாக உங்கள் பிள்ளைக்கு வேறு பிள்ளைகளுடன் தொடர்பு ஏற்படும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவது மற்றும் உதாரணமாக அவர்களை ஒரு விளையாட்டுக் குழுவிற்கோ அல்லது பாலர் பாடசாலைக்கோ பதிவுசெய்தலாகும்.



- *Integres* – ஒத்துழைத்து முன்னேற்றும் துறைசார் நிலையம் சாவ்கவ்சன் பிரதேசம்: ஆண் பெண் குடியேற்றவாசிகளுக்கான அன்றாட அனைத்துக் கேள்விகளுக்குமான ஆலோசனை நிலையம். மொழி ஊக்குவிப்பு வசதிகளை அறியத்தருதல்.
- *migesplus.ch* – உடல்நலத்துக்கான சமமான சந்தர்ப்பங்கள்: என்னுடன் கதையுங்கள் மற்றும் நான் சொல்வதைக் கேளுங்கள்: பெற்றோருக்கு பரிந்துரை செய்யும் வழிகாட்டி, எவ்வாறு பிள்ளைகள் பேசக் கற்றுக்கொள்ள உதவ முடியும். இக் கைநூலில், செய்முறை துணுக்குகள், பிள்ளைகள் எவ்வாறு சிறப்பான வகையில் இரண்டு அல்லது பல மொழிகளில் வளராம் என்பது குறித்து விளக்குகின்றது. பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- பிள்ளைகள்- மற்றும் இளையோர் மருத்துவத்துக்கான சுவிஸ் நிறுவனம் *(Schweizerisches Institut für Kinder- und Jugendmedien SIKJM)*– குடும்பத்தில் வாசிப்பதை ஊக்குவித்தல்: பிள்ளைகளுக்கு எவ்வாறு மொழி- மற்றும் வாசிப்பதை ஊக்குவித்து உதவலாம் என்பது குறித்த பெற்றோருக்கான பரிந்துரை. பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

## இளையோருக்கான வசதிகள்

சாவ்கவ்சன் மாநிலம் இளையோருக்கான விடயங்களில் தன்னை மிகவும் ஈடுபடுத்துகின்றது. பிள்ளைகள்- மற்றும் இளையோரை ஊக்குவிக்கும் துறைசார் நிலையம் நகர அமைப்புகளுடன் வலைப்பின்னலான தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது. அது தகவல்கள், ஆலோசனைகளை வழங்கி உதவி செய்கின்றது. சாவ்கவ்சன் நகரம் மற்றும் ஏனைய நகரங்கள் இளையோர் சேவையின் மூலம் இளையோர்களுக்கு உதவுகின்றது.

- சாவ்கவ்சன் நகரம் - இளையோர் சேவை: இளையோர்களின் சேவையானது ஒழுங்காக நகரின் பொது இடங்களுக்குச் செல்வதுடன் எளிதான தொடர்பு வசதிகளையும் வழங்குகின்றது. இளையோர் சேவையின் வசதிவாய்ப்புகள், நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்கள் வெற்றிகரமான ஓய்வுநேர செயல்திட்டங்கள் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கு பங்களிக்கின்றன.
- இளேயோர் குறித்த கேள்விகள், முற்பாதுகாப்பு மற்றும் போதைக்கு அடிமையானவர்களுக்கான உதவி அமைப்பு *(Verein für Jugendfragen, Prävention und Suchthilfe VJPS):* சுகாதாரத்தை ஊக்குவிப்பது, முற்பாதுகாப்பு மற்றும் போதைக்கு அடிமையானவர்களுக்கான சாவ்கவ்சனில் ஆலோசனை வழங்கும் துறைசார் நிலையம்.
- சாவ்கவ்சன் இளையோர் நாடாளுமன்றம்: இளையோர் அரசியலில் பங்கேற்பதற்கான தளம்.

# பாடசாலை





## சாவ்கவ்சன் மாநிலத்தின் கல்வித் திட்டம்

சாவ்கவ்சன் மாநிலத்தின் கல்வித் திட்டம் சாவ்கவ்சன் மாநிலத்தில் பிள்ளைகள் முதலில் Primarstufe செல்கின்றனர் (இரு வருடங்கள் பாலர் பாடசாலை, ஆறு வருடங்கள் Primarstufe) மற்றும் அதன்பின் Sekundarstufe I (Realschule அல்லது Sekundarschule).

Sekundarstufe II வரையாக பாடங்கள் இலவசமானதாகும். Sekundarstufe II க்குப் பின்பாக பாடசாலை உபகரணங்களுக்கு கட்டணம் செலுத்த வேண்டும்.

## கட்டாயமாக செல்லவேண்டிய பாடசாலைக் காலம்

ஆகக்கூடியது 4 வயது முழுமையாக நிறைவடையும்போது பாலர் பாடசாலை செல்லத் தொடங்குவார்கள். பாலர் பாடசாலையில் விசேடமாக விளையாட்டுக்களோடு கற்பது, சமூகத் தொடர்பு மற்றும் மொழியை அறிந்து கொள்வதற்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. ஆரம்பப் பாடசாலை 6 வயதில் தொடங்குகின்றது. ஆரம்பப் பாடசாலை வழமையாக ஆறு வருடங்கள் நடைபெறும். அதன்பின் Real- அல்லது Sekundarschule (Sekundarstufe I). தொடரும். குறைபாடுகள் உள்ள பிள்ளைகள் ஒரு விசேட பாடசாலைக்குச் செல்வார்கள் அல்லது வழமையான வகுப்புகளில் சேர்த்து ஊக்குவிக்கப்படுவார்கள்.

## பாடசாலை மற்றும் பெற்றோருக்கு இடையேயான ஒன்றுசேர்ந்து செயற்படல்

தங்கள் பிள்ளைகளின் வளர்ப்பு மற்றும் கல்வியில் பெற்றோரே பிரதான பொறுப்பு வகிக்கின்றனர். அவர்கள், தங்கள் பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்ப்பதுடன் அவர்கள் ஒழுங்காகப் பாடசாலை வருகின்றார்களா, வகுப்பு நேரங்களை மற்றும் பாடசாலை ஒழுங்குகளைக் கடைப்பிடிக்கின்றார்களா என்பதை கவனித்துக் கொள்ளும் கடமை உள்ளது. அதேபோன்று தமது பிள்ளைகள் வீட்டுப் பாடங்களை செய்கின்றார்களா மற்றும் அதற்குத் தேவைப்படும் நிபந்தனைகள் அனைத்தும் சரிவர உள்ளதா என்பதைக் கண்காணத்துக் கொள்ள வேண்டும்.

பாடசாலை மற்றும் பெற்றோர் தமக்கிடையே ஒன்றுசேர்ந்து செயற்படல் சுவிசில் முக்கிய விடயமாக உள்ளது. பெற்றோர், பாடசாலையிலிருந்து ஒழுங்கான முறையில் பெற்றோர் கலந்துரையாடல் மற்றும் பெற்றோர் ஆலோசனைக்கு அழைக்கப்படுவார்கள். அவர்கள் இதில் பங்கேற்பது மிக அவசிமாகும், இதன்மூலம் பாடசாலைக் காலத்தில் நீங்கள் உங்கள் பிள்ளைக்கு ஆதரவு வழங்குவதுடன் பாடசாலைப் பிரச்சினைகளை அல்லது தொழிற்கல்வியைத் தேர்ந்து கொள்வதில் ஒன்றுசேர்ந்து ஒரு தீர்வை எட்ட முடியும்.

► சாவ்கவ்சன் மாநிலம் - கல்வித் திணைக்களம்: பாடசாலை விடயமான தகவல்கள். உங்கள் பிள்ளையின் பாடசாலை குறித்த அடிப்படைக் கேள்விகளுக்கு, நேரடியாக உங்கள் நகரசபையைத் தொடர்பு கொள்ளுங்கள்.

| கட்டாயமான மக்கள் பாடசாலை | | | | |
|---|---|---|---|---|
| ஆரம்பத்தரம் | பிறிமாத்தரம் | Sekundarstufe I | Sekundarstufe II | Tertiärstufe |
| பாலர் பாடசாலை | பிறிமா பாடசாலை | Sekundarschule<br>Realschule | Mittelschule<br>(மாநிலப் பாடசாலை)<br>துறைசார் கல்வி நிலையம், தொழிற்கல்வி<br>Berufsmatura | பல்கலைக்கழகம்<br>ETH<br>துறைசார்கல்வி நிலையம் உயர் கல்வி நிலையம் |
| 2 வருடம் | 6 வருடம் | 2-3 வருடம் | 2-4 வருடம் | 2-6 வருடம் |





## டொச் இரண்டாவது மொழியாக (DAZ) மற்றும் பிறமொழிபேசுபவர்களுக்கான (EFF) அறிமுக வகுப்புகள்

உங்கள் பிள்ளை டொச் மொழி தெரியாமலோ அல்லது குறை-வாகத் தெரிந்திருந்து பாடசாலை செல்ல வேண்டியிருந்தால், பாடசாலைகள் பல வித்தியாசமான வடிவங்களில் உதவி-களை வழங்குகின்றன. இதற்குத் தகுந்த நடவடிக்கைகளை கற்பிக்கும் நபர்கள் மற்றும் னுயணு பொறுப்பு வகிப்பவர்கள் முடிவுசெய்வார்கள். முன்னுரிமையாக பிள்ளைகள் வழமையான வகுப்புகளில் சேர்க்கப்பட்டு முன்னேற்றப்படுவதுடன் மேலதிகமாக டொச் மொழி புகட்டப்படுவார்கள். வயதான பிள்ளைகள் வழ-மையாக முதல் வருடத்தில் டொச் அதிக நேரம் கற்கும் வகுப்புகளுக்கு செல்வார்கள். அதன்பின் வழமையான வகுப்புகளில் சேர்க்கப்பட்டு முன்னேற்றப்படுவார்கள். சில நகரங்கள் பிறமொழி பேசுபவர்களுக்கான அறிமுக வகுப்புகள் (EfF) நடைபெறுகின்றன.

► சாவ்கவ்சன் மாநிலம் - *Schulportal:* டொச் இரண்டாவது மொழியாக: *Regelschule* யில் வேறு மொழிபேசும் பிள்ளைகளுக்கான முதல்- மற்றும் மேலே தொடரும் ஊக்குவிப்புகள் குறித்த தகவல்கள்.

## தாயக மொழியில் கற்பித்தல் மற்றும் கலாச்சாரம் (HSK)

வேறு மொழிபேசும் மாணவ மாணவிகளுக்கு முதல்மொழி நன்கு தெரிந்திருப்பது அவர்கள் மேலதிகமாக மொழிகளைக் கற்பதற்கு மிகவும் உதவுகின்றது. பல தூதரகங்கள் மற்றும் தனிப்பட்ட அமைப்புகள் வேறுமொழிபேசும் பிள்ளைகள் மற்றும் இளையோருக்கு தாயக மொழி மற்றும் கலாச்சார வகுப்புகளை நடத்துகின்றனர். அதிகமான வகுப்புகள் 2ம் வகுப்பில் ஆரம்பிக்கின்றன. ஒருசில பாடசாலைகள் இதற்கு முன்னராகவும் பாடங்களை வழங்குகின்றன. இதற்கான பதிவுகளை வழமையாக பொதுவான பாடசாலைகளில் செய்துகொள்ளலாம். HSK-பெறுபேறுகள் தவணை ரீதியாக பாடசாலை சான்றிதழ்களில் பதிவு செய்யப்படும்.

► சாவ்கவ்சன் மாநிலம் - பாடசாலைத்தளம்: தாயக மொழி மற்றும் கலாச்சாரம்: *HSK-* பாடத்திட்டம் மற்றும் தற்போதைய வகுப்புகள் குறித்த தகவல்கள்

## தனியார் பாடசாலைகள்

சாவ்கவ்சனில் சில தனியார் பாடசாலைகள் வழமையான பாட-சாலைத் திட்டங்களுக்கு மாற்றீடாக தமது கல்வித் திட்டத்தை வழங்குகின்றன. Die International School of Schaffhausen ISSH சாவ்கவ்சன் அனைத்துலகப் பாடசாலை International Baccalaureate Organization (IBO); என்ற பாடத்திட்டத்தின்படி கல்வி புகட்டுகின்றது, இந்த பாடத்திட்டம் ஆங்கிலத்தில் நடைபெறுகின்றது. Waldorfschule பாடத்திட்டங்களை Waldorf-பாடத்திட்டத்தின்படி வழங்குகின்றது. Stadtrandschule என்பது முழுநாள் பாடசாலை, இதில் 1-9 வரையான பாடசாலை வருடங்கள் உள்ளன. Waldläufer அமைப்பு Neuhauser Wald இல் ஒரு அடிப்படைத் தரத்தை நடத்துகின்றது (1. பாலர்பா-டசாலை தொடக்கம் மற்றும் 2. வகுப்புடன்). Hallau இல் Tan-demschule உள்ளது இங்கு 1 தொடக்கம் 6ம் வகுப்புவரை உள்ளது.

► *International School of Schaffhausen:* அனைத்துத் தரங்களும் *3.* வயதிற்கு மேலாக ஆரம்பித்து *Diploma Years Curriculum* வரையாக.

► *Waldorfschule International School of Schaffhausen:* அனைத்துத் தரங்களும் *3.* வயதிற்கு மேலாக ஆரம்பித்து *Diploma Years Curriculum* வரையாக.

► சாவ்கவ்சன்: முழுநாள்பாடசாலை *1.-9.* பாடசாலை வருடங்களுக்கு

► இயற்கை- மற்றும் *Waldläufer* கல்வி மையம்: இந்த அமைப்பு சாவ்கவ்சன் மாநிலத்தில் இயற்கைவள கல்வி வசதிகளை வழங்குகின்றது.

► *Tandemschule: Hallau* வில் சிறிய கிறிஸ்தவ தனியார் பாடசாலை

# தொழிற்கல்வி மற்றும் உயர்கல்வி






## உயர்கல்விக்கான பாடசாலைகள் மற்றும் தொழில்கல் – SEKUNDARSTUFE II

இளையோர்கள் தமது கட்டாய பாடசாலைக் கல்வியின் பின்பு மேலும் கற்பதற்கான உயர்கல்வி நிலையத்திற்கு அல்லது தொழில்கல்வியைப் பயிலுவர். தொழிற்கல்வியை கற்றுத் தேறுவது, சுவிஸ் கல்வித்திட்டத்தில் ஒரு மிக முக்கிய பகுதியாக அமைகிறது.

அடிப்படையான ஒரு தொழிற்கல்வி, ஒரு தொழிலை வெற்றிகரமாக செய்வதற்கான திறமைகள் மற்றும் பழக்கங்களை பெற்றுத்தருகின்றது. சுவிசில் «duale» என அழைக்கப்படும் தொழில் பழக்கும் முறை நன்கு அறியப்பட்ட ஒன்று. ஒரு தொழிலகத்திலும் அதேவேளை தொழிலைக் கற்றுக்கொடுக்கும் பாடசாலையிலும் சமாந்தரமாக கற்றுக்கொள்வது என இதை விளங்கிக் கொள்ளலாம். ஏறத்தாழ 70% மான இளையோர்கள் இந்த வழியிலேயே தமது தொழில் வாழ்வை ஆரம்பித்துக் கொள்கின்றனர். தொழிற்கல்விக்கு முன்நிபந்தனையாக ஒரு நிறுவனத்தில் ஒரு தொழில் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்.

தொழில்ரீதியான இரு அடிப்படைக் கல்விகள் வித்தியாசமானவைகளாக உள்ளன:

1. **திறமைக்கான சான்றிதழ்:** மூன்று-தொடக்கம் நான்கு வருட அடிப்படைக்கல்வி இறுதியான கற்கைநெறிப் பரீட்சையுடன் நிறைவுபெறுவதுடன் eidgenössischen Fähigkeitszeugnis எனும் சான்றிதழுக்கு எடுத்துச் செல்லும். இந்த eidgenössischen Fähigkeitszeugnis ஏற்கனவே பெற்ற சித்தியுடன் ஒன்றுசேர்ந்து மேலதிகமாக பொதுக்கல்வியான Berufsmaturität கற்பதற்கு வழிவகுக்கும்.
2. **தொழிலிற்கான பரீட்சை:** இரு வருட அடிப்படைக் கல்வி இறுதியாக ஒரு பரீட்சையுடன் நிறைவுபெற்று eidgenössischen Berufsattest என்பதற்கு எடுத்துச் செல்லும். இந்தக் கல்வி வசதி செயல்முறையில் விசேடமாகக் கற்றுக்கொள்வதற்கு வழிவகுக்கும்.

தொழிற்கல்வியுடன் சேர்ந்து அல்லது அது முடிந்த பின்னர் **Berufsmatura** வை செய்யலாம். இந்த **Berufsmaturität** ஒரு பல்கலைக்கழகத்தில் பயிலக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

மாநிலப்பாடசாலை (கிம்நாசியம்) சென்று **Matura** நிறைவுசெய்வது உயர்கல்வி கற்பதற்கு பல்கலைக்கழக அனுமதி பெற முன்நிபந்தனையாக அமைகிறது.

**Die Fachmittelschule** மூன்றுவருட பொதுவான கல்வியை வழங்குகின்றது அத்துடன் ஒரு செயல்முறைப் பயிற்சியாக ஒரு வருடத்திற்கு **Fachmaturitätsabschluss** முடிப்பதால், ஒரு பல்கலைக்கழகத்தில் பயிலக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.


**Die Handelsmittelschule** வணிக நிர்வாகத்தில் **EFZ** விகத் தொழில்சார் இளங்கலைப் பட்டத்துடன் இணைந்து வேறு பட்டங்களையும் பெற வழிவகுக்கின்றது.

- ► சாவ்கவ்சன் மாநிலத்தின் - சேவை நிலையம் தொழிற்கல்வி மற்றும் தொழில் ஆலோசனை: தொழிலுக்கான கல்வி- மற்றும் தொடர்ந்து கற்பது, கற்கும் தொழிலகம் மற்றும் கற்கும்போதான நடைமுறைகள் குறித்த கேள்விகளுக்கு உதவி வழங்கல்.
- ► மாநிலப்பாடசாலை சாவ்கவ்சன்: சாவ்கவ்சன் மாநிலப் பாடசாலை இரு மொழிகளில் *Maturität* கற்பதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. (டொச்- ஆங்கிலம் / டொச்-பிரெஞ்சு).

## உயர் கற்கைநெறி - TERTIÄRSTUFE

சுவிஸ் உயர் கற்கைநெறிகளைக் கற்பதற்கு மிக அதிகளவு சந்தர்ப்பங்களை வழங்குகின்றது. தொழிற்கல்விக்குப் பின்பான உயர் தொழிற்கல்வி அல்லது கிம்நாசியத்திற்குப் பின்னர் கட்டணம் செலுத்த வேண்டும் (Universität, Eidgenössische Technische Hochschule, Pädagogische Hochschule, Fachhochschule, höhere Fachschule).

- ► *Berufsberatung.ch:* உயர்கற்கைநெறி குறித்த அனைத்து விபரங்களும்
- ► *Perspektiven-Studium:* தஞ்சம்கோரி வந்தவர்களுக்கான உயர்கல்வி நுழைவுத் திட்டங்கள் மற்றும் தகவல்கள் கொண்ட தளம்.





## தொழிலைத் தேர்ந்தெடுப்பது மற்றும் உயர்கல்வியைத் தொடர்வது குறித்த தகவல்கள் மற்றும் ஆலோசனைகள்

தொழில் தகவல் நடுநிலையம் (BIZ) சாவ்கவ்சன் மக்களுக்கு தொழிலைத் தேர்ந்தெடுப்பதில், உயர்கல்வியைத் தேர்ந்தெடுப்பதில் தொடரும் தொழில் முயற்சிகள் மற்றும் மேலும் தொடர்ந்து கற்கும் சந்தர்ப்பங்கள் குறித்த தகவல்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்க எந்த வேளையிலும் ஆயத்தமாக உள்ளது. இணையத்தளத்திலும் மற்றும் BIZ am Herrenacker 9 லும் பல்வேறு எண்ணிக்கையான தொழில் வாய்ப்புகள் குறித்து அறிந்து கொள்ளலாம். எவராவது நேரடியாக வந்தால் -முன்பதிவு இல்லாமல்- ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக கேள்விகள் இருப்பின் ஒரு ஆலோசனைத் தவணை தீர்மானிக்கப்படும். ஒரு ஆலோசனையின்போது ஆண் மற்றும் பெண் வாடிக்கையாளர்கள் தமது ஆர்வத்தையும் திறமை-களையும் நன்கு அறிவதுடன் தொழில் சந்தர்ப்பங்கள் குறித்த எண்ணங்களை உருவாக்குவார்கள். 20 வயதுக்கு உட்பட்ட சாவ்கவ்சனில் வாழும் இளையோருக்கு ஆலோசனைகள் அடிப்படையாக இலவசமானதாகும். வயதுவந்தோருக்கு தொழில் விடயத்தில் வழிகாட்டும் ஆலோசனை வழங்கப்படும். சாவ்கவ்சன் மாநிலத்தில் வாழும் நபர்களுக்கு, முதல் மூன்று ஆலோசனை-களும் ஒவ்வொரு வேளைகளிலும் 1 மணித்தியாலம் இலவசம். மேலதிக ஆலோசனைகளுக்கு கட்டணம் செலுத்த வேண்டும்.

- சாவ்கவ்சன் மாநிலத்தின் தொழில் தகவல் மையம் *(Berufsinforma-tionszentrum BIZ):* தொழில்- உயர்கல்வி- மற்றும் மேலதிக நடை-முறை ஆலோசனைகள். பாடசாலை அல்லது தொழிற் கல்வி குறித்த அனைத்துக் கேள்விகளுக்குமான தகவல்கள் மற்றும் ஆலோசனைகள்.

## BRÜCKEN வசதிகள்

எவருக்காவது கட்டாய பாடசாலையின் பின்பு நேரடியாக ஒரு அடிப்படைத் தொழில் கல்வி அல்லது உயர்கல்வி கிடைக்காது விட்டால், அவர் இந்த Brückenangebot க்கு செல்ல முடியும். தொழில் தகவல் நடுநிலையம் (BIZ) நீங்கள் சரியானதை தேர்ந்து கொள்வதற்கான ஆலோசனையை வழங்கும். சாவ்கவ்சன் தொழிற்கல்வி நிலையம் (BBZ) தொழிலை ஆயத்தப்படுத்தும் வருடத்தில் பல வித்தியாசமான திட்டங்களை வழங்குகின்றது. காலதாமதமாகக் குறியேறிய இளையோர் மற்றோர் வயதுவந்தோர், கட்டாய பாடசாலைக்கு சுவிசில் செல்லாமலோ அல்லது சுவிசில் ஒரு குறைவான காலம் சென்றிருப்பின், சாவ்கவ்சன் மாநிலத்தில் ஒரு இருபடியான கல்வித்திட்டம் உள்ளது. முதல் கட்டமாக அடிப்படை பயிற்சித் திட்டமான JUMA des SAH சாவ்கவ்சனில் BBZ தொழிற்பயிற்சி சார்ந்த ஒத்துழைத்து முன்னேறும் நோக்கத்துடன் நடைபெறும். ஒத்துழைத்து முன்னேறும் பாடங்கள் முழுநேர மாதிரியாகவோ அல்லது ஒத்துழைத்து முன்னேறும் பயிற்சியின் ஒரு பகுதியாக பாடசாலையின் மற்றும் நடைமுறைப் பகுதிகளுடன் சேர்ந்த மாதிரியாக மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஏற்பாட்டின் நோக்கமானது, சுவிசில் ஒரு அடிப்படைத் தொழிற்கல்வியைக் கற்க சந்தர்ப்பத்தை வழங்குவதாகும்.

- சாவ்கவ்சன் மாநிலத்தின் தொழிற்கல்வி மையம் *(Berufsbildungszentrum BBZ):* தொழிலுக்கு ஆயத்தப்படுத்தும் வருடம் குறித்த வித்தியாசமான தகவல்கள், விசேடமாக சாவ்கவ்சன் தொழிற்கல்வி நிலையத்தின் வெளிநாட்டு இளையோருக்கான *BBZ* ஒத்துழைத்து முன்னேற்றும் வகுப்பு.
- சுசிஸ் தொழில் உதவிச் சங்கம் *(Schweizerischen Arbeiterhilfs-werks SAH): 16 - 25 t*யதான இளையோருக்கான *JUMA-B-Kurs* எனும் பாடத்திட்டம் அதேபோன்று பல்வேறு சமூக மற்றும் தொழில் முன்னேற்றத்திற்கான கல்வி- மற்றும் உதவி வழங்கும் வசதிகள்.
- ஒத்துழைத்து முன்னேறும் பயிற்சி *INVOL:* ஒத்துழைத்து முன்னேறும் பயிற்சி அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள், தற்காலிகமாக வசிக்க அனுமதிக்கப்பட்டவர்கள், *EU/EFTA-* ஐரோப்பிய ஒன்றிய மற்றும் பொருளாதார ஒன்றியத்திலிருந்து பின்னராக மற்றும் மூன்றாம் நாடுகளிலிருந்து வந்த நபர்கள் *S* அனுமதியிருந்து அவர்கள் கற்பதற்கு முழு விருப்புடன் இருந்தால் அவர்களுக்காக இப்பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- *START! Studium:* சூரிச் பல்கலைக்கழகத்தில் ஒத்துழைத்து முன்னேறும் பயிற்சி புலம்பெயர்ந்து குடியேறிய பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கற்கத் தகுதியுள்ளவர்களுக்காக உள்ளது. இத் திட்டத்தில் பங்கேறபவர்கள் மொழி, துறைசார் மற்றும் ஒழுங்கு ரீதியாக சுவிசில் ஒரு கற்கைநெறியை மேற்கொள்ள ஆயத்தப்படுத்தப்படுவார்கள்.

# உடல்நலம்





## வைத்திய பராமரிப்பு

சுவிசில் அதிகமான நபர்களுக்கு ஒரு பெண் குடும்ப வைத்தியரோ அல்லது ஒரு ஆண் குடும்ப வைத்தியரோ இருப்பர், உங்கள் உடல்நலம் குறித்த கேள்விகளுக்கு, முதலில் தொர்புகொள்ள வேண்டிய நபர் இவர்களாகவே இருப்பர். சாவ்கவ்சனில் இரு வைத்தியசாலைகள் உள்ளன.: மாநிலத்தின் பொது வைத்திய நிலையம், மற்றும் தனியார் கிளினிக் டீநடயசை. வைத்தியசாலைக்கு அனுப்புவது பொதுவாக பெண் குடும்ப வைத்தியர் அல்லது ஒரு ஆண் குடும்ப வைத்தியர். வைத்தியரின் கடமை நேரம் தவிர்ந்த வேளைகள் அத்துடன் அவசர வேளைகளில் அவசர-சேவை நிலையத்தை அல்லது மாநில வைத்திய நிலையத்தின் அவசரப்பிரிவிற்குச் செல்லலாம்.

- சாவ்கவ்சன் மாநில வைத்தியர்களின் சங்கம்: வேறு விடயங்களுடன் சாவ்கவ்சனில் தொழில்புரியும் ஆண் / பெண் வைத்தியர்களின் தொடர்பிற்கு.
- குடும்பவைத்தியர்களின் அமைப்பு, சாவ்கவ்சன் *(Hausarztverein)* பிரதேசத்தில் கடமையிலுள்ள குடும்ப வைத்தியர்களுடனான தொடர்பிற்கு.
- இந்தப் பக்கத்தில் நீங்கள் மாநில வைத்தியநிலையம் ( புனர்வாழ்வு மற்றும் இடைக்காலப் பராமரிப்பு) *Breitenau* மனநோய்நிலையம்-அதேபோன்று பிள்ளைகள் -மற்றும் இளையோருக்கான மனநோய்ப்பகுதி குறித்த தகவல்களைக் காணலாம்.
- தனியார் வைத்தியநிலையம் *Belair* சாவ்கவ்சன்: தனியார் வைத்தியநிலையம் வசிப்பிடம் *Breite.*

## மருத்துவ அவசர வேளைகள்

சாவ்கவ்சன் மாநிலத்தில் அவசர வேளைச் சிகிச்சை பெண் மற்றும் ஆண் வைத்தியர்களால் அவர்களது தனிப்பட்ட சிகிச்சை நிலையத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. வழமையாக சிகிச்சை நிலையங்கள் திறந்திருக்கும் நேரத்தில் அவசர தேவை ஏற்பட்டால் உங்கள் குடும்ப வைத்தியரை நாடுங்கள். அவர்கள் இல்லாதுவிடின் அப்போது அவசர சேவையில் இருக்கும் சிகிச்சை நிலையத்தின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கத்தை அறிந்து கொள்ளுங்கள். இவை திறந்திருக்காத நேரங்களில் சாவ்கவ்சன் அவசரசேவைப் பிரிவை நாடுங்கள், இது சாவ்கவ்சன் வைத்திய நிலையத்தின் அவசரசேவைப் பகுதியில் அமைந்திருக்கும். இங்கு இப் பிரதேசத்தின் ஆண் மற்றும் பெண் குடும்ப வைத்தியர்கள் மாலைவேளைகள் மற்றும் வாரஇறுதியில் முழுநாளும் கடமையாற்றுவார்கள். மாநில வைத்திசாலையிலுள்ள அவசரசிகிச்சை நிலையம் எந்த நேரத்திலும் 365 நாட்களும் திறந்திருக்கும்.

- அவசரத் தேவைகளில் என்ன செய்வது:
தொலைபேசி இலக்கம் *052 634 34 00* ஊடாக அதற்கான தொலபேசி மையம் உங்களுக்குப் பொருத்தமான அவசர சேவைப்பிரிவிற்கு தொடர்புபடுத்துவார்கள். இது நாள் பொழுதாக இருந்தால் ஒரு குடும்பவைத்தியருக்கு தொடர்புபடுத்தும். உயிராபத்து உள்ள அவசர தேவையாக இருந்தால் தொலைபேசி இலக்கம் *144* ஐ அழைக்கவும்.
- தெளிவுபடுத்தல்- மற்றும் நெருக்கடியில் தலையீடு செய்தல் *(Abklärungs- und Krisen-interventionsstelle KiSH)* தெளிவுபடுத்தல்- மற்றும் நெருக்கடியில் தலையீடு செய்தல் (*KiSH)* என்பது மனநோய் சேவையின் வசதியாகும், இது *Breitenau* மனநோய் மையத்தில் உள்ளது. இங்கு குறுகிய காலத்துக்குள் ஒரு கலந்துரையாடலுக்கான தவணையை ஏற்படுத்துவார்கள் *(24* மணித்தியாலங்களுக்கு உள்ளாக ஆகக்கூடியது *48* மணித்தியாலங்கள்). நெருக்கடியான நிலைமைகளைச் சமாளிக்க உதவிக்கு தொலைபேசி இலக்கம் *052 634 72 75 (1700* மணிக்குப் பின்பான மாலைவேளைகளில் காலை 8.00 மணி வரை அதேபோன்று வார இறுதிகளில் தொலைபேசி இலக்கம் *052 634 34 34.)*

## மருத்துவ- மற்றும் விபத்துக் காப்புறுதி

நீங்கள் வெளிநாட்டிலிருந்து இங்கு வந்திருந்தால் 3 மாதங்களுக்குள்ளாக ஒரு மருத்துவ- மற்றும் விபத்துக் காப்புறுதியை கட்டாயமாக செய்துகொள்ள வேண்டும். நீங்கள் வேறு மாநிலத்திலிருந்து இங்கு வந்திருந்தால், 30 நாட்களுக்குள்ளாக ஒரு காப்புறுதி அத்தாட்சியை உங்கள் புதிய நகரசபையில் சமர்ப்பிக்க வேண்டும். மருத்துவக் காப்புறுதி நிறுவனங்கள் சட்டரீதியாக உங்களை அடிப்படைக் காப்புறுதி செய்வதற்கு கடமைப்பட்டுள்ளன. தொழில்செய்யும் நபர்கள் பொதுவாக விபத்துக்கு எதிராக் காப்புறுதி செய்யப்பட்டுள்ளனர். கவனித்துக் கொள்ளுங்கள், நீங்கள் இரண்டு தடவைகள் காப்புறுதி செய்யப்படாமல் இருப்பதை. அடிப்படைக் காப்புறுதி சிகிச்சை வழங்கும் ஆண் மற்றும் பெண் வைத்தியர்களின் அனைத்து வைத்தியசாலைகளிலும், அதாவது சாவ்கவ்சன் மாநிலத்தின் பட்டியலில் உள்ள அனைத்துச் சிகிச்சைச் செலவுகளையும் பொறுப்பேற்கும். சிகிச்சைச் செலவின் ஒருபகுதி எப்பொழுதும் சொந்தமாகச் செலுத்த வேண்டும் (பிரென்செய்ஸ் காப்புறுதி மற்றும் சொந்தத்தில் பொறுப்பேற்பதில் தங்கியுள்ளது). காப்புறுதி செய்யப்பட்ட நபர்கள், சோடிகள் மற்றும் குடும்பங்களுக்கு அவர்களுக்கு பொருளாதாரப் பிரச்சினைகள் இருப்பின் அரசு உதவிகளை வழங்கும். சாவ்கவ்சன் மாநிலத்தின் சமூகக் காப்புறுதித் திணைக்களம் இந்த உதவி விண்ணப்பங்களைப் பரிசீலித்து முடிவுசெய்யும். அடிப்படைக் காப்புறுதிக்கு மேலாக ஒவ்வொரு நபரும் மேலதிகமான காப்புறுதியைச் செய்துகொள்ளலாம், இது உதாரணமாக வைத்தியசாலையில் தனிப்பட்ட நபர்கள் சிகிச்சைபெறும் பிரிவில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் வசதியைக் கொடுக்கும்.








- சுகாதாரத்திற்கான மத்திய அமைச்சு *(Bundesamt für Gesundheit BAG):* சுகாதாரம், காப்புறுதி போன்றவை குறித்த தகவல்கள்
- சமூகக் காப்புறுதித் திணைக்களம் சாவ்கவ்சன் *(Sozialversicherungsamt SVA)* உதவிக்கான விண்ணப்பப்படிவங்கள், உதவி வழங்குதலுக்கான தகவல்கள் மற்றும் சமூகக்காப்புறுதிகள் பற்றிய தகவல்கள்
- சுகாதாரத்திற்கான மத்திய அமைச்சு *(Bundesamt für Gesundheit BAG): – Priminfo:*அடிப்படைக் காப்புறுதிக்கான மருத்துவக்காப்புறுதிக் கட்டணத்தை ஒப்பிட்டுப்பார்த்தல்.
- *migesplus.ch* – சுகாதார வழிகாட்டி சுவிஸ்: அனைத்து சுகாதார விடயங்கள் குறித்தும் விபரமான சுகாதாரக் கைநூல், வெளியிட்டது சுகாதார மத்திய அமைச்சு மற்றும் சுவிஸ் செஞ்சிலுவைச் சங்கம், பல்வேறு மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.

## பற் பராமரிப்பு

பற்சிகிச்சை, குறைந்த விதிவிலக்காக, கட்டாய அடிப்படைக் காப்புறுதியின் மருத்துவ வசதிக்குள் அடங்கவில்லை. அதிகமான பற்சிசிக்சைச் செலவுகள் அதற்கேற்றவாறு நோயாளர்களாலேயே சொந்தமாகச் செலுத்தப்படுகின்றது. பிள்ளைகளுக்கு ஒரு விசேட பற்பராமரிப்புக் காப்புறுதி செய்துகொள்ளலாம்.

சாவ்கவ்சன் மாநிலத்தில் பிள்ளைகளுக்கும் இளையோருக்கும் பாடசாலை பல் கிளினிக் வசதி வழங்குகின்றது. பாடசாலை பல் கிளினிக், பாலர் பாடசாலை மற்றும் மாணவ மாணவிகளுக்கு வருடாந்தம் ஒரு பரிசோதனையை மேற்கொள்ளும். இந்தப் பரிசோதனை ஒவ்வொரு வேளையிலும் இலவசம் மற்றும் கட்டாயமானது. பாடசாலை பல் கிளினிக்கின் மேலதிக சேவைகள் அனைத்திற்கும் மாநிலத்தால் பக்க உதவி வழங்கப்படுகின்றது, ஆகவே நீங்கள் மலிவான கட்டணத்தில் சிகிச்சை பெற முடியும். ஆண் மற்றும் பெண் முற்பாதுகாப்பு உதவியாளர்கள் பாலர் பாடசாலைகள், பிறிமா பாடாசலைகள் மற்றும் ஒறியென்றெறியுறுங் பாடசாலைகளுக்கு வருகை தந்து, பிள்ளைகளுக்கு வாய் சுகாதாரம் மற்றும் சரியான உணவு குறித்துக் கற்பிப்பார்கள்.

- பாடசாலை பல் கிளினிக் சாவ்கவ்சன் மாநிலம்: பாடசாலை பல் கிளினிக் சாவ்கவ்சன் மாநிலம் பரிசோதனை மற்றும் சிகிச்சை இவற்றுக்கு மேலாக பற்களை முற்பாதுகாப்பது பற்றிய தகவல்களையும் வழங்குகின்றனர்.

## சாவ்கவ்சன் மாநிலத்தில் உதவிகள் மற்றும் பராமரிப்புகள்

மாற்றமுடியாத நோய்கள் அல்லது இயலாத தன்மை, உடம்பிற்குப் பிரச்சினைகளைத் தருவதுடன் மேலும் சில சிக்கல்களை நாளாந்த வாழ்வில் கொண்டு வருகின்றது. அத்துடன் வயோதிப மனிதர்களும் இப்படியான புதிய சிக்கல்களுக்கு முகம்கொடுக்கின்றனர். வீட்டில் வைத்துப் பராமரிப்பது மற்றும் உதவிசெய்வது தவிர இதற்குப் பதிலான வித்திசாயமான வசிக்கும் வசதிகள் அதாவது வயோதிப- மற்றும் பராமரிப்பு நிலையங்கள், வயோதிபர் வாழும் இடம் போன்றவை. சாவ்கவ்சனில் பல எண்ணிக்கையான ஆலோசனை நிலையங்கள் அதாவது உதாரணமாக Pro Senectute அல்லது Pro Infirmis அத்துடன் Spitex ன் அல்லது செஞ்சிலுவைச் சங்க உதவிச்சேவைகள், இவை உங்களுக்கு நாளாந்தப் பராமரிப்பை செய்வதற்கு உதவி செய்ய முடியும்.

- *Pro Senectute Kanton Schaffhausen:* பலவிதமான ஆலோசனை வசதிகள், ஓய்வுநேர வசதிகள் மற்றும் வயோதிப மனிதர்களுக்கு நாளாந்த உதவிகள்.
- *Pro Infirmis Thurgau-Schaffhausen:* மனநோய், உடல் அல்லது அறிவாற்றல் இயலாமையில் உள்ள மனிதர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுக்கான ஆலோசனை மற்றும் உதவிகள், *AHV* வயதை அடையும் வரையாக (பெண்கள் *64 /* ஆண்கள் *65)*
- *Krebsliga, Lungenliga, Rheumaliga* மற்றும் *Diabetes Schaffhausen:* பல்வேறு தேவைகளிலுமுள்ள பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுக்கான உதவிகள்.
- *Spitex Kanton Schaffhausen: Spitex* ன் சேவை சுகாதார- மற்றும் நோயாளர் பராமரிப்பில் வீட்டு வேலைகளில் ஆறுதல் அளிப்பது அல்லது சமூகப் பராமரிப்பு சேவை.
- சுவிஸ் செஞ்சிலுவை சாவ்கவ்சன் - சாவ்கவ்சன் மாநிலம் சுகாதார, சமூக மற்றும் ஒத்துழைத்து முன்னேற்றுதலில் பலவிதமான உதவிச் சேவைகளை வழங்குகின்றது. முக்கிய சேவையாக போக்குவரத்துச்சேவை, அவசர அழைப்புச் சேவை மற்றும் ரெட் குறொஸ்-ஆறுதல் கொடுக்கும் சேவை.
- *palliative.ch:* சுவிஸ் சங்கம், இது சர்வதேச வலைப்பின்னலைக் கொண்டது, பாலியாற்றிவ்-பராமரிப்பு-விசேட தேவைகளின்போது ஊக்கமளித்தல் மற்றும் தகவல் வழங்குதல்.
- இளையோர்களது கேள்விகள், முற்பாதுகாப்பு மற்றும் போதைக்கான உதவி சாவ்கவ்சன் *(Verein für Jugendfragen, Prävention und Suchthilfe Schaffhausen VJPS):* சுகாதாரத்தை ஊக்குவித்தல், முற்பாதுகாப்பு, போதைக்கான ஆலோசனை மற்றும் சமூகவேலை தேடுதல் அதேபோன்று *Gassenküche* சாவ்கவ்சன்.

# ஓய்வுநேரம் மற்றும் கலாச்சாரம்





## சாவ்கவ்சனைக் கண்டுகொள்ளல்

சாவ்கவ்சன் பிரதேசம் பன்முகத்தன்மையாகக் கண்டுகொள்ளும் பயணங்களுக்கு அழைக்கிறது. சாவ்கவ்சன் மற்றும் ஸ்ரைன் அம் றைனுக்கு இடையே உள்ள றைன் நிலப்பரப்பு மாற்றங்கள் நிறைந்த ஒன்றுடன் ஒன்று ஒப்பிட முடியாத இயற்கை அழகைக் காட்டி நிற்கும் இடங்களாகும். கோடை காலத்தில் சாவ்கவ்சனின் அரைப்பகுதி மக்கள் குளிர் ஈரலிப்பான றைன் நதியின் பல்வேறு றைன் குளியல்களில் ஒன்றைத்தானும் அனுபவிப்பர் அல்லது செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள தாழ்நிலப்பரப்புப் பக்கமாகச் சென்று அழகை இரசித்துக் கொள்வர். பருவக் காலநிலை மாற்றங்களின்போது றைன் நதி வீழ்ச்சியின் அழகு கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருக்கும். பனி படிந்துள்ள குளிர்காலத்தில் செல்வது மிகவும் கவர்ச்சிகரமாக இருக்கும். கோடை காலத்தில் இந்த இயற்கை அதிசயம் வான வேடிக்கை நிகழ்வுகளுடன் கொண்டாடப்படும். மேலும் மலைத் தொடர்கள் நிறைந்த நிலப்பரப்பு மற்றும் சுநயைவள க்கு அண்மையாக உள்ள காடுகள் மலையேறி நடப்பதற்கு, நடை போடுவதற்கு மற்றும் சுற்றுலா மேற்கொள்வதற்கு அழைக்கிறது. மிகவும் சிறப்பாக தொடர்பு படுத்தப்பட்டுள்ள மிதிவண்டிப் பாதைகள் மிதிவண்டிச் சுற்றுலா செய்வதற்கு மிகவும் உகந்ததாகும்.

- *KulturLegi Schaffhausen: KulturLegi* உடன் சமூகஉதவிப்பணம் பெறுபவர்கள் அல்லது குறைந்த வருமானம் பெறுபவர்கள் 70 விழுக்காடு வரையான பல்வேறு வசதிகளைப்பெற்று சாவ்கவ்சன் மாநிலத்தில் மற்றும் முழு சுவிஸ் நாட்டிலும் இலாபமடைவார்கள்.
- *Schaffhauserland Tourismus:* சாவ்கவ்சன் மாநில சுற்றுலாத்துறை பல்வேறு எண்ணிக்கையான சுற்றுலா இடங்கள், சிறிய நடைப்பயணங்கள் மற்றும் தற்போதைய நிகழ்வுகள் குறித்து தகவல்களை வழங்குகின்றது. உணவு விடுதிகள், விளையாட்டு, கலாச்சாரம் மற்றும் மேலதிக ஓய்வு வசதிகள் மற்றும் பொதுவாக சுற்றிப்பார்ப்பவர்களுக்கான, குழுவாக சுற்றிப்பார்ப்பவர்களுக்கான, பயணச்சீட்டு, நிகழ்ச்சிகள் மற்றும் வசதிகள், நகர நாடகமண்டபம், கப்பல் போக்குவரத்து, நிகழ்ச்சிகள் மற்றும் பணச்சீட்டு விற்பனைக்கு உள்ளது.
- *KSS Freizeitpark:* பல வித்தியாசமான விளையாட்டுப் பயிற்சிகளான நீச்சல் தொடக்கம் பனிச்சறுக்கல் வரையாக மற்றும் கடற்கரைக் கரப்பந்தாட்டம் தொடக்கம் மசாஜ் மற்றும் தேக அப்பியாசம் வரையாக வழங்குகின்றது.
- *wanderland.ch:* பிரதேச மற்றும் உள்நகர நடைப்பாதைகள் வழிகாட்டுதலுடன் மற்றும் நடைப்பயண வழி இணையத்தில் நேரடியாகப் பெற.
- பிரதேச இயற்கைப்பூங்கா சாவ்கவ்சன்: இயற்கையை இரசித்தல் சாவ்கவ்சன் குறித்த தகவல்கள்.
- *Naturpark Schaffhausen:* சாவ்கவ்சன் பிரதேசத்தில் சுற்றுலா செய்வதை இணையத்தில் நேரடியாகத் திட்டமிடல்.
- *rheinfall.ch:* நிகழ்வுகள் பற்றிய தகவல்கள் மற்றும் றைன்நதி வீழ்ச்சியின் இயற்கை வளத்தினை வழிகாட்டுதலுடன் சுற்றிக் காண்பித்தல்.

## ஓய்வெடுத்தல் மற்றும் ஓய்வுநேரம்

நாளாந்த சந்திப்புக்கள் மற்றும் ஓய்வுநேர செயற்பாடுகள் நலமாக வாழ்வதற்கு மிகவும் முக்கியமானவை. இவை ஓய்வெடுக்க, கற்றுக்கொள்ள, சுகாதாரமாகவாழ மற்றும் நண்பர்கள் வட்டத்தையும் அதிகரிக்கச் செய்கின்றது. புதிய வசிப்பிடத்தில் வேரூண்டுவதற்கும் இது உதவுகின்றது.

**சுற்றுலா மையங்கள்- மற்றும் கிராம வாழ்க்கை**

கிராமங்கள் மற்றும் சுற்றுலா மையங்கள் விழாக்களை அல்லது நிகழ்ச்சிகளை நடத்துகின்றன, அதில் நீங்கள் பங்கேற்கலாம் அல்லது ஆர்வத்துடன் சேர்ந்து செயற்படலாம். இது குறித்து சிறப்பாக உங்களுக்குத் தெரிந்தவர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அயலாரிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள். மேலும் சுற்றுலா மையங்கள் மற்றும் கிராமங்களில் விளையாட்டு மைதானங்கள், நீச்சல் தடாகங்கள் அல்லது சுற்றுலா நடுநிலையங்கள் போன்ற சந்திக்கும் இடங்கள் அமைந்திருக்கும், அவைகள் ஊடாக தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும். நீங்கள் விசேடமாக உங்களை அண்மித்த சூழலின் அபிவிருத்தியில் அக்கறை கொண்டால் மற்றும் சுற்றுலா மையத்தில் அல்லது கிராமத்தில் சேர்ந்து வாழ்வதில் ஏதாவது பங்களிப்பை செய்ய விரும்பினால், நீங்கள் சுற்றுலா மைய- அல்லது கிராமச் சங்கங்களில் உங்களை ஈடுபடுத்தலாம். சாவ்கவ்சன் மாநிலத்தின் நகரங்கள் - அதிகமாகத் தனது பெயர்களிலேயே- ஒரு இணையத்தளத்தைக் கொண்டுள்ளது, இது உங்களுக்கு தற்போதைய நிகழ்வுகள், அரசியல் மற்றும் நிர்வாகம் குறித்து அறியத்தரும். சாவ்கவ்சன் நகரத்தில் இது சுற்றுலா மையங்களின் அபிவிருத்தி குறித்த விடயங்கள் மற்றும் திட்டங்கள், ஒன்றுசேர்ந்து வாழ்வதற்கு உதவுவதுடன், கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வது மற்றும் சாவ்கவ்சன் நகர சுற்றுலா மையங்களை ஊக்குவிப்பதுடன் அதன் வாழ்க்கைத் தரங்களையும் திறமையடையச் செய்கின்றது. இது பல வித்தியாசமான சுற்றுலா மையங்களில் சந்திப்புக்களை ஏற்பாடு செய்கின்றது, இதில் அனைத்து வயதுடைய மற்றும் பல்நாட்டு மக்களும் ஒன்றுகூடுகின்றனர்.

- சாவ்கவ்சன் நகரம் - *Quartiervereine:* சாவ்கவ்சன் சுற்றுலாமையங்களின் பல்வேறு செயற்பாட்டு வசதிகள் மற்றும் தகவல்கள்.
- *Benevol* சாவ்கவ்சன்: சுயவிருப்பு வேலைகளை அறியத்தருவது மற்றும் அனைத்து வாழ்வுப் பகுதிகளுக்கும் பணிக்காக சுயவிருப்பு வேலையாட்களைத் தேடும் துறைசார் நிலையம்.
- *Quartierentwicklung Schaffhausen:* பல்வேறு சாவ்கவ்சன் சுற்றுலாமைய அபிவிருத்தி குறித்த சந்திக்கும் இடங்கள் மற்றும் திட்டங்கள்.






### சங்கங்கள் மற்றும் குழுக்கள்

மாநிலத்தில் மற்றும் நகரங்களில் பெண்களுக்கு, ஆண்களுக்கு, பிள்ளைகளுக்கு, இளையோருக்கு மற்றும் வயதான மனிதர்களுக்கான பல வித்தியாசமான அமைப்புக்கள் உள்ளன. உதாரணமாக இளையோர் அமைப்பாக சாரணர் இயக்கம், இயற்கைவள மற்றும் வரலாற்று அமைப்புகள், போக்குவரத்துக் குழுக்கள், சதுரங்கக் குழுக்கள், பெண்கள் அமைப்புக்கள், இசை- மற்றும் கலாச்சார அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் அனைத்து வகையான விளையாட்டுக் குழுக்கள் உள்ளன. பல நகரங்களில் இவ்வாறான அமைப்புகளில் பெற்றோர்-பிள்ளைகள்-தேகஅப்பியாசம் (ElKi-Turnen), உடல்நல அப்பியாசம், வயது வந்தவர்களுக்கான அப்பியாசம், பாடல் குழுக்கள் மற்றும் நாடகக் குழுக்களுக்கான வசதி உள்ளது. புதிய உறுப்பினர்கள் சேர்ந்து கொள்வதில் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள். இவ்வாறான வித்தியாசமான வசதிகள் குறித்து நீங்கள் வாழும் நகரத்தில் கேட்டறிந்து கொள்ளுங்கள். நகரத்திலுள்ள அமைப்புகள் குறித்து நகரத்தின் இணையத்தளத்தில் நீங்கள் விபரங்களைக் காணலாம்.

- *wegweiser.sh* – பிள்ளைகள், இளையோர் மற்றும் குடும்பங்களுக்கான சாவ்கவ்செர் தகவல் தளம்: இணையத்-தளத்தில் ஆலோசனை நிலையங்கள், ஓய்வுநேர- மற்றும் பராமரிப்பு வசதிகள், பாடங்கள், பெற்றோர் கல்விப் பாடங்கள் மற்றும் பலவற்றைக் காணலாம்.
- *Integres* –ஒத்துழைத்து முன்னேற்றும் துறைசார்நிலையம் சாவ்கவ்சன் பிரதேசம்: மாநிலத்தில் பல எண்ணிக்கையான வெளிநாட்டவர்- அல்லது கலாச்சார அமைப்புக்கள் உள்ளன. இது குறித்து அறிந்துகொள்ள நீங்கள் ஒத்துழைத்து முன்னேற்றும் துறைசார்நிலையத்தின் இணையத்தளத்திற்கு சென்று, வெளிநாட்டவர் அமைப்புக்கள் என்ற கோப்பில் விபரங்களை அறிந்து கொள்ளுங்கள்.

### கலாச்சாரம்

சாவ்கவ்சன்பிரதேசம்பல்வேறு வித்தியாசமான மற்றும்பன்முகத்தன்மை கொண்ட கலாச்சார வசதிகளைக் கொண்டுள்ளது. ஆரம்பமாக பல நகரங்களில் நாடக அரங்குகள் மற்றும் சிறு மேடைகள் பிரதேச ரீதியாக நாடக விழாக்களை ஒழுங்குபடுத்துகின்றன, இங்கு நீங்கள் ஒரு சிறப்பான நாடகங்களை கண்டு இரசிக்கலாம். சாவ்கவ்சன் மற்றும் ஸ்ரைன் அம் றைன் இல் பல வித்தியாசமான திரைப்பட நிகழ்வுகளை சினிமாவில் கண்டுகழிப்பதுடன், இதற்கும் மேலாக சிறிய, அழகான திரைப்பட விழாக்கள் மற்றும் விறுவிறுப்பான Munotzinne திறந்தவெளி அரங்கில் காணலாம். இப்பிரதேசத்திற்கு அப்பாற் சென்றால் பிரபல்யமான Allerheiligen நூதனசாலை மற்றும் பல்வேறு காட்சிச்சாலைகள் விறுவிறுப்பான காட்சிகளைக் காண அழைக்கிறது. உள்ளூர் கண்காட்சியகமான சாவ்கவ்சன் Hallau வில் உள்ள வைன் நூதனசாலை பிரதேசத் தனித்துவத்தையும், நாகரீக மற்றும் பழக்கவழக்கங்களையும் விளக்குகின்றது. சாவ்கவ்சனின் ஜாஸ் இசைக்கச்சேரியுடன், Stars in Town எனும் இசைவிழா, அனைத்துலக Bachfest மற்றும் இசைநிகழ்வு «Schaffhausen Klassik», அதேபோன்று பல்வேறு இசைக்கச்சேரி இடங்கள் கலாச்சார மையம; Kammgarn போன்றவை மற்றும் Musikclub TapTap போன்றவைகளுக்கு இசைவிரும்பிகள் தமது பணத்தை வழங்கி ஆதரிப்பார்கள்.

- *kulturraum.sh:* சாவ்கவ்சன் நகரம் மற்றும் மாநிலம் கலாச்சாரத் தளம் கலாச்சாரத்தை மேம்படுத்த தற்போதைய நிகழ்வுகள், மண்டபங்கள் மற்றும் ஊக்குவிப்பு வசதிகள் குறித்து தகவல் வழங்குகின்றது.
- *nordagenda.ch:* சாவ்கவ்சன் பிரதேசத்தின் நிகழ்வுகளுக்கான இணைய- நாட்காட்டி.
- *Blauburgunderland Schaffhausen:* வைன் பற்றிய அனைத்து மற்றும் வைன் *Blauburgunderland* பிரதேசத்தின் நிகழ்ச்சிகள். வாராந்த நிகழ்ச்சி நாட்காட்டி பிரதேசப் பத்திரிகைகளில் இணைப்பாக வெளியிடப்படுகின்றது.

### நூலகங்கள் மற்றும் விளையாட்டுகள் இரவல் பெறும் லூடோதேக்

நூலகங்கள் தகவல்கள் மற்றும் அறிவை வளர்க்க அனைவருக்கும் இலவச நுழைவை வழங்குகின்றது. சாவ்கவ்சன் நகரில் Agnesenschütte நூலகம் மற்றும் Münsterplatz இலுள்ள நகர நூலகம் சாவ்கவ்சனின் பொது நூலகங்களாகும். அது அனைவருக்கும் எவ்வித தடையுமின்றி, அவர்கள் எண்ணங்களைக் கூறவும், சமமான சந்தர்ப்பங்களை வழங்கி சொந்தமாகக் கற்றுக்கொள்வதற்கு, சந்திப்புக்களுக்கு, கருத்துப் பகிர்விற்கு இடத்தை வழங்குகின்றது. Agnesenschütte நூலகம் தற்போதைய, அத்துடன் பல மொழிகளில் அனைத்து வயதினருக்கும் விடயங்கள்- மற்றும் பொழுதுபோக்கு இலக்கியங்களை வழங்குகின்றது. Münsterplatz இலுள்ள நகர நூலகம் முற்கால இலக்கியங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. Hallau, Oberhallau, Neunkirch, Wilchingen, Schleitheim, Neuhausen am Rheinfall, Stein am Rhein மற்றும் Thayngen நகர்களிலும் பொது நூலகங்களை நீங்கள் காணாம். சாவ்கவ்சன் குடும்ப மையம் மற்றும் வை Stein am Rhein இல் மாநில லூடோதெக்கன் உள்ளது. லூடோதெக்கன் விளையாட்டுக்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை இரவலாக வழங்குகின்றது:

# நாளாந்த கொள்வனவுகள்





## கொள்வனவு செய்தல்

சாவ்கவ்சன் பிரதேசம் பன்முகத்தன்மையான கொள்வனவு வசதி-களைக் கொண்டுள்ளது. உணவுப் பொருள் விற்பனை நிலையங்கள், துறைசார் விற்பனை நிலையங்கள், வீட்டுப் பொருள் நிலையங்கள் மற்றும் பெரும் அங்காடிகள் இதயத்தால் விரும்பும் அனைத்தையும் வழங்குகின்றன, நாளாந்த வாழ்விற்குத் தேவையான உற்பத்திப் பொருட்கள் மற்றும் நவீன உடைகள் தொடக்கம் மணிக்கூடுகள், வீட்டுத்தளபாடங்கள் மற்றும் நகைகள் உள்ளன. இன்றும் நல்ல நிலையில் உள்ள ளுவநனை யஅ சுாநனை பழைய நகரம் மற்றும் சாவ்கவ்சன் நகர்களில் வாகன ஓட்டத்துக்கு தடையுள்ளபடியால், மிக அமைதியாகவும் வசதியாகவும் பொருட்களைக் கொள்வனவு செய்துகொள்ள அழைக்கிறது. பல நகரங்கள் தங்கள் இணையத்தளத்தில் இந்த விற்பனை நிலையங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளன. சாவ்கவ்சன் நகரில் பழைய நகர்-கொள்வனவு குறித்த தகவல்களை ீசழ ஊவைல யில் பெற்றுக்கொள்ளலாம்.

**திறந்திருக்கும் நேரங்கள்**

பல விற்பனை நிலையங்கள் வித்தியாசமான நேரங்களில் திறந்திருக்கும்:

பல கடைகள் காலையில் 8.00 தொடக்கம் 9.00 மணிக் இடையாக திறந்து மாலை 18.30 மற்றும் 19.00 மணிக்கு இடையாக பூட்டப்படும். பெரிய வியாபார நிலையங்கள் சில, நீண்ட நேரத்துக்குத் திறந்திருக்கும்.

**விலைகள்**

பொருட்களின் விலைகள் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது கட்டாயமானதாகும் மற்றும் வரிகளும் அதனுடன் சேர்க்கப்பட்டிருக்கும். பணம் செலுத்துவது அதிகமாக பணமாக, EC-Karte அல்லது Postcard Bezahl-App TWINT ஊடாக நடைபெறும் பல விற்பனை நிலையங்கள் வழமையான Kreditkarten களை ஏற்றுக் கொள்கின்றன.

**விவசாயப் பண்ணைகளிலிருந்து நேரடியாக**

வர்ணமயமான வாரச்சந்தை, Hofladen ல் அல்லது Bauernmarkt ல், இங்கு இப் பிரதேசத்தின் புதிதான உற்பத்திப் பொருட்களைக் காணலாம்.

சாவ்கவுசன் வாரச்சந்தை: செவ்வாய் 7.00 - 11.00 மணி மற்றும் சனி 7.00 - 12-00 மணி

- *Schaffuuser Puuremärkt* (சாவ்கவ்சன் விவசாயிகள் சந்தை)
  செவ்வாய் *8.00 - 12.00* மணி, வெள்ளி *9.00 - 17.30* மணி மற்றும் சனி *8.00 - 12.00* மணி,
  *Neuhausermärkt (Neuhauser* சந்தை) வெள்ளி *15.00 - 18.30* மணி வரை
- *Pro City Schaffhausen:* சாவ்கவ்சன் பழையநகரில்-கொள்வனவு குறித்த தகவல்கள்.
- சாவ்கவ்சன் விவசாயிகளின் நேரடி விற்பனை நிலையங்கள்: சாவ்கவ்சன் விவசாயிகளின் நேரடி விற்பனை நிலையங்கள் குறித்த தகவல்கள் மற்றும் முகவரிகள். *Hofladen* மற்றும் *Marktstände* குறித்த வழிகாட்டல்கள்.

## அலுவலகங்கள், தபால் திணைக்களம் மற்றும் வங்கிகள்

மாநிலத்தின் அநேகமான அலுவலகங்கள் சாவ்கவ்சன் நகரிலே-யே அமைந்துள்ளன. பல்வேறு நகர மற்றும் மாநில நிலையங்கள் வித்தியாசமான திறக்கும் நேரத்தைக் கொண்டுள்ளன. உங்கள் நகரசபை அலுவலகத்திலோ அல்லது சாவ்கவ்சன் மாநிலத்தின் இணையத் தளத்திலோ இதுபற்றி அறிந்துகொள்ளலாம்.

தபால் திணைக்களம் தனது சேவையை தபால் அலுவலகங்களிலும், தபால் பிரதிநிதிகள் சேவை அல்லது சிறிய நகரங்களில் வீட்டுச் சேவையாகவும் வழங்குகின்றது. திறந்திருக்கும் நேரங்கள் இடங்களைப் பொறுத்து வித்தியாசப்படும். சாவ்கவ்சன் தொடருந்து நிலையத்திற்கு முன்பாக உள்ள பிரதான தபால் நிலையம் நீண்ட நேரத்திற்குத் திறந்திருக்கும்: திங்கள் - வெள்ளி 7.30 - 18.30 மணிவரை, சனி 8.00 - 16.00 மணிவரை.

சாவ்கவ்சன் மாநிலத்தில் பல்வேறு பிரதேச மற்றும் அனைத்துலக ரீதியில் செயற்படும் வங்கிகள் ஒன்றோ அல்லது பல கிளை-களையோ கொண்டுள்ளன. இவைகள் திறந்திருக்கும் நேரங்கள் வித்தியாசமானவை. சம்பந்தப்பட்ட வங்கிக் கிளைகள் உங்களுக்கு இதுகுறித்த விபரங்களை வழங்கும்.

- சுவிஸ் தபால் திணைக்களம்:
  தபால் திணைக்களத்தின் சேவைகள் மற்றும் விலைகள்.

# அரசியல் வாழ்வு





## ஜனநாயக முறை

சுவிசின் ஜனநாயகம் உங்களை நிலைநிறுத்த மற்றும் பொதுவாழ்வில் பங்கேற்றுக்கொள்ள பல சந்தர்ப்பங்களை வழங்குகின்றது. பிரஜாவுரிமை பெற்றுக்கொள்வதன் மூலம் நீங்கள தேசிய அிலும் அத்துடன் சாவ்கவ்சன் மாநிலத்திலும் உங்கள் நகரத்திலும் அனைத்து அரசியல் உரிமைகளும் பெற்றுக்கொள்வீர்கள். அரசியல் உரிமை, இது மக்கள் உரிமையெனவும் அழைக்கப்படுவது நீண்ட பெறுமதிகளைக் கொண்டது: குரல்கொடுக்கும் உரிமை, வாக்குரிமை, பெரும்பான்மையால் முடிவு செய்யும்உரிமை, சர்வஜன வாக்கெடுப்பு போன்றவை. இதன்படி சட்டத்தை மாற்றும்படியோ (பெரும்பான்மை உரிமை) அல்லது நாடாளுமன்றால் ஆக்கப்பட்ட சட்டத்தை மறுப்பதாகவோ (சர்வஜன வாக்கெடுப்பு) மக்கள் முன்மொழியலாம். சுவிசில் «இறையாண்மை» என்று அழைக்கப்படுவது, இதன்படி மக்களையே குறிக்கின்றது. அரசியல் உரிமை மூன்று அரச மட்டங்களில் பயன்படுத்தப்படுகின்றது: மத்தியம், மாநிலம், நகரம்.

**தேர்தல் மற்றும் தேர்ந்தெடுப்பது**

ஒன்றுசேர்ந்து பிரதிக்கினை எடுத்த, மாநிலங்கள் மற்றும் நகர அரச மன்றங்கள் மற்றும் அதன் பிரதிநிதிகள் நான்கு வருடங்களுக்கு ஒருமுறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தேர்தல்களை விட வாக்குரிமையுள்ள ஆண், பெண் வாக்காளார்கள் சில விடயங்களை முன்மொழிவதற்காக வாக்குச் சாவடிக்கு அழைக்கப்படுவார்கள். பல வருடங்களாக சாவ்கவ்சன் மாநிலம் சுவிசில் மிக அதிகமான வாக்குப் பங்களிப்பை வழமையாகக் கொண்டுள்ளது. இது ஏனென்றால், சாவ்கவ்சன் மாநிலத்தில் கட்டாய வாக்குரிமை அமுலில் உள்ளது. எவராவது வாக்கெடுப்பில் பங்கேற்காது விட்டால், தேர்தல் சட்டப்படி ஒரு «தண்டனையை» செலுத்த வேண்டும், அது ஆறு பிராங்குகளாகும்.

**பகிர்வு**

அரசு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்று (Legislative), அரசு (Exekutive) மற்றும் நீதித்துறை (Judikative). நாடாளுமன்றம் சட்டங்களை இயற்றுவது மற்றும் அரசை மற்றும் நிர்வாகத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது. அரசு, சட்டங்களை செயற்படுத்துவது, நாட்டை ஆள்வது மற்றும் நிர்வகிப்பது. நீதித்துறை தீர்ப்பளிப்பது, நிறைவேற்றுவது, தண்டனையளிப்பது மற்றும் பாதுகாப்பளிப்பது. ஒவ்வொரு பகுதிக்கும் மத்திய, மாநில மற்றும் நகர மட்டங்களில் ஒன்றுடன் ஒன்று பிரிக்கப்பட்ட நிலையில் திணைக்களங்கள் உண்டு.

மத்தியமட்டத்தில் Bundesrat சுவிஸ் அரசை நிறுவுகின்றது. இது நாடாளுமன்றால் தேர்ந்தெடுக்கப்படும். நாடாளுமன்றம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மற்றும் இவை இரு பேரவைகளாக - தேசிய அரசபேரவை மற்றும் மாநில அரசவை - சேர்ந்திருக்கும். சாவ்கவ்சன் மாநிலம் இரு நபர்கள் ஊடாக தேசிய- மற்றும் மாநில அரசவையைப் பிரதிநிதிப்படுத்துகின்றது.

மத்திய உயர் நீதிமன்று நாடாளுமன்றால் தேர்வுசெய்யப்படும். சாவ்கவ்சன் மாநிலம் மற்றும் அதனது நகரங்கள் அதன் அரசுரிமைப் பகிர்வை பின்வருமாறு ஒழுங்குபடுத்தியுள்ளது:

**ஆட்சிமன்று**

மாநிலம்: சட்டங்களை வழங்கும் மாநிலத் திணைக்களம் மாநில அரசவையாகும். இதில் *60* உறுப்பினர்கள் வித்தியாசமான பிரதேசங்கள் மற்றும் கட்சிகளிலிருந்து பிரதிநிதிகளாக இருப்பர். நகரங்கள்: சாவ்கவ்சன் நகரின் ஆட்சிமன்றுபெரிய நகரசபையாகும். சில நகரங்களில் அதாவது *Neuhausen am Rheinfall, Stein am Rhein, Beringen* மற்றும் *Thayngen* ல் இந்த ஒழுங்கு *Einwohnerrat* ஆல் மேற்கொள்ளப்படும். ஏனைய நகரங்களில் அவை நகர ஒருங்கமைப்பு எனப்படும்.

**அரசாட்சி**

மாநிலம்: மாநில அரசு ஐந்து ஆண் மற்றும் பெண் நபர்கள் அடங்கிய ஆளும் நபர்களை ஒன்றாகச் சேர்த்து அமைக்கப்பட்டது, ஒவ்வொருவரும் ஒரு திணைக்களத்துக்குப் பொறுப்பு வகிப்பர். அரசுத் தலைமை வருட சுழற்சியாக ஆளும் நபர்களால் பொறுப்பேற்கப்படும். நகரம்: சாவ்கவ்சன் நகரை ஆளுவது Stadtrat எனும் சபையாகும். Stein am Rhein க்கு இதுபோன்றே ஒரு Stadtrat உள்ளது, ஏனைய அனைத்து நகரங்களிலும் ஆட்சிசெய்யும் திணைக்களமாக Gemeinderat உள்ளது.





**நீதித்துறை**

உயர்நீதிமன்றமே சாவ்கவ்சன் மாநிலத்தின் அதி உயர் நீதிமன்றமாகும். இது பல்வேறு சட்ட விடயங்களில் சட்ட விளக்கம் மற்றும் மாநிலத்தின் சுதந்திரமான நீதித் திணைக்களங்கள் அனைத்தையும் கண்காணிப்பதற்குப் பொறுப்பு வகிக்கும். இவை உதாரணமாக மாநில நீதிமன்றம், மீளப் பெற்றுக்கொள்ளல்- மற்றும் நட்டத்தைப் பராமரிக்கும் திணைக்களம், சமாதான நீதவான் திணைக்களம், வாடகை விடயத்தில் தீர்வை ஏற்படுத்தும் நிலையம், பிள்ளைகள்- மற்றும் பெரியோர் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் பல.

- ► சாவ்கவ்சன் மாநிலம் -திணைக்களங்கள்: மாநிலத்தின் ஆட்சிமன்று, அரசாட்சி மற்றும் நீதித்துறை குறித்த விபரமான தகவல்கள்.
- ► *ch.ch:* சுவிசின் தற்போதைய விடயங்கள் குறித்த விளக்கமான தகவல்கள்.

## வெளிநாட்டு ஆண்கள் மற்றும் பெண்கள் அரசியலில் பங்கேற்பதற்கான சந்தர்ப்பங்கள்

சாவ்கவ்சன் மாநிலத்தில் வெளிநாட்டு ஆண்கள் மற்றும் பெண்கள் மேலே குறிப்பிட்ட அரசியல் உரிமைகளை அனுபவிக்க முடியாது இருப்பினும், பொதுவாழ்வில் பங்குபெறுவதற்கு மற்றும் ஒன்றுசேர்ந்து வாழும் எதிர்கால விடயங்களில் செல்வாக்குச் செலுத்துவதற்கு பல்வேறு மேலதிக சந்தர்ப்பங்கள் உள்ளன. ஒரு வெளிநாட்டு ஆண் அல்லது பெண் எந்த வேளையிலும் ஒரு சுற்றுலாமையம், ஒரு உள்ளூர் அமைப்பு, ஒரு தொழில் அமைப்பு, ஒரு விளையாட்டுக்குழு அல்லது ஒரு ஆலோசனை வழங்கும் மன்றத்தில் சேர்ந்து இயங்கிக் கொள்ளலாம். ஒரு வெளிநாட்டு நபர் ஒரு சுவிஸ் பிரஜையைப் போன்றே மீளாய்வுக்கான உரிமையைக் கொண்டிருப்பார். மீளாய்வுக்கான உரிமை ஒவ்வொருவருக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும், திணைக்களங்களை-, மாநிலங்களை அல்லது மத்திய மட்டத்தில் கேட்க, முன்மொழிய, விமர்சிக்க அல்லது குறைகூற வசதிசெய்கின்றது. இதன்படி அரச மட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு இதில் செல்வாக்குச் செலுத்தும் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

## பிரஜாவுரிமை

பிரஜாவுரிமை பெறுவதன் மூலம் சுவிசில் ஒருவர் அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்கிறார். சுவிஸ் நாட்டுச் சட்டத்தின்படி, சிசில் நீண்ட காலம் வாழும் நபர், இதற்கு விண்ணப்பிக்க முடியும். இது ஒழுங்கு முறைப்படி, ஒரு இலகுவான நடைமுறையாக அல்லது பிரச்சினை எதுவுமற்று பிரஜாவுரியைப் பெற்றுக்கொள்வது, தங்கியிருக்கும் காலம் மற்றும் சுவிசில் தங்கியிருக்கும் காரணம் என்பவற்றிலேயே அதிகம் தங்கியுள்ளது. இலகுவான பிரஜாவுரிமைக்கு (அதிகமாக கணவன் அல்லது மனைவி சுவிஸ் பிரஜையாகவிருந்தால்) இந்த விண்ணப்பத்தை நேரடியாக மத்திய அரசிடம் செய்ய வேண்டும், அவ்வாறு இல்லாவிடின் சாவ்கவ்சன் மாநிலத்தில் அவர்கள் வாழும் நகரில் விண்ணப்பிக்க வேண்டும். பிரஜாவுரிமை பெற விரும்பும் நபர் பின்வரும் நிபந்தனைகளை நிறைவேற்றுபவராக இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது:

- அவர்கள் நகர, மாநில மற்றும் சுவிஸ் நாட்டுப் பழக்க வழக்கங்களுக்கு ஒத்துப்போகின்றவர்களாக இருத்தல்,
- அவர்கள் சுவிஸ் வாழ்க்கைப் பழக்க வழக்கங்களில், பாரம்பரிய மற்றும் கலாச்சாரங்களில் நம்பிக்கையுடையவர்களாக இருத்தல்,
- அவர்கள் சுவிசின் சட்ட ஒழுங்குகளை மதித்தல் மற்றும் சுவிசின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பாதுகாப்பைப் பாதிக்காதவர்களாக இருத்தல்,
- அவர்கள் போதுமான அளவிற்கு டொச் அறிவைக் கொண்டிருத்தல்,
- அவர்கள் தனிப்பட்ட ரீதியில் ஒழுங்கான வருமான நடைமுறை உள்ளவர்களா இருத்தல்,

(சாவ்கவ்சன் மாநில மக்கள் உரிமைச் சட்டவிதி 6ன் படி)

- ► சாவ்கவ்சன் மாநிலம் - நீதி மற்றும் நகரங்களுக்கான திணைக்களம் *(Amt für Justiz und Gemeinden):* பிரஜாவுரிமை நடைமுறை குறித்த தகவல்கள் மற்றும் பொதுமக்கள் உரிமையைப் பெறுவதற்கான பல்வேறு விண்ணப்பப்படிவங்கள்.






## INTEGRES - சாவ்கவ்சன் பிராந்திய ஒத்துழைத்து முன்னேற்றும் துறைசார்பகுதி அதேபோன்று ஒதுக்குதல்களுக்கான பாதுகாப்பு மற்றும் கலாச்சாரங்களுக்கு இடையே எழும் முரண்பாடுகளுக்கான தொடர்பு நிலையம்

நீங்கள் எமது பிரதேசத்தில் வாழ்கின்றீர்கள் மற்றும் தொழில்புரிகின்றீர்கள் அத்துடன் இப்பிரதேசம் குறித்து நன்கு அறிய விரும்புகின்றீர்கள். நாங்கள் எமது மாநிலம் மற்றும் எங்கள் பிரதேசத்தில் உங்களை ஒத்துழைத்து முன்னேற்ற உதவுவோம். எமது குழு அன்றாட வாழ்வில் உங்களுக்கு கேள்விகள் இருந்தால் அல்லது பொருத்தமான பாடத்தைத் தேர்வுசெய்வதற்கு உதவும். சாவ்கவ்சன் மாநிலத்தில் டொச்- மற்றும் ஒத்துழைத்து முன்னேற்றும் பல்வேறு வசதிவாய்ப்புகள் உள்ளன.

**ஆலோசனைப்பகுதி**

- டொச்- மற்றும் ஒத்துழைத்து முன்னேற்றும் பாடங்கள் குறித்த ஆலோசனை
- திணைக்களங்கள், காப்புறுதிகள் அல்லது நிறுவனங்களின் படிவ ங்களை நிரப்புவது மற்றும் கடிதப்போக்குவரத்துக்கு உதவுவது,
- அன்றாடம் எழும் கேள்விகளுக்கான ஆலோசனை மற்றும் பொருத்தமான துறைசார் நிலையங்களுடன் தொடர்பை ஏற்படுத்தல்,
- இனவெறி, ஒதுக்குதல்கள் மற்றும் கலாச்சாரங்களுக்கு இடையான முரண்பாடுகளுக்கான ஆலோசனை,
- புதிதாக வருபவர்களுக்கான முதல் தகவல்கள்

**செலவு** ஆலோசனை இலவசமானது

**திறந்திருக்கும் நேரங்கள்**

முற்பதிவு இல்லாமல் வருகைதர பின்வரும் திறந்திருக்கும் நேரங்கள்:
திங்கட்கிழமை மற்றும் புதன்கிழமை: 9.00-11.00 / 14.00 – 17.00 மணி
செவ்வாய்கிழமை: மூடப்பட்டிருக்கும்
வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை: 14.00 – 17.00 மணி
திறந்திருக்கும் நேரங்களுக்கு வெளியால்: ஒரு குறிப்பிட்ட தவணையை ஏற்படுத்தவும்.

**இடம்**

Integres
Integrationsfachstelle für die Region Schaffhausen
Krebsbachstrasse 61
8200 Schaffhausen

**தொடர்பு**

தொலைபேசி: 052 624 88 67
மின்னஞ்சல்: info@integres.ch

### வரலாறு

Integres எனும் திறன் மையம் ஒத்துழைத்து முன்னேறும் கேள்விகளுக்காக 2004 கோடைகாலத்தில் நிறுவப்பட்டது. இருப்பினும் ஒத்துழைத்து முன்னேறும் துறைசார்நிலையம் மிகத் தெளிவாக நீண்டகால அனுபவங்களை திரும்பிப்பார்க்க முடியும். ஏற்கனவே 1972 ஆம் ஆண்டிலேயே சிவில் சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியலில் இருந்து சுவிஸ்-வெளிநாட்டினருக்காக ஒரு தொடர்பு நிலையத்தை நிறுவியது, இதன் நோக்கமாக வெளிநாட்டு மக்களை ஒத்துழைத்து முன்னேற்றுவதில் உதவுவது மற்றும் கலாச்சார பரிமாற்றத்தை மேம்படுத்துவதுமாகும். தொடர்ந்து வந்து ஆண்டுகளில், புலம்பெயர்ந்த மக்களுக்கும் அவர்களின் புதிய தாயகத்துக்கும் இடையிலான மிக முக்கியமான இணைப்புகளில் ஒன்றாக தொடர்புப் புள்ளி உருவானது. உதவிகள் பெரும்பாலும் அன்றாட வாழ்வை நோக்கியதாக இருந்தது, உதாராக ஆலோசனை பெறுபவர்கள் திணைக்களப் படிவங்களை சரியான முறையில் நிரப்புவதற்கு அல்லது ஒரு வைத்திய தவணையை ஏற்படுத்துவதற்கு ஆதரிக்கப்பட்டனர். இன்று Integres முன்பு போன்றே ஆலோசனைகளை வழங்குகின்றது. ஆனால் முதன்மையான ஒரு மையமாகத் திகழ்வதுடன் சிறப்பான துறையாக, கட்டமைப்பு ரீதியாக ஒத்துழைத்து முன்னேற்றுவதில் வெற்றிகரமாகச் செயலாற்ற உறுதிபூண்டுள்ளது.

